
# கன்னி பூமி



நா. சி இராமசுவாமி - எழுத்தாளர்

# கன்னிபூமி

நா. சி. இராமசுவாமி

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை

வெளியிடுவோர் :

அகில உலகத்
தமிழ் எழுத்தாளர் மன்றம்
15, பிள்ளையார் கோயில் தெரு,
தென் தேனும்பேட்டை,
சென்னை—18.

முதல் பதிப்பு: (ஏவிளம்பி-ஆவணி)
செப்டம்பர் 1957

உரிமை: எழுத்தாளருக்கு

விலை: ரூபாய் ஒன்று

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 748
நன்கொடை எண்: 748

காணிக்கை

தாய் நாட்டின் சேவைக்காகத் தன் உடல், பொருள், ஆவி மூன்றையும் அளித்த, அளிக்க இருக்கும் தியாகிகளுக்கும், ஞானிகளுக்கும் இந்நூல் அன்புக் காணிக்கை.

நா. சி. இராமசுவாமி
எழுத்தாளர்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்,
தமிழியல்துறை.

சென்னை, பி. என். பிரசில், அச்சிடப்பெற்றது.

# நூல் முகம்

செந்தமிழ் நாட்டில் மக்கள் சமுதாயத்தை, (கிராம ஆட்சியை), நிலைநாட்ட எழுந்த கற்பனைக் கதை, இந்நூல். இதில் தோன்றும் பெயர்களும், சம்பவங்களும், யாரையும் குறிப்பிடுவன அல்ல. மக்கள் எல்லோரும் வலியும் வனப்பும் பெற்று, அன்பும் அறிவும் ஆற்றலும் நிறைந்து, நாட்டுப்பற்றும் நன்மொழிப்பற்றும் கொண்டு நீங்காத செல்வத்துடன் வாழ்வதற்காகவே இந்நூல் ஆக்கம். தமிழ் நாட்டை 'கன்னி நாடு' என்று குறிப்பிடும் ஓர் வழக்கம் இருப்பதால், இந்நூலுக்கு 'கன்னி பூமி' என்று பெயர் இடப்பட்டிருக்கிறது. கதை அமைப்பில் கட்டுரைகளும் இணைக்கப்பட்டிருப்பதால் கதையின் ஓட்டம் சற்று தடைப்படலாம். இது ஓர் புது முயற்சி ஆகும். அன்பர்கள் குற்றத்தை நீக்கிக் குணத்தையே எடுத்துக்கொள்ள வேண்டிக்கொள்கிறேன். இந்நூலுக்கு முகஉரை எழுதப்படவில்லை. வாசகர்களுக்கே இதனை விடப்பட்டிருக்கிறது.

நிற்க, தமிழ் அன்பர்களின் கவனத்திற்கு ஒன்று இரண்டு வார்த்தைகள்.

தெய்வத் தமிழ்மொழி 'வளரவேண்டும், வளம் பெறவேண்டும்,' என்று எங்கும் பேசப்படுகின்றன. இதற்காகப் பல பரிசுத் திட்டங்கள் நடத்துகின்றனர். காலம் சென்ற எழுத்தாளர்களின் நூல்கள், பழைய நூல்கள், மொழி ஆக்க நூல்கள், சில குறிப்பிட்ட எழுத்தாளர்களின் நூல்கள், இவற்றை 'மலிவுப் பதிப்பு' என்ற தலைப்பில் வெளியிடுகின்றனர். இவற்றால் மட்டும் மொழி வளர்ச்சி அடையா.

விஞ்ஞானம் வளர்வதுபோன்று மொழியும் இயற்கையாகவே வளம் அடைகின்றது. அதனை நன்கு வளர்க்க வேண்டிய கடமை மக்களைச் சார்ந்தது. வாழைக்கன்றைப்பாதுகாக்காது வாழையை மட்டும் கவனித்தால், அது குறிப்பிட்ட காலத்திற்குப் பலன் தந்து பின் அழிந்து விடுகின்றது. அதுபோன்றுதான் ஒரு சில எழுத்தாளர்களின் நூல்களை மட்டும் ஆதரிப்பதால் ஏற்படும் நிலையும்.

ஆகவே, எழுத்தாளர்கள் எல்லோருடைய நூல்களையும் எளிதில் வெளியிட வசதிகள் செய்வது மக்கள் ஆட்சிக்கு மிக்க நன்மை ஏற்படும்.

மக்களிடையே புதிய கருத்துக்கள் தோன்றப் புத்தப்புதிய நூல்கள் தேவை. அப்பொழுதுதான் மொழி வளரும், நாடு செழிக்கும், மக்கள் வாழ்வர், அரசாங்கம் நன்முறையில் இயங்கும். மக்கள் எண்ணங்களால் ஆக்கப்பட்டவர் நம் நாட்டில் பொது மக்களிடைப் புத்தகம் வாங்கிப்படிக்கும் பழக்கம் அதிகரிக்கச் செய்யவும், கல்வி அறிவை விருத்தி செய்யவும் விரும்பும் அரசாங்கம், இவற்றில் அதிக கவனம் செலுத்தக் கடமைப்பட்டதாகும். 'படிப்பே ஓர் யோகம்', என்று பகவத் கீதை கூறுகின்றது.

அகில உலகத் தமிழ் எழுத்தாளர் மன்றம், சிறப்பாகத் தமிழ் மக்கள் எல்லோருடைய நலனுக்கும் ஆக்கத்திற்கும், பொதுவாக அகில உலகிற்கும், உழைப்பதற்காகவே தோன்றியிருக்கின்றது. எழுத்தாள நண்பர்களின் போதுமான ஒத்துழைப்பு கிடைக்காததால் இதனைத் தனிப்பட்ட நிலையமாகத் தோற்றிவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. நாட்டுப் பற்றும் நன் மொழிப்பற்றும் கொண்ட தமிழ் அன்பர்கள் முன்வருவார்களானால், இந் நிலையத்தை விரைவில் கம்பெனிச் சட்டப்படி மக்கள் நிலையமாகப் பதிவுசெய்து, நவீன முறையில் அச்சகம் ஏற்படுத்தி, வாரப் பத்திரிகைகள் நடத்தலாம், நவநவமான புத்தகங்களை வெளியிடலாம், நூற்றுக்கணக்கான விற்பனை நிலையங்களைத் தோற்றி வைக்கலாம், தெய்வத்தமிழ்மொழி உலகம் எங்கும் பரவ, வேண்டும் வழிவகைகள் செய்யலாம். இதனால் பங்குதாரர்களுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கின்றது. தாய் நாட்டிற்கும், தாய்மொழிக்கும் செய்யும் சேவை இதைவிட உயர்ந்தது வேறு இல்லை என்று சொல்வது மிகையாகாது.

சென்னை,
ஆவணி 22. ஏவிளம்பி,
7—9—1957

நா. சி. இராமசுவாமி,
எழுத்தாளர்.

அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை.

# கன்னி பூமி

## 1

சித்தர்களும், ஞானிகளும் தோன்றிய இப் புண்ணிய பூமியில் எண்ணற்றவர் படும் இன்னல்கள் எல்லையற்றவை. இதில் எமனுடன் போராடிக் கொண்டிருந்த ஒரு தாயின் சோக நிலையும் ஒன்று.

இவ் அம்மையாரின் கணவர் இறந்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன. ஒரு பெண் குழந்தை மட்டும் பெயர் சொல்வதற்கு இருக்கின்றது. ஆனல் ஆதரவற்ற இப்பெண்ணை "இனியார் காப்பாற்றப் போகின்ருர்!" என்று ஏங்கினது தாய் மனம். என் செய்வாள்? எலும்பும் தோலுமாய்ப் படுத்த படுக்கையில் கிடக்கும் இத்தாய், தன் சகோதரியின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனள். அந்த அம்மாளும் வந்து விட்டாள்.

சூரிய தேவன் மேலை மலையில் மறைந்து விட்டான். காரிருள் உலகத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சூழ்ந்து கொண்டிருந்தது. இத்தருணத்தில் "செண்பகம்! இதோ உன் குழந்தை, கமலம்" என்று மனம் உருகிச் சொல்லி முடிப்பதற்குள் அத்தாயின் நாக்கு உள்ளே இழுத்துக்கொண்டது. அந்தத் தியாக தீபம் அணைந்துவிட்டது. ஆதரவற்ற குழந்தை கமலத்திற்கு அவளது சித்தி செண்பகம் தான் இனி கதி.

செண்பகத்தின் கணவர் சுந்தரம் ஓர் கம்பெனியில் வேலை செய்து வந்தார். அவருக்கு மாதம் அறுபது ரூபாய் சம்பளம் கிடைத்து வந்தது. அவர் உயர்ந்த கல்லூரிப் பட்டம் பெற்றும் படிப்பிற்கு

ஏற்ற உத்தியோகத்தை நாடி அலைந்தார். தபாலுக்கே தினம் தினம் நான்கு ஐந்து ரூபாய் செலவழித்திருப்பார். அவர் செல்லாத இடம் இல்லை. எல்லாம் பாறையில் விதைத்த விதை போன்று ஆயிற்று. அவரது அன்றாடச் செலவிற்குத் தன் முன்னோர்கள் தேடிவைத்த நிலங்களை விற்றுக் காலம் கடத்த நேரிட்டது. கடைசியில் தெய்வாதீனமாக முன் குறிப்பிட்ட கம்பெனியில் வேலை கிடைத்தது. அதுவும் நிரந்தரமானது அல்ல. வருடங்கள் இரண்டு மூன்று ஓடி மறைந்தன.

இத் தருணத்தில் தான் கமலத்தின் தயார் இறந்தது. இதனால் அவளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு செண்பகத்திற்கும் அவளது கணவர் சுந்தரத்திற்கும் ஏற்பட்டது. இருவரும் தாய் தந்தையற்ற குழந்தை கமலத்தை அன்புடன் வளர்த்து வந்தனர்.

கமலம் பெயருக்கு ஏற்றாற்போல் அழகுடன் திருமகள் நிகரென விளங்கினாள் அவளது உருக்கிய தங்க மேனியும், கயல் போன்ற கண்களும், சந்திரனைப் பழிக்கும் முகமும் கண்டோர் இதயத்தைக் கொள்ளை கொள்ளும். அவளது மழலைச் சொற்களைக் கேட்க ஆரம்பித்தால், ஏழிசைப் பயனையும் அனுபவிக்கலாம்.

சுந்தரம் தன் வாழ்க்கையில் ஏற்பட்ட இன்னல்களை இக் குழந்தையினால் மறந்து ஒருவாறு மனோ அமைதியும் அடைந்து வந்தார். மேலும் கமலம் அவரது இல்லத்திற்கு வந்தது முதல் அவரது உத்தியோகத்தில் உயர்வும் கிடைத்து வந்தது. இதனால் அவருக்கு கமலத்தினிடம் பற்றுதல் அதிகம் இருந்தது.

ஐந்தாவது வயதில் கமலம் பள்ளிக் கூடத்தில் சேர்க்கப் பட்டாள். அது கிருஸ்துவ மடத்திற்குச் சொந்தமானது. அதன் தலைமை ஆசிரியர் சுந்தரத்தின் பள்ளிக்கூடத் தோழர். அவளுக்குப் பள்ளிக்

கூடச் சம்பளமும் இல்லை. அவள்வகுப்பில் முதன்மையாகவே இருந்து வந்தனள். ஐந்து ஆண்டுகள் கழிந்தன. இப்பொழுது கமலம் எட்டாவது வகுப்பு படிக்கின்றாள்.

இலை உதிர் காலத்தை அடுத்து இளவேனிற் காலம் தோன்றுகின்றது. வாழ்க்கையில் அவதிப்பட்ட சுந்தரத்திற்கும் நல்ல காலம் உதயமாகி விட்டது. அவரை மலேயாவில் ஓர் ரப்பர் தொழிற்சாலையின் நிர்வாகியாக நியமித்திருக்கின்றனர். மாதம் ரூ. 1000–சம்பளம் கிடைக்கும். அவர் வேலையிலிருந்து உடனே விலகிப் புறப்படத் தயாரானார். அவரது நண்பர் மூலம் கமலத்தைப் பாளையங்கோட்டைக் கிருஸ்துவ மடாலயத்தாரின் பெண்கள் விடுதியில் சேர்த்து விட்டார். அவளுக்கு ஏற்படும் செலவு எல்லாம் மடாலயத்தார் இலவசமாக ஏற்றுக்கொள்ள முன் வந்தனர்.

சுந்தரம் தன் செல்வியைக் கிருஸ்துவ மடத்தில் சேர்க்க முதலில் அஞ்சினார். அவளைத் தன்னுடன் மலேயா அழைத்துச் செல்வதில் 'சிறு பெண்ணாயிற்றே, தேக அசௌக்கியம் ஏற்படுமே' என்று நினைத்தார். முதலில் தனியாகவே மலேயாவிற்குப் போய் வேலையை ஒப்புக்கொண்டு, பின் அங்கு இருக்கும் நிலையை உணர்ந்து தன் மனைவியையும் கமலத்தையும் அழைத்துச் செல்வது நல்லது என்ற எண்ணமும் இருந்தது. ஆனால் தனியாகப் புறப்படுவதில் பல இன்னல்கள் இருக்கக் கண்டார். கடைசியில் அவர் ஒரு பொறுப்புள்ள பெண்கள் விடுதியில் அவளைச் சேர்ப்பதே மேல் என முடிவு செய்தார்.

சுந்தரத்தின் நண்பராகிய கமலத்தின் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியரும் அதே மடாலயத்தின் கீழ் வேலை செய்பவர். அவரும் அவளைக் கவனித்துக் கொள்வதாக வாக்களித்தார். அவர் கல்லூரியில் படிக்கும் பொழுது சுந்தரம் பலவகையில்

அவருக்கு உதவி செய்திருக்கிறார். அந்த நன்றியை இன்றும் அவர் மறக்கவில்லை.

நம் நாட்டில் கோயில்களுக்கும் மடங்களுக்கும் ஏராளமாகச் செல்வங்கள் இருக்கின்றன. திக்கற்ற குழந்தைகளைப் பாதுகாக்கவும், நாட்டில் கல்வியைப் பரப்பவும் அவைகள் வேலை செய்யவில்லை. இன்று அவைகள் நாட்டில் உலகாயுதத்தையும் அசுரத் தன்மையையும் வளர்க்கும் பண்ணையாய் அமைந்து விட்டன. கோயில் பணம் பெரும்பாலும் வீண் விரையம் செய்யப்படுகின்றது ஒரு குறிப்பிட்ட இனத்தினர் கோயில் சொத்தெல்லாம் தங்கள் உடைமை எனக்கொண்டு ஆங்கிலப் பட்டமும், பதவியும் பெற்றுச் சமூகத் துரோகிகளாக மாறி விட்டனர். இதனால் தமிழ் நாட்டின் பெருமையும் மேன்மையும் அழிந்துவிட்டது.

அனேக ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து கிருஸ்துவப் பாதிரிகள் இந்நாட்டிற்கு வந்து கலாசாலைகளும், கல்லூரிகளும், மருத்துவச் சாலைகளும் தோற்றிவைக்கின்றனர். ஆனால் நம் நாட்டில் இறைவனின் உறைவிடம் எனக் கூறும் அற நிலையங்களும், கோயில்களும் இப்பணியை ஆற்ற முன் வரவில்லை. இதை நினைத்துச் சுந்தரம் கண்ணீர் விட்டார்.

கமலம் கிருஸ்துவ மடாலயத்தாரின் பெண்கள் விடுதியில் சேர்ந்த மறுநாளே சுந்தரம் தன் மனைவியுடன் தாய்நாட்டை விட்டுக் கடல் மார்க்கமாக மலேயாவிற்குப் பயணமானார். செண்பகா தேவியின் கண்ணீர் நீலக் கடலில் தோன்றும் அலைகளின் மோதலால் ஏற்படும் நீர்த்துளிகளுடன் கலந்து கொண்டிருந்தன.

கமலம் கிருஸ்துவப் பெண்கள் விடுதியில் சேர்ந்த சில மாதங்களுக்குள் அம்மதத்தில் மாற்றப் பட்டாள். இப்பொழுது அவளது பெயர் " கன்னி மாரா". கமலம் ஒவ்வொரு வகுப்பிலும் முதன்மையாகவே இருந்து, பி.ஏ. பட்டமும் பெற்றாள்.

கமலம் கல்லூரியில் படிக்கும்பொழுதும் படிப்பு முடிந்த பின்னும் கிருஸ்துவ மடாலயத்தார் அவளை இதர பிரசாரகர்ளுடன் வெளி இடங்களுக்கு அனுப்பி அம்மதத்தைப் பரப்பி வந்தனர். ஆனால் அவளது மனம் தான் ஏதோ அநீதி செய்வதாகப் படம் பிடித்துக் கொண்டிருந்தது.

கமலம் ஓய்வு நேரங்களில் சைவ, வைணவ சித்தாந்தங்களைப் பற்றியும் ஆராய்ந்து வந்தனள். பல தமிழ் இலக்கியங்களைப் படித்ததால் அவளுக்கு அதில் வல்லமையும் ஏற்பட்டது.

பாதிரி இலெப்போ நெல்லை ஜில்லா கிருஸ்துவ மடப் பிரதான குருவாக இருந்தார். அவரிடம் கல்வி கற்ற டாக்டர் விக்டர் ஒரு பிரபல மருத்துவனாக இருந்து வந்தான். அவன் நெல்லை ஜில்லா மருத்துவ அதிகாரியாகவும் இருந்தான்.

டாக்டர் விக்டர் கமலத்தைக் காதலித்தான். அவள் அதற்கு உடன் படவில்லை. அதனால் அவளைக் கல்யாணம் செய்ய பாதிரி இலெப்போ மூலம் திட்டமிட்டான். இதற்காக கிருஸ்துவ மதப் பிரசாரத்திற்கு ரூ. 50,000 நன்கொடை தருவதாயும் தனது விருப்பத்தை நிறைவேற்ற உதவிதர அவரிடம் வேண்டிக்கொண்டான். பாதிரியாரும் இதற்குச் சம்மதித்தார்.

அன்று சனிக்கிழமை, மாலை நான்குமணி இருக்கும். நீலவானத்தில் பொன்மயமான கிரணங்களைப் பரப்பிக் கொண்டு கதிரவன் தன் ஆட்சியிலிருந்து ஓய்வு பெறும் நேரம். கமலத்தின் அறைக்குப் பாதிரியார் இலெப்போவும், டாக்டர் விக்டரும் வந்தனர். அவர்களுடன் இரு உபாத்தியாயினிகளும் வந்திருந்தனர். அந்நேரத்தில் கமலம் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து ஜான் பண்ணியன் எழுதிய ஆங்கில நாவலைப் படித்துக் கொண்டிருந்தாள்.

பாதிரியாரைக் கண்டதும் கமலம் எழுந்து வணக்கம் செய்தாள். அவர் தான் வந்திருக்கும் காரணத்தைச் சொன்னார். டாக்டர் விக்டரின் குணதிசயங்கள், அறிவு, பதவி, செல்வம், முதலிய வற்றைப் புகழ்ந்து அவனைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டினார். இதனால் அவளுக்குப் பல நன்மைகள் ஏற்படும் என்றும் கூறினார்.

கமலம் ஒன்றும் சொல்லவில்லை. அவர் கூறு வதை மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தாள். கடைசியில் அவள் தான் கல்யாணம் செய்யப் பிரியப்படவில்லை என்றும், கன்னியாகவே இருக்க விரும்புவதாயும் பதில் கூறினாள். மேலும் அவள் இரண்டு மாதங்களுக்குள் தன் முடிவான அபிப் பிராயத்தைச் சொல்வதாகவும் அவரிடம் வணக்கத் துடன் கேட்டுக்கொண்டாள்.

இதற்குமேல் பாதிரியார் ஒன்றும் கூற முடிய வில்லை. டாக்டர் விக்டருக்கு ஆறுதல் கூறினார். பின், அவசர வேலை நிமித்தமாக விடைபெற்றுச் சென்றுவிட்டார்.

டாக்டர் விக்டரும் கமலத்தைத் தன் விருப்பத் திற்கு இணங்க அன்புடன் வேண்டினன். வந்திருக் கும் உபாத்தியாயினிகளும் அவளிடம் விக்டரின் குணங்களைப் புகழ்ந்தனர். அவனைக் கல்யாணம் செய்துகொள்ள சம்மதிக்க வேண்டிக் கொண்ட னர். இவர்கள் கமலத்தை நன்கு அறிவர். கமலம் இவர்களின் வகுப்பு மாணவியாக இருந்திருக் கிறாள்.

கமலம், பாதிரியாரிடம் கூறியது போல, இவர் களிடமும் சொன்னாள். இரண்டு மாதங்களுக்குள் தன் முடிவைத் தெரிவிப்பதாகவும் வாக்களித்தாள். எல்லோரும் அவளுக்கு வந்தனம் செய்துவிட்டு வெளிச் சென்றனர்.

கமலம், சாய்வு நாற்காலியில் சாய்ந்தவண்ணம் சோகமே உருவெடுத்தவளானாள். இனி தன்

வாழ்க்கை வீணுகப் போய்விடுமோ என்று ஏங்கிஞள். அவளது கண்களிலிருந்து சூடான உவர்நீர் ஊற்றெடுத்து அவளது கன்னங்களின் வழியாய்த் தாரை தாரையாக வழிந்து கொண்டிருந்தது. அவள் தேம்பித் தேம்பி அழலாஞள். பெற்ளூரை நினைத்தாள்; சித்தி, சித்தப்பாவைச் சிந்தித்தாள்; அவளது தோழி கோமதியையும் நினைத்தாள். அவளது பழைய சம்பவங்கள் ஒவ்வொன்ருகத் தோன்றி மறைந்து கொண்டிருந்தன.

அவளது சித்தி, சித்தப்பாவிடமிருந்து பல ஆண்டுகள் ஆகியும் கடிதங்கள் கிடைக்கவில்லை. அவர்களைப் பற்றிய விபரம் ஒன்றும் தெரியவில்லை. அவர்கள் சென்றதும் ஒன்று இரண்டு ஆண்டுகளுக்குள் உலக யுத்தம் மூண்டுவிட்டது; போக்கு வரவும் நின்று விட்டது; ஆதலால் அஞதையான தன்னை அவர்கள் வந்து பார்க்கப் போகின்ருர்களா, ஆறுதல் கூறப் போகின்ருர்களா, என்று நினைத்தாள். அது அவளது உள்ளத்தில் வெந்த புண்ணில் வேல் பாய்வது போன்று இருந்தது. அவளது உள்ளம் துடித்தது. 'ஓ' என்று தன்னை யறியாமல் கதறி விட்டாள்.

இங்நிலையில் யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்கவே கைக்குட்டையிஞல் முகத்தைத் துடைத்து ஓர் உயிரற்ற ஓவியம்போல் நாற்காலியில் படுத்திருந்தாள். அப்பொழுது அவளது நாடிகள் அடங்கி விட்டன. உலகமே ஒடுங்கிவிட்டது போன்று தோன்றிற்று.

அந்நேரத்தில் கமலத்தின் தோழி, கோமதி அவளைக் காண வந்து கொணடிருந்தாள்.

கதவு அருகில் வந்ததும், "கமலம்" என்று கூப்பிட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தாள். அவளது சோபையற்ற முகத்தைக் கண்டு "ஏன் கமலம் முகம் வாடி யிருக்கிறது; கண்கள் கலங்கியிருக்கின்றதே! என்ன நடந்தது?" என்று அவளது

அருகில் சென்று உட்கார்ந்து அவளது கன்னத்தைத் தடவலானாள்.

கமலத்திற்கோ பேச நா எழவில்லை. கண்ணீர் மலைவீழ் அருவி போன்று விழுந்து கொண்டிருந்தது. அவளது எண்ண அலைகள் அவளது கண்ணீர்த் துளிகளில் மறைந்து கொண்டிருந்தன.

கோமதி தன் கைக் குட்டையினால் அவளது முகத்தைத் துடைத்து "கமலம் என்ன நடந்தது? ஏன் அழுகிறாய்? என்னிடம் சொல்லக் கூடாதா? நீ அழுவதால் எனக்கும் அழுகை வருகிறது" என்று அவளது முகவாய்க் கட்டைப் பிடித்துக் கெஞ்சினாள்.

"கோமதி, உன்னைத்தான் எதிர்பார்த்தேன், பரீட்சையின் கடைசி தினம் ஆயிற்றே; முடிந்ததும் என்னிடம் சொல்லாமல் ஊருக்குப் போய் விட்டாயோ என்று எண்ணினேன்."

"உன்னிடம் சொல்லாமல் எப்படிப் போக முடியும்? அது இருக்கட்டும், நீ ஏன் அழுகிறாய்?"

"ஒன்றும் இல்லை கோமதி. என் அப்பா, அம்மாவின் நினைப்பு வந்தது. சித்தியும் சித்தப்பாவும் என்னை மறந்து விட்டார்கள். அழுகை வந்துவிட்டது."

"கோமதி, நான் ஓர் அபலை. நீ வருவதற்குச் சில நிமிடங்களுக்கு முன் தலைமைப் பாதிரியார் இங்கு வந்தார். டாக்டர் விக்டரும் வந்திருந்தார்."

"ஏன் கமலம் அவர்கள் உன் அறைக்கு வந்தது?"

"டாக்டர் விக்டரைக் கல்யாணம் செய்து கொள்ளச் சிபாரிசு செய்ய வந்தார் பாதிரியார்."

"அதற்கு நீ என்ன சொன்னாய்? உடன்பட்டு விட்டாயா!"

"இல்லை கோமதி. நான் கன்னியாக இருக்க விரும்புவதாகவும், இரண்டு மாதங்களுக்குள் எனது

முடிவான கருத்தைக் கூறுவதாகவும் சொன்னேன். எனக்கோ நிம்மதி இல்லை. என் தலையில் சுமக்க முடியாத பாரம் இருப்பது போன்று தோன்றுகின்றது; என் செய்வேன்.”

“இதற்காகவா வருந்துகிறாய்! உனக்குப் பிரியம் இல்லை என்றால் அவர்களால் என்ன செய்ய முடியும்?”

“இம் மடாலயத்தில் இருக்கும் நான் எவ்வாறு தலைமைப் பாதிரியாரின் சொல்லை நிராகரிக்க முடியும்? வேறு எங்கே செல்ல முடியும்?”

“கமலம், உனக்கோ இந்த மார்க்கத்தில் பிரியம் இல்லை. என்னுடன் ஊருக்கு வந்துவிடு. மடாலயத்திற்குச் சேரவேண்டிய தொகைக்கு நானே பொறுப்பு. நீ ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம்.”

“உனக்கு இந்த வீண் வம்பு ஒன்றும் வேண்டாம். ஓர் உபாத்தியாயினியாய் இருந்து அதில் கிடைக்கும் வருவாயில் அதைக் கொடுத்து விடுவேன்.”

“கமலம், என்னுடன் பழகினது இதற்குத் தானா? நான் உன்னை எப்படி மறக்க முடியும்? என் அப்பா பெரிய பணக்காரர், கொடை வள்ளல். ஒன்றுக்கும் கலங்க வேண்டாம், என்னுடன் வந்துவிடு.”

“உங்கள் வீட்டில் எல்லோரும் உயர்ந்த ஆசாரம் உள்ளவர்கள். ஒரு கிறிஸ்துவப் பெண்ணைக் கண்டதும் வெறுப்பு ஏற்படும். உனக்கும் வசை கிடைக்கும்.”

“கமலம், நீ என் உயிரினும் இனிய தோழி. நீ கிருஸ்தவப் பெண்ணாக நான் கருதவில்லை. என் குலத்தில் ஒருவளாகவே கருதுகிறேன். என் பெற்றோர்களும் அவ்வாறுதான் நினைப்பர். உனக்கு ஒரு குறையும் வராது” என்று அவளது கையைப்

பிடித்து இழுத்தாள் கோமதி. கடைசியில் கமலம் ஒருவாறு சம்மதித்தாள். தலைமைப் பாதிரியாரிடமும், பதினைந்து நாட்கள் அனுமதியும் கிடைத்தது.

கோமதி, புத்தூர் பண்ணையார், வள்ளல் இராமலிங்கரின் மகள். கமலமும் கோமதியும் நான்காவது பாரத்திலிருந்து தொடர்ந்து அதே கலாசாலையில் படித்து வந்தனர்; பண்ணும் ஓசையும்போல் பழகி வந்தனர் பத்தாவது வகுப்பில் கோமதி தேர்ச்சிபெறவில்லை. இதனால் கமலம் ஒருவருடம் கல்லூரிப் படிப்பில் முந்திக் கொண்டாள். எனினும் இருவர்களும் கல்லூரி நேரம் தவிர மற்ற நேரங்களில் இணை பிரியாதவராய் இருந்து வந்தனர். கோமதிக்கோ கமலத்தின்மீது அளவுகடந்த அன்பு இருந்து வந்தது. தாய் தந்தையற்ற அனாதையாக இருக்கும் கமலத்தை நினைக்கும் பொழுது அவளுக்கு அழுகை வந்துவிடும். கமலத்தின் மோகன ரூபமும், வெள்ளை உள்ளமும் அவளைக் காந்தம் போன்று இழுத்துவந்தன. கோடை விடுமுறையில் தன்னுடன் கமலத்தை ஊருக்கு அழைத்துச் செல்ல இதற்குமுன் எத்தனை தடவையோ முயற்சி செய்திருக்கிறாள். அது இன்றுதான் வெற்றி பெற்றது.

டாக்டர் விக்டரும் கிருஸ்துவக் கல்லூரி உபாத்தியாயினிகளாகிய லில்லி, ரோஸ் என்ற அவ் இரு பெண்களும் கமலத்தின் அறையிலிருந்து வெளி வந்ததும், அங்கு நின்று கொண்டிருந்த காரில் ஏறிக் கொண்டனர். காரும் நகர்ந்தது.

"ஏன் டாக்டர் கமலத்தின்மீது இவ்வளவு ஆசை? அவளுக்கு உங்களிடம் பிரியம் இல்லை. உங்களுக்கு ஏன் இந்த எண்ணம்?" என்றாள் லில்லி. விக்டருக்கோ என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை.

காரும் விக்டரின் பங்களாவை அடைந்ததும் எல்லோரும் பங்களாவிற்குள் சென்றனர். அப்

பொழுது ரோசைத் தேடி வில்லியமும் அங்கு வந்தான். வில்லியம் ஓர் ஆங்கிலக் கம்பெனியின் நிர்வாகி. மாதம் ஆயிரம் ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்குகிறான்.

மாளிகையின் வெளியில் வட்டமேசையைச் சுற்றி நாற்காலிகள் போடப் பட்டன. எல்லோரும் உட்கார்ந்தனர். சிற்றுண்டியும், காப்பியும்கொண்டு வரப்பட்டன. எல்லோரும் சாப்பிட்டனர். புகை பிடித்துக்கொண்டு பேசிக் கொண்டிருந்தனர். பின் ரோசும் வில்லியமும் விடைபெற்று வெளிக் கிளம்பினர். இருவர்களும் நெல்லை செல்லும் சாலையில் ஆனந்தமாகப் பேசிக்கொண்டு நடக்கலானார்கள்.

சூரியதேவன் மேலை மலையில் மறைந்து விட்டான். இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. நகர வீதியில் நட்சத்திரங்கள் பவனி வருவது போல் மின்சார விளக்குகள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. ஒரு கோடியிலிருந்து நீண்ட சாலையை நோக்கின் பார்ப்பதற்கு மிக்க ரம்மியமாக இருக்கும். சாலையின் இருபுறங்களிலும் தோன்றிக் கொண்டிருக்கும் இவ்விளக்குகள் வில்லியத்தையும் ரோசையும் வரவேற்பது போன்று காட்சி அளித்தன.

சாலையின் இருபுறங்களிலும் வானுர உயர்ந்து வளர்ந்த மரங்களின் கிளைகள் ஒன்று சேர்வதால் இந்த அகண்ட சாலைக்குப் பந்தல் போட்டது போன்று இருந்தன. இரு புறங்களிலும் பச்சைப் பசேலென்று உழுந்துச் செடிகள் நஞ்செய்களில் அடர்த்தியாக வளர்ந்து இருந்தன; ஊடே ஊடே வாழைத் தோட்டங்களும், கரும்புத் தோட்டங்களும் இருந்தன. வாய்க்கால்களில் நீர் குறைவாக ஓடிக் கொண்டிருந்தது. சென்ற இரண்டு மூன்று நாட்களாக பெய்த மழையால் குளத்திற்குத் தண்ணீர் வந்திருந்தது, பூமியும் குளிர்ந்து விட்டது, கோடை வெப்பத்தால் தாங்க முடியா இன்னல்கள் அடைந்த மக்களின் கவலையைப் போக்கி, குளிர்ந்த தென்றல் காற்றும் தாலாட்டிக் கொண்டிருந்தது.

மாலைப் பொழுதில் தூரத்தில் தோன்றும் மலைகளின் நீலமயமான காட்சிகள் இயற்கை ரசிகர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்; மரங்களில் பட்சிகளின் ஆரவாரங்கள் கவலையைப் போக்கிக் கலகலக்கச் செய்யும்; அருகில் ஓடும் பொருநை ஆற்றின் வெண்மணல் பரப்பில் உட்கார்ந்து விட்டால், முத்தமிழும் கதை சொல்லும்; நிலாக் காலமானால் வெண்ணிலவு அமைதியையும் ஆனந்தத்தையும் வாரிக் கொட்டிவிடும்.

இந்நேரத்தில் லில்லியும் விக்டரும் மாளிகையின் முன்புள்ள பூங்காவில் உட்கார்ந்து சீட்டுவிளையாடிக் கொண்டிருந்தனர். மின்சார விளக்குகள் ஏற்றப் பட்டதால் அந்த இல்லம் வெகு அழகாகத் தோன்றிக் கொண்டிருந்தது. தோட்டத்தைச் சுற்றிப் பலவகை வர்ணச் செடிகள்; அவற்றில் நறுமணம் மிகுந்த வண்ண மலர்கள்; பூங்காவில், மத்தியில் ஓர் பெண் சிலையிலிருந்து செயற்கை ஊற்று. அதைச் சுற்றி சிறு தடாகம். இதில் தாமரை படர்ந்திருந்தது. மின்சார ஒளி தண்ணீரில் படுவதால் பல வர்ண சாலங்களை அது உண்டுபண்ணிக் கொண்டிருந்தது.

இயற்கையும் செயற்கையும் ஒன்று சேர்ந்து ஆனந்தமாக விளையாடும் இந்நேரத்தில் எவ்வாறு ஓர் செம்படவன் கடலில் தோன்றும் பூரணச் சந்திரனின் இயற்கை வனப்பைக் கண்டு ஆனந்திக்காது, மீன் பிடிப்பதில் தன் கவனத்தைச் செலுத்துகிறானோ, அவ்வாறு விக்டரும் லில்லியும், வில்லியமும் ரோசும், இந்த இயற்கைக் காட்சியைக் கண்டு அனுபவிக்க முடியவில்லை.

வில்லியம், ரோசுடன் சிறிது நேரம் உலாவிவிட்டு அவளுடன் தன் இல்லம் சேர்ந்தான். இருவர்களும் சாப்பிட்ட பின் ஓர் ஆங்கில நாவலைப் படித்துக் கொண்டும், ரசித்துக் கொண்டும் இருந்தனர்.

விக்டரும் லில்லியும் சிறிது நேரம் சீட்டு விளையாடினர். பின் பூங்காவைச் சுற்றிக்கொண்டு வேடிக்கையாகப் பேசிக்கொண்டும் சிரித்துக் கொண்டும் இருந்தனர். 'சாப்பாடு தயாராய்விட்டது' என்று வேலைக்காரன் வந்து சொன்னான். இருவரும் சாப்பிடச் சென்றனர். சாப்பிட்ட பின் புத்தகசாலைக்குள் சென்று மருத்துவ நூல் ஒன்றை எடுத்துப் படித்துக்கொண்டு அதற்கு விமரிசனம் செய்து கொண்டும் இருந்தனர்.

மேலை நாட்டு மருத்துவம் விஞ்ஞான முறையில் வளர்ந்து வருகின்றது. அதற்குத் துணையாக ஆராய்ச்சி மன்றங்கள் இருக்கின்றன. மருந்துகள் விஞ்ஞான முறையில் இயந்திர சாதனத்தினால் பெரும் அளவு தயாரிக்கப்படுகின்றன. விஞ்ஞானிகள் தோன்றுவதற்கும், புத்தப் புதிய மருந்துகளையும் சாதனங்களையும் கண்டுபிடிப்பதற்கும் போதுமான வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

நம் நாட்டில் மருந்துகள் தாவரங்களில் இருந்து பெரும்பாலும் தயாரிக்கப்படுகின்றன. மேலை நாட்டில் தாதுப் பொருள்களிலிருந்து தயாரிக்கின்றனர். இவ்விரண்டுதான் மருத்துவ முறையில் மாறுதல் என்பது டாக்டர் விக்டரின் கொள்கை. விஞ்ஞான சாதனங்களை மேலை நாட்டு மருத்துவப் பட்டம் பெற்றவர்கள் உபயோகித்துக் கொள்கின்றனர். இவைகள் அவர்களுக்கு மட்டும் உரியது அல்ல. நாட்டு மருத்துவர்கள் அந்த சாதனங்களை உபயோகப்படுத்த பழக்கப்படவில்லை. அரசாங்கம் அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்யவில்லை. மூலிகைகளிலிருந்து மருந்துகள் விஞ்ஞான முறையில் குறைந்த செலவில் தயாரித்து விடலாம். இதனால் மருந்துக்கென வெளி நாட்டைத் தேடவேண்டியது இல்லை. மேலும் தாதுப் பொருள்களும் இந்நாட்டில் ஏராளமாகக் கிடைக்கின்றன. அரசாங்கம் உதாசீனமாய் இருப்பதால்தான் நம் நாட்டில் மருத்துவம் உயரவில்லை. மருத்துவப் பட்டதாரிகள்

மேலை நாட்டு மருந்து வியாபாரியின் கைப்பிள்ளையாய் இருந்து பணம் சம்பாதிப்பதற்கு ஓர் அரிய தொழில் என்றுதான் நினைக்கின்றனர். இதனால் நாட்டின் பொது மக்களின் பணம் வீணாக இத் துறையில் செலவழிக்கப் படுகின்றது. மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற இயற்கை மனப்பான்மையுள்ளவர்களை இத்தகைய தொழிலில் பழக்க அரசாங்கம் வேண்டும் வழி வகைகள் செய்யவேண்டும். இதனை வியாபாரமாகக்கொண்டு மக்களிடம் பணம் பறிக்கும்வஞ்சக டாக்டர்களையும் மருந்துக் கடைகளையும் எடுத்து விடுவதால் மக்கள் சமுதாயம் முன்னேற்றம் அடையும் என்று சொல்வது மிகையாகாது.

## 2

கோமதிக்கு அன்றுதான் பி.ஏ. பரீட்சையின் கடைசி தினம். அன்று மாலை தன் ஊருக்குச் செல்வதால் எப்படியாவது கமலத்தையும் தன்னுடன் அழைத்துச் செல்ல விரும்பினாள். அதனால்தான் மிகுந்த ஆவலுடன் அவளது அறைக்கு வந்தது. அவள் எண்ணியதற்குத் தகுந்தாற்போல் சம்பவங்களும் நடந்திருந்தன. கமலம் இத்தடவை கோமதியின் வார்த்தையைத் தட்டாமல் அவளுடன் செல்ல உடன் பட்டாள். இருவரும் தங்கள் பெட்டி, படுக்கைகளுடன் மோட்டாரில் புத்தூருக்குப் பிரயாணமாயினர். இவர்கள் வருகையை வரவேற்பது போன்று சென்ற மூன்று நான்கு நாட்களாக மழை பெய்ததால் புதிய எழிலுடன் புத்தூர் கிராமம் தோன்றிக் கொண்டிருந்தது.

புத்தூர் கிராமம் நில வளம் நீர் வளம் நிரம்பியது. எனினும் பல ஆண்டுகளாக மழை இல்லாததால் இக் கிராமம் நீதியும் நேர்மையும் இல்லா நாடு போல் வாடி வதங்கி இருந்தது. எங்கும் வறுமையும், வேலையின்மையும் தாண்டவமாடின. பண்ணையார் இராமலிங்கம் தன் களஞ்சியத்தில் உள்ள

தானியங்களை எல்லாம் வாரி வாரி கைமாறு கருதாது வழங்கினார். தன் சுற்றிலும் உள்ளவர்கள் பசியினால் வாடும்பொழுது தான் மட்டும் ஆனந்தமாக வாழப் பண்ணையாருக்குப் பிரியமில்லை. கடைசியில் தெய்வாதீனமாக மழைபெய்யவே இக்கிராமம் மீண்டும் புத்துயிர் பெற்று பொலிவுடன் விளங்கிற்று. குளங்களில் நான்கு ஐந்து மாதங்களுக்குப் போதுமான தண்ணீர் பெருகிவிட்டது. மரஞ் செடி கொடிகள், ஆடு மாடுகள் எல்லாம் புதிய மேனியுடன் தோன்றின. கிராமத்தில் உள்ள மக்கள் உற்சாகமும் தன் மதிப்பும் அடைந்து தக்க சமயத்தில் மழை பெய்வித்து தங்கள் வாழ்க்கையில் புதிய ஒளியை உண்டாக்கிய இறைவனை மனதாரத் துதித்தனர்.

இக்கிராமத்தில் கரியமால் அழகர் கோயில் இருக்கிறது இக்கோயிலைப்பற்றிப் பரம்பரைக் கதை ஒன்று சொல்லப்படுகின்றது. இக்கோயில் உள்ள இடத்தில் ஒரு காலத்தில் ஒரு புற்றில் நாகம் வசித்து வந்ததாம். அது அங்கு புல்மேய வரும் நான்கு ஆடுகளின் பாலைக் குடித்து வந்ததாம். அக்காரணம் கொண்டு இக்கிராமத்தை 'நாலாட்டின் புத்தூர்' என்று பெயர் இட்டனராம். அப்புற்று இருந்த இடத்திலேயே இன்று கரியமால் அழகர் மூலவிக்கிரகம் இருப்பதாகச் சொல்கின்றனர்.

இக்கிராமத்தை அடுத்து இரு பெரிய சாலைகள் செல்கின்றன. ஒன்று, கன்னியா குமரியிலிருந்து திருநெல்வேலி வழியாக மதுரைக்குச் செல்லும் மார்க்கம்; மற்றொன்று, பிரசித்திபெற்ற புண்ணிய தலமாகிய சங்கரநயினார் கோவில் செல்லும் மார்க்கம்.

கோமதி, அன்று மாலை வருவதால் வண்டியை மோட்டார் நிற்கும் இடத்திற்கு அனுப்பும்படி தன் தகப்பனாருக்கு முன்கூட்டியே கடிதம் எழுதியிருந்தாள். அதனால் வண்டி மாலை ஐந்து

மணிக்கே செல்லே செல்லும் சாலையில் மோட்டார் நிற்கும் இடத்திற்கு வந்து விட்டது.

இரவு ஏழுமணி இருக்கும். மோட்டாரும் புத்தூரை அடைந்தது. கோமதியும் கமலமும் இறங்கினர். இவர்களது வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த வண்டிக்காரன், வீராசாமி, கை கூப்பி வணக்கம் செய்து, "வாருங்கள் அம்மா", என்று கூறி மோட்டாரிலிருந்து சாமான்களை இறக்கினான். பின், காரும் நகர்ந்தது,

சாமான்களை வைத்து வண்டியில் மாடுகளைப் பூட்டினதும் கமலமும் கோமதியும் ஏறிக்கொண்டனர். வண்டி கட கட என்று ஓட ஆரம்பித்து விட்டது. ஐந்து நிமிடங்களில் மாளிகையை அடைந்தது. கோமதியும் கமலமும் இறங்கினர். அங்கு தலை வாசலில் எதிர்பார்த்துக் கொண்டிருந்த தாயை வனங்கினர். கோமதி தன் அம்மாவிடம் கமலத்தை அறிமுகம் செய்தாள். அவ் அம்மையாரும் அன்புடன் கமலத்தை நோக்கி "வா, அம்மா. உன் வீடு தான். வேற்றுமை நினைக்காதே" என்று கூறி, இருவர் முதுகிலும் தன் கையை வைத்து உள்ளே அழைத்துச் சென்றனள். கோமதியின் தாயார் சொன்ன வார்த்தைகள் கமலத்தின் வருங்காலத்தை முன்கூட்டியே சொல்லும் தெய்வ வாக்குப் போன்று இருந்தன. அவளே அந்த மாளிகையின் தலைவியாக வரப்போகின்றாள். என்னே, இறைவனின் கருணை உள்ளம்!

கோமதியின் தகப்பனார் வள்ளல் இராமலிங்கம் தன் அறையில் கடிதம் எழுதிக் கொண்டிருந்தார். கோமதியும் கமலமும் அங்கு சென்று அவரை வணங்கினர். கோமதி தன் அப்பாவிடம் கமலத்தைப் பற்றிச் சொன்னாள்.

அவர் கமலத்தை நோக்கி "உன் தோழியின் வீடு, உன் வீடுதான் அம்மா. கூச்சப்படாதே" என்றார். கமலம் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

கோமதியின் பரீட்சைபற்றி வள்ளல் விசாரித்தார். பின்னர் இருவரையும் சாப்பிடப் போகச் சொன்ஞர்.

கோமதியின் அண்ணன், இரகுநாதன் ஓர் காங்கிரஸ் பொதுக்கூட்டத்திற்குப் போய்விட்டு அப்பொழுதுதான் வீட்டிற்குள் நுழைந்தான். கோமதியின் சப்தத்தைக் கேட்டதும் "கோமு, எப்பொழுது வந்தாய்" என்று சொல்லிக் கொண்டு அவள் இருக்கும் இடத்திற்கு வந்தான். அவள் அருகில் தங்கப் பதுமை போல் உட்கார்ந்திருக்கும் ஒரு பெண்ணைக் கண்டதும் திடுக்கிட்டு நின்று விட்டான்.

இரகுநாதன் இவ்வளவு அழகிய பெண்ணை இதற்கு முன் பார்த்தது இல்லை. பிரசித்திபெற்ற சைத்திரிகரான ரவிவர்மா முதலியவர்கள் வரைந்த படங்களையும், கோயில்களில் உள்ள விக்கிரகங்களையும், கிரேக்கயவன சிற்பங்களையும் பார்த்திருக்கின்ருன். காவியங்களிலும் கதைகளிலும் எத்தனையோ எழில் மிகுந்த பெண்களைப் பற்றி வர்ணிக்கப் பட்டு இருக்கின்றன. 'தேவ கன்னிகை' என்று புகழ்வார்களே, ரம்பை, ஊர்வசி, மேனகை முதலியவர்கள் எல்லாம் இப்பெண்கள் நாயகத்திற்கு உவமையாக முடியாது. இவளுக்கு இவள் தான் உவமை. கமலமோ, மகா இலட்சுமி போன்று தோன்றிஞள்.

இத்தகைய தெய்வத் திருமகளைக் கண்டதும் கற்சிலை போன்று நின்று விட்டான், இரகுநாதன். அவனது மூச்சும்கூட ஒரு நிமிடம் நின்று விட்டது. பின் ஒருவாறு தைரியம் கொண்டு பேச வாய் எடுக்குமுன் கோமதி "அண்ணு, இப்பொழுதுதான் என் தோழியும் நானும் வந்து சேர்ந்தோம். உனது காங்கிரஸ் எல்லாம் எப்படி இருக்கிறது!" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

இரகுநாதனைக் கண்டதும் சிறிது நாணத்துடன் எழுந்து எதையோ கவனிப்பது போன்று

நின்று கொண்டிருந்தாள் கமலம். அவளது மார்பு படபட என்று அடித்துக் கொண்டிருந்தது. அச்சமயத்தில் கோமதியின் வார்த்தைகளைக் கேட்டதும் தன்னை அறியாமல் சிரித்து விட்டாள். கோமுவும் கமலத்தை நோக்கி "அதோ நிற்பது என் அண்ணன், வக்கீல் பட்டம் பெற்றிருக்கிறார். நாட்டுப் பற்றும், தாய்மொழிப் பற்றும் நிறைந்தவர், சிறந்த பேச்சாளர், உயர்ந்த எழுத்தாளர்", என்றாள்.

கமலம் இரகுநாதனைப் புன்முறுவலுடன் பார்த்துத் தன் கண்களினாலே வணக்கம் செய்தாள். இரகுநாதனும் "வாருங்கள் அம்மா. இன்னார் என்று முதலில் தெரியாததால் பேசாது இருந்து விட்டேன்" என்றான். பின் தன் தங்கையிடம் பரீட்சையில் எழுதியிருப்பதைப்பற்றி விசாரிக்கலானான்.

சாப்பாட்டிற்காக இலை போடப்பட்டது. எல்லோரும் சாப்பிட்டனர். கோமதி, தன் படுக்கை அறைக்குக் கமலத்தை அழைத்துச் சென்றனள். இருவரும் படுக்கையில் படுத்துக் கொண்டு ஆனந்தமாகப் பேசிக் கொண்டிருந்தனர். பின் சிறிது நேரத்திற்குள் கோமதி மோட்டாரில் வந்த அலுப்பால் தூங்கி விட்டாள்.

இரவில் படுப்பதற்குமுன் கமலம் ஆண்டவனைத் துதிப்பது வழக்கம் அவள் மண்டியிட்டு பைபிளிலிருந்து சில பொன் மொழிகளை மனதிற்குள் சொல்லி கர்த்தரைத் தியானம் செய்து பின் படுத்துக் கொண்டாள். அவளுக்கோ தூக்கம் வரவில்லை பல எண்ண அலைகள் மோதிக்கொண்டே இருந்ததால், பற்பல காட்சிகள் அவளது மனதில் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. அவள் கடந்தகால சம்பவங்களை நினைத்தாள். இனிவருங் கால வாழ்க்கை அமைப்பையும் சிந்தித்தாள்.

அவளது சிந்தனை கோமதியின் அண்ணன் இரகுநாதனைப் பற்றியும் சென்றன. "என்ன அன்பு!

வாருங்கள் அம்மா! என்று எவ்வளவு மரியாதை யுடன் அழைத்தார். பார்க்கும் பொழுதே உயர்ந்த பண்பாடுள்ள அறிஞராகத் தோன்றுகின்றார். இந்தக் காலத்தில் பட்டத்திற்கும், பதவிக்கும், புகழுக்கும் ஆசைப்படாது நாட்டுப் பற்றே உயர்ந் தது என தேச சேவையில் ஈடுபட்டிருக்கிறார். செல்வக்குடியில் பிறந்த இவருக்கு ஏன் இத்தகைய மனப்பான்மை ஏற்படவேண்டும்? இவரைக் கல் யாணம் செய்துகொள்ளும் பெண்ணும் பாக்கிய சாலிதான் சிறந்த தியாகியாக இருக்கின்றார்" என்று பல்வாறாக இரகுநாதனைப் புகழ்ந்தாள்.

கமலத்தின் எண்ணங்கள் மருத்துவர் விக்டரை யும் படம் பிடித்தன. "ஓர் அழகிய ஆடவர். உயர்ந்த ஆங்கிலப்பட்டம் பெற்றவர். ஜில்லா மருத் துவ அதிகாரியாகவும் இருக்கின்றார். வயதோ இரு- பத்தைந்திற்கு மேல் இருக்காது. நல்ல மதிப்பு இருக்கிறது. இவரை அழைக்க எத்தனையோ தன வான்கள் வருகின்றனர். இவருடைய சொந்த ஆஸ் பத்திரியிலேயே ஏராளமான நோயாளிகள் வருகின் றனர். வைத்தியத்தில் கைதேர்ந்தவர் என்று எல் லோராலும் புகழப்பட்டவர். பல விருதுகள் பெற்ற வர். சொந்த மாளிகை, சொந்தக்கார், வேலை செய் வதற்குப் பல வேலைக்காரர்களும் பணிப்பெண் களும் இருக்கின்றனர். இவ்வளவு மதிப்பு இருந்தும் திக்கற்ற என்னை ஏன் காதலிக்கின்றார்? எனக்கோ அவர் மீது விருப்பமும் இல்லை, வெறுப்பும் இல்லை."

"என் குணாதிசயங்களுக்காக என்னைக் காத லிக்கின்றாரா? என் கல்வி அறிவிற்காக என்னை விரும்புகின்றாரா? அப்படி இருக்க முடியாது. என் குணங்களைப்பற்றி அவருக்குத் தெரியாது, அவர் என்னைப் பல தடவை சந்தித்திருக்கிறார். இருந்தா லும், நான் அவரிடம் பேசினது இல்லை."

"என்னைப்பற்றி யாராவது புகழ்ந்திருப்பார் களா? எதற்காக அவர்கள் புகழப்போகின்றார்கள்? எத்தனையோ பெண்கள் அவரைக் காதலிப்பதாகச்

சொல்லிக் கொள்கின்றனர். அவருடன் ஆனந்த மாகப் பேசி விளையாடுகின்றனர். அவர் கிருஸ்துவக் கல்லூரி டாக்டராகவும் இருந்து வருகிறார். இத் தகைய கணவன் கிடைத்தால் மகிழ்ச்சியுடன் வாழ்க்கை நடத்தலாமென்று நினைப்பார்களே தவிர என்னைப் பற்றி யாரும் கூறியிருக்கமாட்டார்கள்!"

"அவர் என் அழகைக் கண்டு என் மீது மோகம் கொண்டிருக்கவேண்டும். அவர் என்னை நேசிப்பதாகச் சொல்கின்றார். ஆனால் அவர் மீது எனக்கு நாட்டம் செலுத்த விருப்பம் இல்லை. எப் பொழுது எனக்கு அவர் மீது பற்றுதல் இல்லையோ, அவர் என் மீது கொள்ளும் ஆசையும் காம இச்சை தவிர காதல் அல்ல."

"காதல் என்பது ஆண் பெண் இருவர்களையும் பிரிக்க முடியாத அன்பு; சகல இன்னல்களையும் பொருட்படுத்தாது இருவர் வாழ்க்கையையும் ஒன்று படுத்தும் ஒரே மனம், ஒரே எண்ணம், ஒரே செயல். தங்கத்தைப் பழுக்கக் காய்ச்சினாலும் அதன் ஒளி குறைவது இல்லை. அது போன்று காதல் என்பது கற்பென்னும் அணையா விளக்காய் நற்சோதியாய்த் தானே இயங்கிக் கொண்டிருக் கும். இத்தகைய நிலை போன பிறவியின் பயனால் விளைவதே அல்லாது சாதாரணமாக ஏற்படக் கூடியது அல்ல.

"உண்மையில், ஒருவன் ஒரு பெண்ணைக் காத லிக்கின்றான் என்றால் அவன் பிற பெண்களைக் கன விலும் கருதுவது இல்லை. தான் விரும்பிய பெண்ணை அடைவான், அல்லது மடிவான். அவன் ஒழுக்கம், அன்பு என்ற கயிற்றினால் நன்றாகக் கட்டப்படு கின்றான். அது போன்று தான் அவனைக் காதலிக் கும் பெண்ணும் இருப்பாள். இத்தகைய காதல் மணம் தெய்வீகத் தன்மை வாய்ந்தது. இது கிடைப் பது அரிது. ஆனால் விக்டரின் காதலோ ஒரு பொருந்தாக் காதல். இருவர் மனமும் ஒன்றுபட வில்லை."

கமலம் கோமதியின் தாயாரையும் நினைத்தனள். "என்னுடன் இவ்வளவு அன்புடன் இருப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. எப்பொழுதும் முகத்தில் புன்முறுவல் தவழ்கின்றது. யாரையும்கடிந்துபேசுவதுஇல்லை. தன்நாயகனிடம் மிக்க அன்பாக நடக்கின்றார். இந்த வீட்டில் நான் அடையும் அமைதி வேறு எங்கும் பெற்றதில்லை. நான் எத்தனையோ கிருஸ்துவப் பொரியார்கள் இல்லம் சென்றிருக்கிறேன். அங்கு நடக்கும் நிகழ்ச்சிகள் மனோசாந்தியை ஏற்படுத்துவதற்குப்பதில் சஞ்சலத்தையே உண்டுபண்ணியிருக்கின்றன. சோகத்தினால் வாடும் எனக்கு உயிர்ப் பிச்சை கொடுக்கின்றது இப்பண்பாடுடைய வழக்கம்."

இவ்வாறு நினைத்து நினைத்துக் கமலத்திற்கும் அழுகை வந்து விட்டது. தன்னை "அம்மா கவலைப் படாதே" என்று சொல்வதற்குக்கூடத் தன்வழியில் ஒருவரும் இல்லையே" என்று ஏங்கினாள். 'திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை' என்றது போல கடைசியில் ஓர் தியாகக் குடும்பத்தினிடம் தன்னைச் சேர்த்ததற்காக எல்லாம் வல்ல இறைவனைத் தியானம் செய்த வண்ணம் கமலம் தூங்கி விட்டாள்.

இரகுநாதன் சாப்பிட்டபின் காங்கிரஸ் நிகழ்ச்சிகளைப் பற்றித் தன் தந்தையிடம் கூறினான். அதன் பின் படுக்கைக்குச் சென்றான். அவனுக்கோ தூக்கம் வரவில்லை. அவனது மனம் பண்பட்டு இருந்ததால் எப்பொழுதும் இன்பதுன்பங்களுக்காகக் கலங்குவது இல்லை.

ஆனால் இன்று அவனுக்கு எதிர்பாராத மனோவியாகூலம் ஏற்பட்டது. அவன் கமலத்தைப் பற்றி நினைத்ததுதான் இதற்குக் காரணம். அழகும் இளமையும் ஒன்றோடு ஒன்று போட்டியிடுகின்றது. கல்வி அறிவு நிரம்பப் பெற்றிருக்கின்றாள். ஒழுக்கம் வழுவாது இருந்தும் இப்பெண் நல்லாள் முகத்தில் கவலைக் குறி தாண்டவமாடுவதை நினைத்து அவன்

சிந்திக்கலானுன். அவளது கண்களே அதை உணர்த்தின.

உலகில் அழகு நிரம்பப் பெற்றவர்கள் புண்ணியசாலிகள். அறிவும் குணமும் படைத்தவர்களாஞல் அவர்களுக்குச் சமமானவர்கள் மூன்று உலகிலும் யாரும் இல்லை.

" அழகுக்கு அழகு செய்யும் சித்திரப் பதுமையாள், ஆடவர் மனதைக் கொள்ளை கொள்ளும் இயற்கை வனப்புடையாள், எழில் தெய்வம், கமலம் ஏன் வருந்தவேண்டும்? ஒருவேளை தான் நாடிய பொருள் கைகூடாது கவலையுடன் தோன்றுகின்ருளா? அல்லது தன்னைக் காதலித்த மணுளன் தன்னைப் புறக்கணித்து வேறு பெண்ணை நாடிஞனு? அல்லது நோயினுல் வாடுகின்ருளா? குடும்பக் கவலையினுல் ஒடுங்குகின்ருளா? தாய், தந்தை, தனயன் அற்றுத் தவிக்கின்ருளா? எதாக இருக்கலாம்!" என்று கமலத்தைப்பற்றி எண்ணலானுன் இரகுநாதன்.

அவளது துன்ப நிலையின் காரணம் அவனுல் நிட்சயிக்க முடியவில்லை. உடனே சென்று தன் தங்கையின் மூலம் அறிய ஆவல் கொண்டான். இந்நேரத்தில் அவளை எவ்வாறு எழுப்ப முடியும்? பைத்தியக்காரத் தனமென தனக்குள் ஆறுதல் கொண்டு விடிந்ததும் கமலத்தைப் பற்றி அறிவதே முதல்வேலை என்று முடிவுசெய்து மௌனமாஞன். அவனுக்குத் தூக்கம் வரவில்லை. படுக்கையில் திரும்பித் திரும்பி உருண்டு படுத்தான். பயன் ஒன்றும் இல்லை. பின் விளக்கை ஏற்றிக் கம்பனின் கவிதையைப் படிக்கலாஞன். அசோகவனத்தில் பிராட்டியார் இருக்கும் சோகக் காட்சியே அவன் புத்தகத்தைத் திறந்ததும் கிடைத்தது. புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டிப் புரட்டி இங்கு ஒன்றும் அங்கு ஒன்றுமாகப் படிக்கலாஞன். அதில் அவனுக்கு மனம் செல்லவில்லை. அதை மூடிவிட்டு அறையில் இங்கும் அங்குமாக உலாவிஞன். அந்

லும் அவனுக்கு மனோ அமைதி வரவில்லை. வானத்தில் கார்மேகத்தின் ஊடே மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களை உப்பரிகையிலிருந்து எண்ணலானான். அதுவும் அவனுக்குப் பிடிக்கவில்லை. கடைசியில் விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கையில் சித்தாசனத்தில் உட்கார்ந்து 'இராம், இராம் இராம்' என்று தியானம் செய்து கொண்டிருந்தான். கொஞ்ச நேரம் கழிந்ததும் அவன் அயர்ந்து தூங்கி விட்டான்.

## 3

மறுநாட் காலை வைகறைப் பொழுது. இருள் நன்றாய் அகலவில்லை. கூர்ந்து கவனித்தால் பாதை நன்றாய்த் தெரியும். "விடிந்துவிட்டது, எழுந்திருங்கள்" என்று அழைப்பதுபோல் சேவல்கள் கூவின. மரங்களிலிருந்து காகங்கள் "காகா" என்று கரைந்தன. இந்நேரத்தில் இரகுநாதனின் மாளிகை முன் ஓர் வில் வண்டி வந்து நின்றது. அதிலிருந்து ஓர் யுவன் இறங்கி வீட்டிற்குள் நுழைந்தான்.

இரகுநாதன் காலை நான்கு மணிக்கே வழக்கமாக எழுந்து விடுவான். காலைக் கடனை முடித்து பல் துலக்கி குளித்து விடுவான். சிறிது நேரம் சித்தாசனத்தில் உட்கார்ந்து மனதினில் எவ்வித எண்ணங்களும் உண்டாகாது மௌனியாய்க் கண் மூடியிருப்பான். பின் தன் அறைக்குச் சென்று படிப்பான் அல்லது எழுதுவான். காலை உண்டி அங்கு வந்துவிடும். அதைச் சாப்பிட்டுவிட்டு வெளியே செல்வான்.

அன்று மாளிகைக்குள் சென்ற யுவன், இரகுநாதனின் அத்தை மகன் சந்திரசேகரன். இருவரும் ஒன்றாகவே சட்டக்கல்லூரிப் பட்டம் பெற்றவர்கள். இந்நாட்டில் எல்லோரும் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும், போதுமான கல்வி அறிவும் பெற்று மறந்தும் பிறருக்குக்

கேடு நினைக்கா வாழ்க்கையை நடத்த இருவர்களும் உழைக்கின்றனர். இவற்றை நிலைநாட்ட சட்டங்களும், நீதி முறையும் அமைய முன்னணியில் நிற்கின்றனர்.

சேகரன் இரகுநாதனின் அறையை அணுகி "இரகு. இரகு" என்று கூறிக்கொண்டே உள்ளே நுழைந்தான். அப்பொழுது அவன் "தியாக மன்றம்" என்ற நவீனத்தின் ஒரு பகுதியைஎழுதிக் கொண்டிருந்தான். சிறந்த எழுத்தாளன் அல்லவா! வருங்காலத் தமிழகத்தை உருவாக்குகின்ருன் தன் பேனு முனையினுல்.

சேகரின் குரல் கேட்கவே எழுதுவதை நிறுத்தித் திரும்பி "வருக சேகரா. ஏது இந்நேரத்தில் அவசரமாக வந்திருக்கிருய்? ஏதாவது ஆபத்து நேரிட்டுவிட்டதா?"

சேகரனும் இரகுநாதன் அருகில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு "இல்லை, இரகு, அவ்வளவு அவசரமான காரியம் ஒன்றும் இல்லை உன் உடையை அணிந்துகொள், வெளியே போகலாம். வண்டி தயாராய் இருக்கின்றது; போகும்பொழுது சொல்கிறேன்."

காலை உண்டி வந்துவிட்டது. இருவரும் சாப்பிட்டனர். வந்திருக்கும் வண்டிக்காரனும் சாப்பிட்டான். மாடுகளுக்குத் தண்ணீர் காட்டி வைக்கோல் போட்டான். பின் மாடுகளை வண்டியில் பூட்டித் தயாராக வைத்திருந்தான்.

இரகுநாதன் தன் ஆடையை அணிந்து புறப்பட்டுவிட்டான். அரையில் கதர் வேட்டி, மேலே அரைக்கை கதர் சட்டை, அதன்மேல் ஓர் கதர் உத்தரியம், காலில் செருப்பு. இவைதான் அவன் அணிந்திருப்பவைகள்.

இரகுநாதனும் சேகரனும் வண்டியில் ஏறினர். வண்டி ஓட ஆரம்பித்தது, கோவில்பட்டி பஞ்சாலையைநோக்கி. காலை ஏழுமணிக்கு அங்கு இருக்க

வேண்டும். வண்டி ஓட்டியும் வெகு விரைவாகவே மாடுகளைச் செலுத்தினன். சந்திரசேகரன் தன் பேச்சைத் தொடங்கினன்.

"இரகு, இன்று காலை கோவில்பட்டி மில்லில் வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்போகிறது. தொழிலாளர்கள் அதிகச் சம்பளம் கேட்கின்றனர். விலைவாசி பன்மடங்கு அதிகமாகிவிட்டது. அவற்றின் உயர்வைத் தடுக்க வழிவகைகள் அரசாங்கம் ஒழுங்காகச் செய்யவில்லை. மனிதனின் வாங்கும் சக்தி குறைந்து விட்டது. இதனால் தங்கள் கோரிக்கை நிறைவேரு விட்டால் வேலைக்குச் செல்வது இல்லை என்று தொழிலாளர்கள் முடிவு செய்திருக்கின்றனர். ஆதலால் நாம் நிர்வாகத்தினரைக் கண்டு ஓர் சமரச முடிவிற்கு வரவேண்டும். சண்டை சச்சரவுகள் ஏற்படாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். அதற்காகவேதான் நான் உன்னை அழைத்தது. மூன்று தினங்களுக்குமுன் மில் தொழிலாளர்களைக் கூட்டி விவாதித்தேன். எல்லோரும் ஒருமித்துப் பொதுவேலை நிறுத்தம் செய்வது என்று முடிவு செய்தோம். பல காரியங்களின் நிமித்தம் அலைந்த தால் உனக்குத் தெரிவிக்க முடியவில்லை"

இதைக் கேட்டதும் ஒன்று இரண்டு நிமிடங்கள் மௌனமாக இருந்துவிட்டு இரகுநாதன் "எந்தக் காரியத்தையும் அவசரப்பட்டுச்செய்யலாகாது, முதன் முதலில் தொழிலாளர்களின் குறைகளை மில் நிர்வாகத்தினரிடம் தகுந்த முறையில் குறிப்பிட வேண்டும். அவர்கள் தாங்கள் செய்யவேண்டிய கடமைகளை மறுக்கின் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும். தொழிலாளர்களும், நிர்வாகிகளும் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டவர்கள். மக்களின் நலனுக்காகவே தொழிற்சாலை இயங்குகின்றது. பணம் தீயவழியில் சம்பாதிக்கும் கருவியாய் அது இயங்குவது மக்கள் ஆட்சியில் முடியாத காரியம். அதனால்தான் வேலை நிறுத்தம்

அல்லது கதவு அடைப்பு கடைசி ஆயுதமாகக் கொள்ளவேண்டும்".

சேகரன்: "முன்பு ஓர் மனு கொடுத்திருந்தோம் தொழிலாளர் குறைகளையும் அதன் பரிகாரங்களை யும் குறிப்பிட்டிருந்தோம். மில் நிர்வாகி அதைப் பொருட்படுத்தவில்லை. இரண்டு மாதங்கள் ஆகியும் குறைகள் தீர்ந்தபாடில்லை. இப்பொழுது மற்றொரு மனு கொடுக்க வேண்டுமென்கிருய். இதனுல் தொழிலாளர் குறை நிவர்த்திக்கக் காலம் கடந்து விடுகின்றது. அவர்களோ மிக்க அல்லல் படு கின்றனர்"

இரகு: "இன்று நம் நாட்டில் வியாபாரம், தொழில், எல்லாம் பணம் சம்பாதிக்கும் ஓர் உபக ரணமாக இருந்து வருகின்றன. ஆங்கில ஏகாதி பத்தியத்தில் இவைகள் கரன்ஸி நோட்டுக்களின் பெருக்கிற்கு ஏற்றதாய் இயங்கின. இன்னும் இவை கள் பழைய முறைப்படியே செயலாற்றி வருகின் றன. இதற்குத் தக்க நடவடிக்கைகள் அரசாங்கம் எடுத்துக்கொள்ளவில்லை. நேர்மையான முறை யில் கணக்குகளை வைத்துக்கொள்ளவும், அனுவசிய மான செலவுகளையும் செய்கைகளையும் கட்டுப்படுத் தவும், நியாயமான விலையில் பண்டங்களை விற்கவும், அதன் தரம் குறையாமல் இருக்கவும், பொதுமக் களின் நலனைக் கருதுவதுமாகிய முக்கிய காரியங் களில் சர்க்கார் வேண்டும் வழிவகைகள் செய்ய வில்லை. கொள்ளை அடித்தால் குற்றம். ஆனுல் வஞ்சகமாக வியாபாரத்தின் மூலம், அல்லது வேறு வழியில் பொருள்களை உயர்ந்த விலையில் விற்றுப் பணம் சம்பாதித்தால்,அவனைக் குற்றவாளி என்று தண்டிக்கச் சர்க்கார் முன் வரவில்லை. அவனுக்குக் கிடைக்கும் வருமானத்தில் பங்குபோடுகின்றது. அதை அனுசரித்து அரசாங்க வரவு செலவை அதாவது பட்ஜட்டை அது அமைக்கின்றது. என்று மக்களுக்காக மக்களின் சர்க்கார் நடக்கின் றதோ அன்றுதான் மக்களின் நலம் ஓங்கும்"

"இன்று வேலை நிறுத்தத்தால் பலன் ஒன்றும் இல்லை. ஏனெனில் உழைத்தால்தான் தொழிலாளர் சம்பளம் பெறமுடியும். வேலை நிறுத்தம் ஏற்படுவதால் தொழிற்சாலைக் கதவடைப்பும் உண்டாகும். இதில் பெரும்பாலும் பாதிக்கப்படுபவர் தொழிலாளர்களே. அவர்களின் நலனுக்காக உழைப்பதாகச் சொல்லி, அவர்களைத் துன்பத்திற்கு ஆளாக்குவது நேர்மையற்ற தன்மை ஆகும். மீண்டும் மில் நிர்வாகிகளைச் சந்தித்து ஆவன செய்வோம். வேலை நிறுத்தம் கடைசி ஆயுதமாகக் கொள்ளப்படா விட்டால், அது உயிர் அற்று, உணர்ச்சியற்று, நடைபிணம் போன்று ஆய்விடும். இம்மாதிரியாகவே தான் கதவடைப்பும்".

சேகர்: "இரகு, நீ சொல்வது உண்மைதான். நாம் போனதும் எல்லாத் தொழிலாளர்களையும் கூட்டி ஓர் பொதுக்கூட்டம் போடுவோம். நமது குறைகளைப்பற்றியும், நமது நிலையைப் பற்றியும், நாம் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றியும் ஆராய்வோம். பின் ஒரு முடிவிற்கு வருவோம்".

வண்டியும் கோவில்பட்டிப்பஞ்சாலைத் தொழிலாளர் சங்கக் காரியாலயத்தின்முன் நின்றது. சேகரனும் இரகுவும் வண்டியிலிருந்து இறங்கினர். சங்கக் காரியாலயத்திலிருந்து மூன்று இளைஞர்கள் வந்து வணங்கினர். எல்லோரும் உள்ளே சென்றனர். நேரமும் காலை ஏழு மணி ஆய்விட்டது. காரியாலயத்தின் முன் ஏராளமான ஆண் பெண்கள் கூடிவிட்டனர். கதிரவனும் இவர்களுக்கு ஆசி கூறுவது போல் அடிவானத்திலிருந்து கிளம்பிச் சற்று உயரத்தில் சுழன்று கொண்டிருந்தான், உலக நாயகனான கண்ணனின் தருமச் சக்கரம் போன்று. இரகுநாதன் எழுந்து கூட்டத்திற்கு இருகை கூப்பி வணக்கம் தெரிவித்துப் பேசத் தொடங்கினான்.

"சகோதர, சகோதரிகளே, அதோ பாருங்கள் சூரிய தேவன். அவன் தினம் தினம் தன் கடமையைச் செய்கின்றான். உலக இருளை நீக்கி எங்கும்

வெளிச்சத்தைத் தருகிறான். நம் வாழ்க்கைச் சூரிய ளுகிய தொழிற் சங்கம் ஆண்டவனின் விராட சரீரம் போன்று ஓங்கி வளரட்டும். நாம் தியாகம் என்ற சேவையினுல் அதனைப் பிரகாசிக்கச் செய்வோம். ஆண்டவன் நமக்கு அருள் புரிவாளுக. இந்நாட்டில் எல்லோரும் எல்லாச் செல்வமும் பெற வேண்டுமென்பது என் உளக்கிடக்கை. அதற்காக என் உடல், பொருள், ஆவி மூன்றையும் காணிக்கையாக இடுகின்றேன். இதுவே என் வாழ்க்கையின் பயன், என்று மனப்பூர்வமாக நான் நம்புகிறேன். இது உண்மை, வீண்புகழ்ச்சி அல்ல.

உலகில் எத்தனையோ நாடுகள் சுதந்திரத்துடன் வாழ்கின்றன. அந்நாட்டு மக்கள் உயர்ந்த நிலையில் இருக்கின்றனர். அவர்களின் அன்றுட வாழ்க்கையில் அரசாங்கம் பங்கு கொள்கின்றது. நம் நாட்டிலோ நாம் அவல நிலையில் இருக்கின்றோம் மக்களுக்காகச் சர்க்கார் நன்முறையில் இயங்கவில்லை. உண்மைச் சுதந்திரக் குடி அரசு ஏற்படாமல் இருக்கச் சில பதவிப் பித்தர்களும், சுயநலமிகளும் தற்புகழ்ச்சியுள்ளவர்களும் முட்டுக்கட்டை போடுகின்றனர். இவர்கள் அகில இந்தியா என்று கூறிக் கொண்டு பொதுமக்களை ஏமாற்றுகின்றனர். இவர்கள் போடும் திட்டங்களும் சட்டங்களும் பொதுமக்களுக்குப் பயன்படக் கூடியதாய் இல்லை.

அரிது அரிது மானிடப் பிறவி அரிது என்பர். மனிதர்களாய்ப் பிறந்த நாம், மாக்களாக இருந்து வருகின்றோம். உண்ண உணவு இல்லை, உடுக்க உடை இல்லை, இருக்க இடம் இல்லை, போதிய கல்வி வசதி இல்லை, போதிய தற்காப்பு இல்லை. அன்று அன்னியனுக்கு அடிமையாய் இருந்தோம். இன்று சிலரின் பொய்ப் பிரசாரத்திற்கு அடிமையாய் இருக்கின்றோம். இது நம் அறியாமையினுலும், நம் கடமையிலிருந்து தவறுவதாலும் ஏற்படுகின்றது.

இந்த நாட்டில் வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டு உரிமை உண்டு. மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் சட்டசபைஅங்கத்தினர்களாக ஆகின்றனர். இவர்கள் மக்களின் ஊழியர் என்றோ, பிரதிநிதி என்றோ சொல்லிக் கொள்கின்றனர். தேர்தல் முடிந்தபின் இவர்களுக்கும் மக்களுக்கும் தொடர்பு நின்று விடுகின்றது. இவர்கள் எந்தத் தொகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனரோ அவர்களின் நலனுக்காக உழைக்க வேண்டும். ஆனால் இவர்கள் பெரும்பாலும் மக்களை மறந்து விடுகின்றனர். மக்கள் இவர்கள்மீது ஒழுங்கு நட வடிக்கை எடுத்துக்கொள்ள முடிவதில்லை. இவர் கள் கட்சியின் பெயரால் மக்களைப் பணயம் வைத்து ஆடுகின்றனர். அந்தக் காலத்தில் மன்ன ரின் மகன் மன்னர் ஆனார். ஆனால் இன்று கட் சித் தலைவர் ஆட்சிப் பீடத்தில் அமர்கின்றார் மக்க ளுக்காக கட்சி என்று இவர் நினைப்பது இல்லை. கட்சிக்காகவே மக்கள் இருக்கின்றனர் என்பது இவரது எண்ணம். இவரது சொந்த விருப்பு வெறுப்புக்களால் மக்களைக் கட்டுப்படுத்துகின்றார். இதனால் தனிப்பட்ட மனிதனின் கருத்துக்களும் செய்கைகளும் பெருவாரியான மக்களின் நலனைப் பாதிக்கின்றன. மக்களின் நலம் மக்களின் கையில் இருக்க வேண்டும். தங்கள் வாழ்விற்கும் தாழ்விற் கும் மக்களே காரணமாய் அமையவேண்டும். அதற்குத் தகுந்தாற்போல் அரசியல் அமைப்பும், உரிமைச் சட்டங்களும் ஏற்பட வேண்டும்.

நம் நாட்டில் ஏராளமான பொருட் செலவில் இயங்கும் அரசாங்க நிர்வாகம் மக்களின் பண் பாட்டை, வாழ்க்கைத் தரத்தை, உயர்த்துவதற்குத் தகுதியற்ற முறையில் இருந்து வருகின்றது. இந்த நிர்வாகம் மக்களின் பிரதிநிதிகளிடமிருந்து, நாட் டுப் பற்றும் நன்மொழிப் பற்றும் உள்ள தியாகி களிடமிருந்து, பறிக்கப்பட்டுச் சுய நலமிகளின் கையில் ஒப்படைக்கப்படுகின்றது. சாதாரண நீதியை நிலைநாட்ட மிகுந்த பொருட்செலவும், கால

தாமதமும் ஏற்படுகின்றன. தனிப்பட்ட மனிதனின் உரிமை பாதுகாக்கப்படவில்லை.

அரசாங்க நிர்வாகமே இப்படி இருக்கின்றது என்றால், ஒரு சிலரால் நடத்தப்படும் தொழிற்சாலைகளின் நிலையோ கேட்க வேண்டியது இல்லை. தொழிற்சாலையின் நிர்வாகிகள் நியாயமான கணக்குகளை எழுதவேண்டும். தொழிலின் மேன்மைக்கும் நலனுக்கும் உண்டான செலவுகளையே செய்ய வேண்டும். அது மக்களின் நலனுக்காக இருக்க வேண்டும். மக்கள் வாங்குவதால்தான் பண்டங்கள் உற்பத்தியாகின்றன. மக்களின் நலனைக் கருதாது நிர்வாகம் நடந்தால், அரசாங்கம் அதனைத் தடுக்கவேண்டும். ஒரு தொழிற்சாலைக்கு நிர்வாகமும் பணமும் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு மக்களின் உழைப்பும் முக்கியமாகின்றது. மக்களின் உழைப்பினால் மூலப் பொருள்கள் எல்லாம் மக்களுக்குத் தேவையானதாய், விற்பனைக்கு உரியதாய் மாறுகின்றன. இதனைச் செய்வதில் தொழிலாளர்கள் பெரும்பங்கு எடுத்துக் கொள்கின்றனர். ஆகவே நிர்வாகம் தொழிலாளர்களின் நலனுக்கும், ஆக்கத்திற்கும், நிழல்போன்று தொடர்ந்து ஆவன செய்யவேண்டும்; அதற்கு வழிவகைகளை அமைக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் நிர்வாகத்தின்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். மக்களின் சர்க்கார் என்று கூறிக் கொள்கின்றவர்கள் இதனைச் சிந்திக்க வேண்டும்.

நாம் சேமம் அடைய வேண்டுமானால் எல்லோரும் கட்டுப்பாட்டுடன் திரண்டு முன்னேறிச் செல்வோம். பல இன்னல்கள் ஏற்படலாம். அவற்றிற்குக் கலங்காது நம் இலட்சியத்தை அடைய ஒவ்வொருவரும் சபதம் செய்து கொள்வோம். மானமே பெரிது. நம் நாட்டில் உள்ள உடைமைகள் எல்லாம் மக்களின் பொது உடைமைகள். இதனால் எல்லோரும் வாழ்கின்றனர், வாழ்விக்கப் படுகின்றனர்.

இன்று பொதுவேலை நிறுத்தம் செய்ய முடிவு செய்திருப்பதாகத் தோழர் சேகரன் சொன்னார். இது சரியான வழி அல்ல. உழைப்பாளிகளின் சம்பளம், சௌகரியம் முதலியன, இங்கு கூடியிருக்கும் சகோதரர் சகோதரிகளுக்கு மட்டும் அல்ல. நம் நாட்டில் உள்ள எல்லோரையுமே பாதிக்கின்றன. இதற்கு அடிப்படைக் காரணம் தெரிந்தால் நான் சொல்வது நியாயம் என்று நம்புவீர்கள். நீங்கள் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பாருங்கள். உண்மை புலப்படும். சட்ட திட்டங்களும், சர்க்கார் நிர்வாகமும் தான் இதற்குக் காரணங்கள். இவைகள் மக்களின் நலனுக்காக ஏற்பட்டிருந்தால் இத்தகைய விபரீதங்கள் தோன்ரு. வெறும் சட்டங்களும் திட்டங்களும் பயன்தரமாட்டா. அவற்றை மக்களின் நலனுக்காக எவ்வாறு உபயோகிக்கப்படுகின்றதோ, அதைப் பொறுத்துத்தான் அதன் நன்மை தீமைகளைக் கணிக்க வேண்டியிருக்கிறது.

நமது அடிப்படைக் கொள்கையாவது நாமே இந்நாட்டு மன்னர் நாம் இந்நாட்டுக் கூலிகள் அல்ல. இந்நாட்டில் உள்ள யாவும் யாவையும் நம் வளர்ச்சிக்கும், நம் நன்மைக்கும் குந்தகம் ஏற்படாத நிலையில் அமையவேண்டும். எல்லாம் நமது உடைமைகள். தாய் தந்தையர் எவ்வாறு தன் குழந்தைகளைப் பாதுகாக்கின்றனரோ, அவ்வாறு அரசாங்கமும் நம்மைப் பாதுகாக்கவேண்டும். இதுவே நாம் விரும்பிய அரசாங்கம். நமது சுதந்திர நோக்கமும் எல்லோரும் இன்புற்றிருக்க நிலை தேடுவதல்லாது, ஆண்டானும் அடிமையும் ஏற்படுவதற்காக அல்ல.

அந்தக் காலத்தில் பண்டமே வரியாக இருந்தது. அது பொதுமக்களின் நலனுக்காக வாரி வாரி வழங்கப் பட்டது. இன்று பணம் வரியாக இருக்கின்றது. இது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் அடிப்படையில் அமையவில்லை. ஏகாதிபத்தியம், முதலாளித்துவம் எல்

லாம் இதனையே குறிக்கும். இந்தக்கால முதலாளித்துவத்திற்கும் அந்தக்கால முதலாளி வர்க்கத்திற்கும் அடிப்படையே வேறு. இதை உணர்ந்தால் வள்ளல்களின் பெருமையை உணரலாம், அவர்கள் தீய வழியில் பொருள் ஈட்டவில்லை. அவர்கள் மக்களின் நலனுக்காகவே, பொருளைச் செலவழித்திருக்கின்றனர். இன்று பெரும்பாலும் பணமானது மக்களிடமிருந்து நேரிடையாகவோ, மறைமுகமாகவோ தீய வழிகளில் மக்களின் உழைப்பை அல்லது மூலப்பொருள்களை ஈடாகப் பெறுகின்றது. இதனால் மக்கள் வறுமை அடைந்தனர். மக்களின் உழைப்பின் தரம் தாழ்ந்துவிட்டது. பணம் உயர்ந்துவிட்டது. இதனால்தான் தொழிற்சாலையில் உழைப்பாளிகளின் நிலை வருந்தத்தக்க முறையில் இருந்து வருகிறது. சரியான திட்டத்தில் தொழிற்சாலை அமையவில்லை. அது பணம் எவ்வாறு சம்பாதிப்பது என்ற நிலையிலேயே அமைந்திருக்கிறது.

இந்த நூல் ஆலையை எடுத்துக் கொள்வோம் அந்தக் காலத்தில் இத்தொழிலில் ஏராளமானவர்களுக்கு ஊதியம் கிடைத்து வந்தது. இன்று இயந்திரம் வெளிநாட்டிலிருந்து வரவழைத்துப் பணம் படைத்தவர்கள், ஒரு சிலரின் உழைப்பைப் பெற்று, பெரிதும் வருமானம் அடைகின்றனர். இவர்களுக்குக் கிடைக்கும் வருமானத்தில் அரசாங்கம் பங்குபோடுகின்றதே தவிர, தொழிற்சாலையில் வேலை செய்பவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு ஒழுங்கான திட்டம் அமைக்கவில்லை. தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் பொருள்களின் விலை நிர்ணயமும் தரமும் அரசாங்கத்தால் கட்டுப்படுத்தவில்லை.

இதனால்தான் நிர்வாகத்தினர் வருமானத்தைத் தங்கள் மனம்போல் வீண்விரையம் செய்கின்றனர். பொதுமக்கள் பொருள்களை அதிகவிலை கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. அவர்களின் வாங்கும் சக்தி குறைந்து கொண்டே வருகின்றது.

நம்நாடு கிராமங்களால் ஆகியது. நம் நாட்டில் முக்கிய தொழில் விவசாயம். கிராமங்களில்தான் பெரும்பாலான மக்கள் வாழ்கின்றனர். கிராம மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் கிராமப் பஞ்சாயத்தின் வரவு செலவுத் திட்டங்கள், என்று நன் முறையில் உருவாக்கப் படுகின்றதோ, அன்றுதான் நம் நாட்டு மக்கள் நலம் அடையமுடியும். இன்று மத்திய, ராஜ்ய சர்க்காரின் வரவு செலவுத் திட்டங்கள், மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டது அல்ல. கிராம சர்க்கார் உயர்ந்த பண்பட்ட நிலையில் அமைந்தால்தான், நாம் சுதந்திரம் பெற்றவர் ஆவோம். அதை அடையும் பொருட்டு நாம் உழைப்போம்.

இன்று தயவுசெய்து வேலைக்குப் போகும்படி உங்களைத் தாழ்மையாக வேண்டிக்கொள்கிறேன். ஆலை நிர்வாகிகளைக் கண்டு நம் குறைகளை எடுத்துச் சொல்லி, அவற்றை விரைவில் நிறைவேற்ற ஆவன செய்கிறேன். இன்றுள்ள நிலைக்குத் தக்கபடி தொழிற்சாலை நிர்வாகிகள், தர்மகர்த்தா போன்று நடந்துகொள்ள வேண்டும். அவர்கள் நம் கோரிக்கைகளை மறுப்பின் நாம் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வோம். அதுவரை தயவு செய்து பொறுத்துக் கொள்ளுங்கள். வேலை நிறுத்தமும் கதவடைப்பும் எல்லாம் பயனற்றுப் போய்க் கடைசியாகக் கைபிடிக்க வேண்டிய ஆயுதம். அதனை வீண் விரையம் செய்யக் கூடாது. வாழ்க நம் தொழிற்சங்கம், வாழ்க புண்ணியபூமி, வாழ்க நம் சுதந்திரக் குடியரசு, வணக்கம்". என்று தன் சொற்பொழிவை முடித்துக் கொண்டான், இரகுநாதன்.

பின்னர் சேகரனும் மற்றும் சிலரும் இரகுநாதனை ஆதரித்துப் பேசினர். ஒன்று இரண்டு தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யவேண்டுமென்று வாதாடினார்கள். இரகுநாதன் அவர்களைக் கூப்

பிட்டு வரப்போகும் கெடுதல்களைக்கூறி சற்றுப் பொறுத்திருக்க வேண்டினான். அவர்களும் உடன் பட்டனர். பின்னர் இருபெண்கள் எழுந்து "பஞ்சமும் நோயும் உந்தன் மெய்யடியார்க்கோ, பாரினில் மேன்மைகள் வேறினியார்க்கோ" என்ற பாடலைப் பாடியபின் "வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய பாரத மணித்திருநாடு, வந்தே மாதரம்," என்று தமிழ் தெய்வத்தைப் பாடி, வணங்கினர்.

எல்லோருடைய கண்களிலிருந்து நீர் வழிந்தது. கதிரவன் இத்துக்கத்தைக் காண சகியாது மேகத்தில் மறைந்தான். கூட்டம் கலைந்தது. எல்லோரும் வழக்கம்போல் வேலைக்குச் சென்றனர்.

தொழிற்சங்கம் தொழிலாளர்களின் ஆக்கத்திற்கும் முன்னேற்றத்திற்கும் உழைக்கும் ஓர் நிலையம். தனிப்பட்ட மனிதர்களை ஒன்று சேர்த்து பொது நலனுக்காக அமைந்த இந்த நிலையம் கட்டுப் பாட்டாலும் உயர்ந்த கொள்கைகளாலும் ஓங்கிவளர வேண்டும். இத்தகைய நிலையத்தைச் சில சுயநலமிகள் தங்களின் தன்னலத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ள தொழிலாளர்களின், உழைப்பாளிகளின், தோழன் என்று வந்து விடுகின்றனர். இவர்கள் தீயவழியில் பாட்டாளிகளின் உள்ளத்தைக் கொடிய செய்கைகள் செய்யத் தூண்டிவிடுகின்றனர் •

இதனால் தனிப்பட்ட மனிதன் கெட்டுப்போவதோடல்லாமல், எல்லோருடைய நலனுக்காக உழைக்கும் சங்கமும் பாழடைந்து விடுகின்றது. ஒரு முன்னேற்றக் கழகத்தைக் கெடுக்கவேண்டுமானால், அதனை வளரவிடாது நசிக்கச் செய்ய வேண்டுமானால், அக் கழகத்தில் தீய சக்திகளை உண்டுபண்ணும் நடவஞ்சகர்களையும், சுயநலமிகளையும் நிர்வாகிகளாக இருக்கச் செய்துவிட்டால் போதும். அந்தக் கழகம் சீக்கிரம் தானே செத்து மடியும் இதற்குச் சட்டதிட்டங்களும், காவலும், காராக்கிரகமும் வேண்டியதில்லை.

ஒரு நாட்டின் பொருளாதாரம் உயரக் காரண மாய் இருப்பவை நிலம், உழைப்பு, பணம், நிர்வா கம் ஆகிய நான்காகும். இவைகள் ஒருமித்து உயர்ந்த திட்டத்துடன் வேலை செய்யவேண்டும். இதில் ஏதாவது ஒரு பகுதி சரிவர வேலை செய்ய விலை என்றால் மற்ற மூன்றும் நல்ல முறையில் இயங்குவது மிக்க கடினமும், பொருட்செலவும் ஆகும். ஆகவே நாட்டின் நலனைக் கருதுகின்றவர் கள், நாட்டில் பொருள் உற்பத்தியை விரும்புகின் றவர்கள், இந்த நான்கு அடிப்படைக் காரணங்களை நன்கு உணர்ந்து வேண்டுவன செய்யவேண்டும். அப்பொழுது தான் நாடு செழிக்கும், மக்கள் வாழ்வர்.

இந்த உண்மைத்தத்துவத்தை உணர்ந்த இரகு நாதனும், தனது சொந்த விருப்பு வெறுப்புக் களைக் கொள்ளாது, மக்களின் நலனே தனது நல னெனக்கொண்டு உழைக்கின்றான். இதனால்தான் ஏழைத் தொழிலாளர்களைத் தூண்டி விட்டு, வேடிக்கை பார்க்காது தனது பொறுப்பை உணர்ந்து, தன் கடமையெனச் செய்தான்.

அன்றுமில் நிர்வாகத்தினரை இரகுநாதனும் சேகரனும் கண்டு தொழிலாளர்களின் குறைகளை எடுத்துச் சொன்னார்கள் மேலும் தொழிலாளர் கள் பொருள் உற்பத்தியில் முக்கிய பங்கு உள்ள வர்களாய் இருப்பதால், உயர்ந்த நிர்வாகத்தினர் சொல்லாமலே அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வது நிர்வாகத் திறமையையும், உற்பத்திப் பெருக்கையும் காட்டும் என்றும் கூறினர். நிர்வா கத்தினர்களும் எல்லா உதவிகளும் செய்வதாக வாக்களித்தனர். அதுவரை தொழிலாளர்கள் தங்கள் கடமையை உணர்ந்து. நிர்வாகத்தினருடன் உழைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர். இரகுநாதனும் சேகரனும் அவர்களுக்கு வந்தனம் அளித்துவிட்டு, சுவாமி சத்தியானந்த அடிகளாரின் மடத்திற்குச் சென்றுவிட்டனர்.

## 4

பண்ணையார் இராமலிங்கம், தமிழ் வளர்த்த வள்ளல்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவருக்குப் புத்தூர் கிராமத்தில் பாதிக்குமேல் நிலம் சொந்தமாக இருக்கிறது. இவரது முன்னோர்கள் தென்பாண்டி நாட்டில் குறுநில மன்னர்களாய் ஆண்டு வந்திருக்கின்றனர், கொடையாளிகளாய் வாரி வாரி வழங்கி இருக்கின்றனர்.

அந்தக் காலத்தில் முகமதிய ஆதிக்கம் வலுவடைந்தபொழுதும், உள்நாட்டுக் கலவரமும் கொள்ளைக் கூட்டத்தினர்களின் கொடுமைகளும் உச்ச நிலையில் இருந்த பொழுதும், தங்கள் காவல்காரர்களாகிய வீரமறவர்களை ஆங்காங்கே நிறுத்தி அமைதியை நிலை நாட்டி வந்திருக்கின்றனர், வள்ளலின் குலத்தினர்.

இவர்கள், பிரசித்திப்பெற்ற புண்ணிய தலங்களாகிய சங்கர நயினார் கோவில், குற்றாலம், பாபவிநாசம், திருநெல்வேலி, நான்குநேரி, திருவைகுந்தம், ஆழ்வார் திருநகரி, திருச்செந்தூர், கன்னியாகுமரி, மதுரை, இராமேசுவரம் முதலிய இடங்களுக்குச் செல்லும் யாத்திரிகர்களுக்கு இடையூறுகள் வராது பாதுகாத்தும் அவர்களுக்கு வேண்டும் உதவியும் செய்திருக்கின்றனர். இப்பெருந்தகையாளர்கள் தெய்வத் தமிழ்மொழியின் வளர்ப்புப் பண்ணையாய், கவிஞர்களையும், பண்டிதர்களையும் போற்றி அவர்களுக்கு மானிபங்கள் வழங்கி வந்திருக்கின்றனர்.

வள்ளல் இராமலிங்கரும் தம் குலத்தின் பழம் பெருமையை மங்கவைக்காது, தாய் நாட்டின் பெருமைக்கும், தாய் மொழியின் மேன்மைக்கும் உழைக்கலானார். தேச சேவையில் ஈடுபடுகின்றவர்களுக்குப் பக்கபலமாய் இருந்து, அவர்களுக்குப் பொருள் உதவி செய்வதோடல்லாது, அவர்களின் குடும்பச் சேமத்திற்கும் தன் சொத்தை எல்லாம்

உபயோகித்து வந்தார். இப்பெரியாரின் கொடை யின் மகிமை, கவிச்சக்ரவர்த்தி கம்ப நாட்டாழ் வாரை ஆதரித்த சடையப்ப வள்ளலின் பெருமை யினும் மேம்பட்டு இருந்தது. இத்தியாகக் குடும்பத் திற்குக் கமலம் வந்தது பண்ணில் கலந்த பைந் தமிழ் பாடல் போன்று இருந்தது.

அன்று காலை இரகுநாதனும் சேகரனும் வண் டியில் சென்றபின், கமலமும் கோமதியும் படுக்கை யிலிருந்து எழுந்து தோட்டத்திற்குக் குளிக்கச் சென்றனர். அங்கு எல்லா வசதிகளும் இருக்கின் றன. சிறிது நேரத்திற்குள் இருவரும் குளித்து விட்டு மாளிகைக்குத் திரும்பினர். காலை ஆகாரம் முடிந்ததும் இருவரும் இரகுநாதனின் புத்தகால யத்திற்குள் புகுந்தனர். இரகுநாதன் இல்லை என்பது கமலத்திற்குத் தெரிந்ததால், அங்கு சென்று என்னென்ன புத்தகங்கள் இருக்கின்றன என்று அறிய ஆவல் கொண்டாள். அங்கு உலகப் பெரியோர்களின் நூலெல்லாம் இருக்கின்றன, சாப்பிடும் நேரம் தவிர மற்ற நேரங்களில் இருவரும் புத்தகம் படித்து வந்தனர். மாலை நேரத்தில் இரு வரும் வெளியே உலாவச் செல்வர். கரியமால் அழகர் கோவிலுக்குச் சென்று பெருமாளை வணங்கி வீடுதிரும்புவர். இரவு எட்டு மணிக்குச் சாப்பாடு நடக்கும். பத்துமணிக்குப் படுக்கைக்குச் செல்வர். இதுதான் அவர்களது தினசரி வாழ்க்கைக் குறிப் புக்கள். நாட்கள் பதினைந்தும், நிமிடங்கள் பதி னைந்து போல ஓடி மறைந்தன. கமலம் பாளையங் கோட்டைக்குத் திரும்பிச் செல்ல விரும்பினாள்.

வள்ளல் இராமலிங்கம் இன்னும் சில நாட்கள் தங்கும்படி கமலத்திடம் சொன்னார். புறப்பட்டு வரும்படி பாதிரியார் அவளுக்குக் கடிதம் எழுதி யிருந்தார். வள்ளலுக்கோ அவளை அனுப்பப் பிரியம் இல்லை. அவர் அவளிடம் " இந்த கிருஸ்துவ மதத் தில் சேர்ந்து உன் வாழ்நாளை ஏன் அம்மா வீணாக் கிக் கொள்கிறாய்? உனது சொந்த தருமத்தை விட்டு அன்னிய மார்க்கத்தில் ஏன் சேரவேண்டும்? "

கமலம்: "இளமையிலிருந்து என்னை வளர்த்தது கிருஸ்துவ மடாலயத்தார்தான். என் கல்லூரிப் படிப்பு முடியும்வரை எல்லாச் செலவையும் அவர்களே ஏற்றுக்கொண்டனர். நம் நாட்டில் செல்வக் கோயில்களும் மடங்களும் இருந்தும் என் போன்ற திக்கற்றவர்களை ஆதரிக்க முன் வரவில்லை. எனக்காக உழைத்த கிருஸ்துவ மடாலயத்தாருக்குச்சேவை செய்யக் கடமைப்பட்டவள். கர்த்தரின் திரு உள்ளமும் அப்படியே. எனக்குச் செலவு செய்த பணத்தை எனது உழைப்பால் அவர்களுக்குத் திருப்பித் தரவேண்டும். இல்லாவிட்டால் நான் செய்நன்றி மறந்தவளாவேன்."

வள்ளல்: "நீ போவதால் உனது தோழி கோமதி மிகவும் வருந்துவாள். நீ போகக்கூடாது என்று என்னிடம் பன்முறை சொல்லியிருக்கிருள். உனக்குச் செலவான தொகை எல்லாம் நான் கொடுத்து விடுகிறேன், இக் கிருஸ்துவ மடாலயத்தாருக்கு. நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே அம்மா. உனக்கோ அந்த மார்க்கத்தில் பிரியமும் இல்லை."

கமலம்: "இந்த மார்க்கத்தில் பிரியம் இல்லை என்பது உண்மைதான். இருந்தாலும் ஓர் உபாத்தியாயினியாய் இருந்து அதில் கிடைக்கும் வருவாய் மூலம் கிருஸ்துவ மடாலயத்தாருக்குச் சேரவேண்டிய தொகையைக் கட்டிவிடலாம் என்று நினைக்கிறேன்."

வள்ளல்: "உன் போன்ருருக்குச் சேவை செய்ய ஆண்டவன் எனக்குச் செல்வத்தைக் கொடுத்திருக்கிருர். எல்லாம் நானே பார்த்துக் கொள்கிறேன். இன்னும் பதினைந்து நாட்கள் அனுமதி வேண்டுமென்று பாதிரியாருக்கு எழுதிவிடு. இரகு வந்ததும் உடனே அனுப்பி எல்லாவற்றையும் முடித்து விடுகிறேன். உன் தோழிக்காகச் சம்மதித்து இவ்விடத்திலேயே தங்கி விடு. உனக்கு ஒரு குறையும் வராது."

கமலமும் அதற்கு உடன்பட்டாள். பாதிரியாருக்கும் பதினைந்து நாட்கள் அனுமதி வேண்டி கடிதம் எழுதிவிட்டாள். தன் அருமைத் தோழி கோமதியின் அன்பைக் கண்டு கல்லும் உருகக் கண்ணீர் விட்டாள். வள்ளல் குடுமபத்தினரை வாழ்த்தினாள். அன்பிலே பிறந்து, அன்பிலே வளர்ந்து, அன்பிலே மறைந்த கருத்தரின் கருணை ஒளி வள்ளல் இராமலிங்கத்திடம் பிரதிபலிக்கக் கண்டனள்.

கமலத்தின் பிரயாணம் நின்று போனதால் கோமதி எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தனள். கமலத்தின் மலர்ந்த முகமும், இனிய வார்த்தைகளும் எல்லோரையும் கவர்ந்தன. வேலைக்காரர்கள் அவளிடத்தில் அன்புடன் நடந்து கொண்டனர். வள்ளல் இராமலிங்கரின் குடும்பத்திற்கு ஓர் தெய்வீக மருந்துக் கொடி போன்று தோன்றினாள் அவள். அவ்வீட்டில் உள்ளார் யாவரும் அக்குடும்பத்தில் உள்ளவளாகவே அவளை மதித்து வந்தனர்.

கமலம் மீண்டும் ஓய்வு வேண்டுமென்று எழுதிய கடிதம் கிடைத்ததும் பாதிரியார் அவளை உடனே வரும்படி தந்தி கொடுத்தார். தந்தியைக் கண்டதும் அவள் புறப்பட விரும்பினாள். இராமலிங்கருக்கு அவளை அனுப்பப் பிரியம் இல்லை. அவர் கமலத்தினிடம் "அம்மா, உன்னையும் கோமதியையும் இந்தக் கிராம தபோ வனத்தில் சேவை செய்ய ஏற்பாடு செய்திருக்கிறேன் இது ஒரு சர்வகலா சாலை. இங்கு நம் தெய்வத் தமிழ் மொழி மூலம் உலகில் உள்ள முக்கிய மொழிகளைக் கற்றுக் கொள்ளவும், எல்லாத் தொழில்களையும் சாத்திரங்களையும் விஞ்ஞான முறையில் தேர்ச்சி பெறவும் ஏற்பாடு செய்திருக்கிறது.'

"உன்னை இந்த சர்வகலாசாலையின் நிர்வாகி ஆக்க விருப்பம், பெண்கள் பகுதி உன் தலைமையின் கீழ் இயங்கும். ஆதலால் இந்த அறச்செயலை மறந்து, மறச் செயலை வளர்க்கும் ஆங்கிலக் கல்

லூரியில் வேலை செய்வது உன்னையே நீ ஏமாற்றிக் கொள்கிறாய். கர்த்தரின் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்ட நிலையை உண்டுபண்ணுவதற்குக் காரணமாவாய். நான் சொல்வது சொல்லிவிட்டேன். எல்லாம் உன் பிரியம்'' என்றார்.

கமலம் நீண்ட பெருமூச்சுடன் ''நீங்கள் சொல்வது உண்மைதான். இக் கிராமத்திற்கும், இந்நாட்டிற்கும், தெய்வத் தமிழ் மொழிக்கும் சேவை செய்யவே எனக்கு அளவு கடந்த ஆசை உண்டு. அவைகள் எல்லாம் என் மனப்படி நடக்காது என்று எண்ணினேன். ஆனால் நீங்களோ என் மனதை அறிந்து சொல்லி விட்டீர்கள். அதற்கு நான் கட்டுப்பட்டவள். பாதிரியாருக்கும் இன்றே எழுதி விடுகிறேன்'' என்றாள்.

அன்று வெள்ளிக்கிழமை. எல்லோரும் தங்கள் குலதெய்வமாகிய கோமதி அம்மனைத் தெரிசிக்க சங்கர நயினார் கோயிலுக்கு வண்டியில் புறப்பட்டுச் சென்றனர்.

இத்தலத்தில் உலக நாயகியாகிய பராசக்தி கோமதி அம்பாளாகத் தவக்கோலத்துடன் கருணை புரிகின்றாள். பில்லி, சூனியம், விஷகடி, பைத்தியம் தீராத வியாதி எல்லாம் இத் தேவியின் அருளால் கலங்கிய நீர் தெளிவது போன்று தெளிந்து விடுகின்றது, குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் நீங்கி ஒற்றுமை ஏற்படுகின்றது. எங்கும் மங்களம் பொங்குகின்றது.

இத்தலம் தென்காசி—விருதுநகர் குறுக்கு இருப்புப் பாதையில் இருக்கின்றது. புத்தூரிலிருந்து பதினைந்து மைல்கள் இருக்கும். மோட்டாரும் கோவில்பட்டியிலிருந்து புத்தூர் வழியாக இத் தலத்திற்குச் செல்கின்றது. நெல்லையிலிருந்தும் மோட்டார் இங்கு வருகின்றது ஆடித் தபசுத் திருவிழா இங்கு மிகவும் முக்கியம். பல இடங்களிலிருந்து பக்த கோடிகள் வருகின்றனர். மேலை

மலைக்கு அருகில் இருப்பதால் பார்ப்பதற்கு அழகாய் இருக்கும், இத்தலம்.

வடக்கே பனி மலையில் ஆண்டவன் கௌரி சங்கரனாகக் காட்சி அளிக்கின்றான்; தெற்கே இத் தலத்தில் சங்கர நாராயணனாக, அரி அரனாகத் தோன்றுகின்றான். பாரத நாட்டிலே இத்தலம் அதி உன்னத சித்தாந்தத்தை நிலை நாட்டிக்கொண்டிருக்கிறது. இத்தகைய பெருமை வேறு எங்கும் இல்லை. சிவாநுபூதி பெற்று, தியாகியாய், உலகில் ஓரறிவு முதல் எல்லாம் இன்புற்று வாழத் தனக்கென்று வாழாப் பிறருக்கு உரியாளர்களைத் தோற்றுவிக்கின்றது சங்கர நாராயணனின் தத்துவம். இங்கு ஐந்து தலைநாகம் இருக்கின்றது என ஓர் பரம்பரைக் கதை சொல்லப்படுகிறது. கோயில் முன்புள்ள குளத்தை நாகசுனை என்றும் அழைக்கின்றனர்.

வள்ளலில் வண்டி கோயிலின் முன் வந்து நின்றது. எல்லோரும் இறங்கினர். நாக சுனையில் குளித்துவிட்டு கோயிலுக்குள் சென்றனர். அன்று வெள்ளிக் கிழமை ஆதலால் பக்தர்களின் கூட்டம் அதிகமாகவே இருந்தது. அம்பாளுக்குப் பொன்னாடை உடுத்தி, நவரத்தினங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. அன்னை சோதிர் மயமாய்த் தோன்றிக் கொண்டு இருக்கின்றாள். தீபாராதனை முடிந்ததும் தேவாரம் பாடப்பட்டது. பின் பிரசாதம் கொடுக்கப் பட்டது. இங்கு வடமொழி அர்ச்சனை செய்வது இல்லை. இந்தப் பழக்கம் இடைக் காலத்தில் சில தீயசக்திகளால் ஏற்படுத்தப்பட்டதால் இத்தகைய சம்பிரதாயத்தை, ஆலய நிர்வாகிகள் நீக்கிவிட்டனர். மேலும் இத்தகைய செய்கை மதத்தின் உண்மைத் தத்துவத்தை உணராத சில சுயநலமிகளால் உண்டாக்கப்பட்டது. இதற்கு உடந்தையாக அன்னிய ஆட்சியினர் இருந்து வந்தனர். இதனால் தெய்வத் தமிழ் தாழ்வுற்றது.

வள்ளலின் குடும்பத்தினர் கோயிலை வலம் வந்து வணங்கி, புத்தூர் திரும்பி விட்டனர். இரவு ஒன்பது மணி இருக்கும். சாப்பிட்டபின் சிறிது நேரம் எல்லோரும் பேசிக்கொண்டிருந்தனர். பின் படுக்கைக்குச் சென்றனர்.

தமிழ் நாட்டிலே கோயில்களின் பெருமையும் அதன் உன்னத நோக்கும் மனித வாழ்க்கை தியாக பீடமாய் அமைய எடுத்துக் காட்டாக இருக்கின்றன. எல்லாம் ஆண்டவனின் உடைமைகள். அவன் தியாகம் செய்வதற்காகவே செல்வந்தர்களை, தன் பக்தர்களை, உண்டுபண்ணுகின்முன். அவர்கள் தர்மகர்த்தர்களாய் வாழ்கின்றனர். நாட்டில் எல்லோரும் இன்புற்றிருக்கச் சேவை செய்யவே கோயில்கள் தோன்றியிருக்கின்றன. ஆனால் இன்று அவைகள் தோன்றும் நிலையைக் காண உள்ளம் குமுறுகின்றது. ஆண்டவனின் ஆலயத்திலா கொடிய அநீதிகள் நடக்கவேண்டுமென்று கண் அனல் கக்குகின்றது. இந்தப் பழியிலிருந்து நீங்கி நம் நாட்டுக் கோயில்கள் எல்லாம் தெய்வமணமாகக் கமழவேண்டும். அதுவே நாம் செய்யும் நல்லறமாகும். அதுவே மனித வாழ்க்கையின் மாண்பும் ஆகும்.

செல்வத்தின் பெருமை கொடையினுல் கொண்டாடப் படுகின்றது. அறிவின் பெருமை தியாகத்தினுல் விளங்குகின்றது. பெண்ணின் பெருமை கற்பினுல் திகழ்கின்றது. குலத்தின் பெருமை ஒழுக்கத்தால் மேம்படுகின்றது. தெய்வத்தின் பெருமை தெள்ளுதமிழ்ப் பாடலால் தெளிவடைகின்றது.

## 5

சாது சத்தியானந்த அடிகள் ஓர் சித்தி பெற்ற மகான். தெய்வத்தமிழ் மொழியில் வல்லமை பெற்றவர், சமஸ்கிருத பாஷையில் பாண்டித்தியம் உடையவர், ஆங்கிலமொழிப் புலமை உள்ளவர்,

இந்தி, வங்காளி பாஷையில் ஆற்றல் மிக்கவர். புதுச்சேரியில் மகான் அரவிந்த மகாஷியின் ஆசிரமத்தில் சிறிது காலம் யோகம் பயின்றார். பின் திருமங்கை நகரம் என்று போற்றிப்புகழும் செண்பக வனமாகிய கோவில்பட்டிக்குச் சற்று வடமேற்கில் உள்ள அத்தம்கொண்டான் என்ற குக் கிராமத்தில் ஓர் ஆசிரமம் கட்டி வாழ்ந்து வருகின்றார். எதிர் காலத்தில் ஒருவனுக்கு நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளையெல்லாம் தன் யோக சித்தியினால் முன்னதாகவே சொல்லும் ஆற்றல் சுவாமி அவர்களுக்கு உண்டு. அன்னாரின் உபதேசங்களின்படி நடக்கின்றவர்கள் மலை போன்ற இன்னல்களைப் பனிப்போல் நீக்கிவிடுகின்றனர்; தீராத நோயெல்லாம் தீர்ந்து விடுகின்றன; பட்டமரங்களும் தளிர்த்து விடுகின்றன. அட்டமாசித்தி பெற்ற இம்மகானின் பெருமை கடலினும், மலையினும் மாணப் பெரிது.

இப்பெருந்தகையார் சொற் பொழிவு ஆற்ற ஆரம்பித்து விட்டால் மடை திறந்த வெள்ளம் போன்று தேனினும் இனிய சொற்கள் பெருக்கெடுத்து ஓடும். இம்மகானின் அறிவின் மேன்மையும், சொல்லின் வளமும், ஆராய்ச்சித்திறனும், ஒழுக்கத்தின் உயர்வும், பாமர மக்களையும் பண்டிதர்களையும், தியாகிகளையும் தேசபக்தர்களையும், ஒன்று சேர்த்து செயற்கரிய செய்து விடுகின்றன.

இரகுநாதனும் சேகரனும் கோவில்பட்டி நூல் ஆலையிலிருந்து புறப்பட்டுச் சுவாமி அவர்களின் மடத்திற்குச் சென்றது வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். இருவரும் அடிகளாரைக் கண்டு கோனிலை திரிந்தும் கோடை நீடினும் தானிலை திரியாத் தண்டமிழ் தெய்வத்திற்குச் செய்யவேண்டிய ஆக்கவேலையைப்பற்றிச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

அடிகளார் அன்று இரவு தமிழர் தெய்வம் முருகப்பெருமானின் தலமாகிய, யாவரும் போற்றிப் புகழும் பழநியம்பதியில், இறைவனின் திருக்

கோயில் மண்டபத்தின் முன் ''பழமுதிர்சோலைமலை கிழவோனே'' என்ற பொருள்பற்றி பேருரை ஆற்ற ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததால் புறப்படத் தயாரானார். இரகுநாதனும் சேகரனும் சுவாமி அவர்களுடன் வண்டியில் ஏறி கோவில்பட்டி இர யில் நிலையத்தை அடைந்தனர்.

நெல்லையிலிருந்து சென்னை நோக்கிச் செல்லும் துரித வண்டித்தொடர் காலை பத்து மணிக்கு வந்ததும் மூவரும் மூன்ருவது வகுப்பில் ஏறிக்கொண்ட னர். தொடர் வண்டியும் மாலை ஆறு மணிக்குப் பழநியம்பதியை அடைந்தது. அடிகளாரையும் சீடர்களையும் ஆலய நிர்வாகிகள் வரவேற்றனர். பின் எல்லோரும் மோட்டாரில் மலை அடிவாரத்தை அடைந்தனர். அடிகளார் தங்குவதற்காக இடம் ஏற்பாடு செய்திருந்தது. அங்கு எல்லோரும் இறங் கினர். சுவாமி அவர்களும் நீராடி பூசை பாராய ணம் முதலியவை முடித்துக்கொண்டு இரவு ஏழு மணிக்கு ஆண்டவனைத் தெரிசிக்கத் தன் சீடர் களுடன் மலைமீது ஏறினர். எங்கும் 'முருகா, முருகா, முருகா என்ற ஞான மந்திரத்தின் பேரொலி விண்ணையும், மண்ணையும் ஒன்று சேர்த்து பக்தர்களின் இதயத்தில் நின்று ஒலித்துக் கொண்டிருந்தது.

அன்று பௌர்ணமி தினமாதலால், சந்திர தேவன் ஆனந்தமயமாய்த் தோன்றிக்கொண்டு இருந்தான். நாற் புறங்களிலும் சோலையால் சூழப் பட்டு, நடுவில் மலையும் அதன் உச்சியில் தமிழ் தெய்வத்தின் திருக்கோயிலின் இயற்கை அழகை யும் கண்டு களிக்க, ஆயிரக்கணக்கான மக்கள் பல இன்னல்களையும் பொருட்படுத்தாது செல்லும் காட்சி, கண்டோர் மனதைக் கொள்ளைகொள்ளும்.

வற்ருத பொய்கையும், வளநாடும், பசுமை நிறைந்த வயல்களும், தோட்டங்களும், மயில்களின் ஆடலும், குயில்களின் இன்னிசையும், அருகில் ஓடும் சண்முக நதியின் ஓங்கார ஒலியும், பக்தர்

களின் தெய்வீகப் பாடல்களும் நாத்திகர்களையும் சிறந்த பக்தர்களாக்கி விடும், புலன்களின்மீது சென்று அலையும் மனதைக் கட்டுப்படுத்தி அமைதியை உண்டு பண்ணும்

முருகப் பெருமானின் சந்நிதியை அடைந்ததும், அடிகளாரும் சீடர்களும் கீழே விழுந்து வணங்கி எழுந்து இருகை கூப்பி, உளம் புளகாங்கிதமடைய, மயிர் சிலிர்க்க, மெய்மறந்து, "இறைவா, உன்கைப் பிள்ளை, உனக்கே அடைக்கலம்" என்று நின்றனர். அரையில் காவி உடை தரித்தும், உடம்பெல்லாம் வெண்ணீறு பூசியும், கண்ணீர் பெருக்கெடுக்க இறைவனை நோக்கி முனிவர் பெருமான் நின்ற காட்சி அன்று தெள்ளுதமிழ் பாடல் தெளிவோனுகிய முருகப்பெருமானின் அருளைப்பெறும்அருணகிரிநாதர் போன்றும், திருமுருகாற்றுப்படை பாடி புகழ் உடம்பு பெற்ற நக்கீரனார் போன்றும் இருந்தது.

தீப வழிபாடு நடக்க ஆரம்பித்து விட்டது. பேரிகைகள் முழங்கின, வாத்தியங்கள் இயங்கின, மணிகள் ஆடின. முருகப்பெருமானின் சந்நிதானத்தில் ஏராளமான கூட்டம். "முருகா, முருகா, பன்னிருகையா, கந்தா, குகா, கலியுகவரதா, கார்த்திகேயா, சண்முகா, சிவசுப்பிரமணியா, பழநி ஆண்டவா, சரவணபவா, ஆறுமுகா," என்று அழைக்கும் இதய கீதம் கல்நெஞ்சையும் கரைத்து விடும். அருணகிரி செந்தமிழ், குருபரர் நற்றமிழ், பிள்ளைத்தமிழ், நக்கீரர் பைந்தமிழ் பாமாலைபாடி மகிழ்வோர் எத்தனையோ பேர்கள்.

திருப்புகழ் பாடினதும், விபூதி பிரசாதங்கள் கொடுக்கப்பட்டன. அடிகளார் விருதுகளுடன் மேளவாத்தியங்கள் முழங்க, கோயிலை வலம் வந்து கோயில் காரியாலயத்தை அடைந்தனர். பின் எல்லோருக்கும் அறுசுவை உண்டி கிடைத்தது. இதற்கு முன் ஒரு குறிப்பிட்ட இனத்தினர் மட்டும் இதனை அனுபவித்து வந்தனர். அடிகளார் இதனை

ஆட்சேபித்ததால் பக்தகோடிகள் எல்லோருக்கும் பேதாபேதமற்ற ஆண்டவன் முன்னிலையில் நின்று அமுது கிடைத்தது. இதுவே முதல் தடவை ஆகும்.

இரவு எட்டு மணி இருக்கும். அடிகளார் சொற்பொழிவு மண்டபத்திற்கு வந்தனர். மண்டபத்தில் மக்கள் கூடிவிட்டனர் "கைத்தல நிறைகனி" என்ற திருப்புகழை ஓதுவார் குழாம் பண்ணுடன் பாடினர். பின் அடிகளார் முருகனைத்தியானம் செய்து பேருரையைத் தொடங்கினார்.

முருகனது அவதார மகிமையும், அவனது ஆறு படை வீடுகளின் அமைப்பும், அவனது திருவிளையாடல்களின் பெருமையும் விஞ்ஞானத்திற்கும் எட்டாத, அதி உன்னதமான ஞான வெள்ளமாய்த் தோன்றிக்கொண்டு இருக்கின்றன. இதனை உலகாயுதர்கள் நன்கு உணராது, அறியாமையில் மூழ்கி, பல இன்னல்களுக்கு ஆளாகின்றனர். ஞானம் என்ற வேலினால் மக்கள் தங்கள் தீய செய்கைகளிலிருந்து விடுபட்டு, அசுரத் தன்மையை உண்டு பண்ணும் காரியங்களில் ஈடுபடாது, தேவர்களாக, அமரவாழ்க்கையைப் பெற்றுத் திகழ்வதே முருக வழிபாடு ஆகும்.

முருகனது திருக்கோயில்கள் எல்லாம் தமிழ் நாட்டில் தான் இருக்கின்றன. "சேயோன் மேய மைவரை உலகம்" என்று குறிஞ்சித் தெய்வமாக, மலையும் மலை சார்ந்த இடத்தின் கடவுளாகக் கொண்டது தமிழ் நாட்டின் கலைச் செல்வத்தின் அதி உன்னத நிலையைக் காட்டுகின்றது. முருகன் கோயில் கொண்ட இடமெல்லாம் முருகு தவழும். அங்கு இயற்கை அன்னை பராசக்தி தன் அருமைப் பாலகனுடன் கொஞ்சிக் குலாவிக் கொண்டு இருப்பள். இத்தெய்வீகக் காட்சியைக் கண்டு நம் மனம் எல்லையற்ற அமைதியையும், ஆனந்தத்தையும் அடைகின்றது.

இந்தக் காலத்தில் மக்கள் எவ்வாறு இயற்கைக் காட்சிகளைக் காணப் பல இடங்களுக்குப் போகின்

றனர்களோ, அம்மாதிரியாகவே நம் முன்னோர்கள் இத்தகைய கோயில் வழிபாட்டினை அமைத்திருக்கின்றனர். இதனால் அறிவு விசாலமடைகின்றது, ஆற்றல் அதிகப்படுகின்றது.

பல்லாயிரம் வருடங்களாகத் தவம் செய்து சிவபெருமானிடம் வரம் பெற்ற சூரபதுமனும் அவனது தம்பியும் மூன்று உலகத்தையும் ஒரு குடைக்குள் அடக்கி யாவரும் அஞ்சும் வண்ணம் அரசாண்டனர்; தருமத்தை அழித்து அதர்மத்தை வளர்த்தனர். இவர்கள் நல்லவர்களையும் நேர்மையாளர்களையும் துன்பப் படுத்தினர். இவர்கள் செய்த கொடுமைகளுக்கோ அளவு இல்லை. கடைசியில் முருகப்பெருமான் தோன்றி இக்கொடியவர்களை அழித்து விட்டார். இவர்கள் சகல வல்லமை உடையவர்களாய் இருந்தும் தங்கள் சக்தியை நல்வழியில் புகுத்தாது தீய வழியில் செலுத்தினதால், தருமம் இவர்களை நிர்மூலப்படுத்தி விட்டது. இவர்களது சக்திகள் எல்லாம் தீயினுக்கு இரையாயின.

இந்தக் காலத்தில் அணுசக்தி, நீர்சக்தி முதலியவைகளால் உலகில் நாசம் உண்டாக்கும் ஏகாதிபத்திய வெறியர்கள் முற்கூறிய அசுர பரம்பரையினர் அல்லாது வேறு யாரும் இல்லை. இத்தகைய தீய சக்திகள் ஒன்று திரண்டாலும் ஒரு சூரபதுமனுக்கு இணையாகா ஆகவே இக்கொடியவர்களை, வஞ்சகர்களைத் தொலைக்கத் தரும தேவதையினால் முடியாது போகுமோ?

நம்மைக் காக்க குன்றுதோறும் ஞானபண்டிதன் இருந்து வருகின்றான். வடக்கே திருவேங்கடத்தில் நெடியமால் அசுரர்களையும் இராக்கதர்களையும் அழிக்கப் போர்க் கோலத்துடன் நிற்கின்றான். தெற்கே கன்னியாகுமரியில் அன்னை பராசக்தி, கன்னித் தமிழ்த்தாய் தன் குழந்தைகளின் சேமத்திற்காகத் தவம் செய்து கொண்டிருக்கிறாள் தமிழ் நாட்டின் எல்லையை உணர்த்தவந்த இலக்கிய கர்த்தர்கள் அங்கு இறைவனைத் தோற்றிவைத்துத்

தமிழ்நாடு தெய்வ பூமியாய் முக்காலமும் தோன்ற வேண்டுமென்ற காரணத்தினால்தான். உலகில் தீய தெல்லாம் ஆழ்க, அறமே ஓங்க, யாவரும் இன்புற்றிருக்க அன்புப் பணியை நம்நாடு இனி ஏற்றுக் கொள்ளும். இது திண்ணம், இது உண்மை, வெறும் புகழ்ச்சி அல்ல.

அடிகளார் குறிஞ்சித் தெய்வத்தை சங்கநூல் களும், ஞானிகளும், மகான்களும் புகழ்வதை எடுத்துக் கூறினர். பல உவமைகளுடன் இறைவனின் தோற்றத்தையும், அவனை அடையும் வழியையும் வெகு அழகாகப் பாமரமக்களும் கொண்டாடும் படி, எளிய செந்தமிழ் நடையில் சொல்மாரி பொழிந்தனர்.

இறைவனைக் குறித்த சொல்லில் "முருகா" என்ற சொல்லே எல்லா மொழிகளிலும், எல்லா மதங்களிலும் குறிப்பிடும் சொற்களைவிட மிக மிக உயர்ந்தது, பொருள் நிறைந்தது. வேத மந்திரத்தின் சொரூபனும்,ஞான பண்டிதனும், அழகுக்கு அழகாயும், அறிவிற்கு அறிவாயும், ஆண்மைக்கு ஆண்மையாயும், சச்சித் ஆனந்தமாய் விளங்கும் தெய்வம், முருகன் ஒருவன்தான்.

இறைவன் எங்கும் எம்மொழியினும் பேசப் படுகின்றான்; பலவகைத் தோற்றத்தில் காணப் படுகின்றான்; ஆனால் இவற்றின் தலைமை நிலையில் நிற்பது முருகனின் தோற்றமும் அவன் கோயில் கொண்ட இடங்களும்தான். இவற்றிற்கு இணை உலகில் ஒன்றும் இல்லை.

கொடிய அசுரர்களாகிய வஞ்சகர்களையும், பாதகர்களையும் கொன்று தருமத்தை நிலை நிறுத்த, பக்தர்களின் யோகச் சேமம் தனது எனக்கொண்ட ஆண்டவன், பழநியம்பதியில் கௌபீனதாரியாக, தண்டாயுதபாணியாக, ஆண்டியாக, முற்றத் துறந்த முனிவராகத் தோன்றும் காட்சி உலக இலக்கியங்களிலே, உலக மதங்களிலே, முதல்இடம் பெறுகின்றது.

"ஈதல், பூசனைபுரிதல், ஓதல், குல ஆசாரம், நீதி, ஈர நெஞ்சம், ஞானிகளைத் தொழுதல், முதலான நற்பண்புகளை மறவாது இருக்க வேண்டுமென்பது முருகனின் கட்டளை. எல்லோரும் முருகனின் அடியாராய், அவன் ஆணையின்படி நடக்கவேண்டும்," என்று அடிகளார் மிக அன்புடன் வேண்டிக் கொண்டார், கடைசியாக "பரமபதமாய செந்தில் முருகனெனவே உகந்து பழநிமலைமேல் அமர்ந்த பெருமாளே", என்று தமிழ் தெய்வத்தை வாழ்த்தி, தன் சொற்பொழிவை முடித்துக் கொண்டார்.

அன்று கூடியிருந்தார் யாவரும் முருகனை நேரில் கண்டதுபோல் பரமானந்தம் அடைந்து முருகனது அருளையும், தமிழ் பெரியாரின் சொல் வன்மையையும், கல்வி சொல்ல வல்ல நல் வித்தை யையும் போற்றினர். திருப்புகழ் பாடப்பட்டதும் கூட்டம் இனிது முடிந்தது. பின் அடிகளார் தன் சீடர்களுடன் தங்கியிருக்கும் இடத்திற்குச் சென்று விட்டார்.

தமிழ் நாட்டிலே கோயில்கள் எல்லாம் தமிழ் மணம் கமழ ஏற்பட்டவைகள். அவற்றிற்கு ஏராள மான சொத்துக்கள் இருக்கின்றன. இவற்றை நல் வழியில் செலவிடவேண்டும். உலகெங்கும் தெள்ளு தமிழ் பாடல் தெளிவோனாகிய முருகனின் பெருமை பரவவேண்டும். இதற்காக நாம் விடாது உழைப் போம். இதுவே நமது கடனாக இருக்கட்டும்.

## 6

கமலத்தைக் கிருஸ்துவ மடாலயத்தின் பெண் கள் விடுதியில் சேர்த்து விட்டுத் தன் மனைவி யுடன் மலேயா சென்ற சுந்தரம், கோலாலம்பூர் வந் ததும் ஒரு தொழிற்சாலை நிர்வாகியின் வேலையை ஒப்புக் கொண்டது ஞாபகம் இருக்கலாம். அதில் மூன்று வருடங்கள் திறம்பட வேலை செய்து நன்மதிப்பையும் பெற்றார். பின் அதி லிருந்து விலகி, " சுந்தர் கம்பெனி " என்ற பெய

ருடன் வியாபாரம் செய்யத் தொடங்கினுர். அதில் ஆண்டு தோறும் அதிக வருமானம் கிடைத்து வந்தது.

கோலாலம்பூர் வந்த இரண்டாவது ஆண்டில் சுந்தரத்தின் மனைவிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. இக் குழந்தைக்குக் 'குமரன்' என்ற பெயரிட்டு மிகப் பிரியமாக வளர்த்து வந்தனர். செல்வமும் நாளுக்கு நாள் பெருக்கெடுத்து வந்ததால், இக் குடும்பம் ஆனந்தமாகவே இருந்து வந்தது.

சுந்தரமும் அவரது மனைவி செண்பகா தேவியும் கமலத்தை நினைத்து அடிக்கடி வருந்தினர். குழந்தைப் பருவத்திலேயே தாய் தந்தையற்ற கமலத்தைக் கிருஸ்துவ மடத்தில் விட்டு வந்தது பெரிய பாதகம் என நினைத்தனர். அவர்களது இதயத்தை இந்த எண்ணம் அலை அலையாகத் தாக்கிக்கொண்டிருந்தது. சுந்தரத்தின் மனைவி தன் அக்காளுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ருததால் உலைத் தண்ணீர் போன்று துடித்தனள்.

எப்படியாவது சுந்தரம் கமலத்தைக் கோலாலம்பூர் அழைத்துவர முயன்ருர். ஆனுல் இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பித்து விட்டதால், அவரால் அழைத்துவர இயலவில்லை. தமிழ் நாட்டில் உள்ள தன் நண்பர்களுக்கெல்லாம் கடிதங்கள் அனுப்பிக் கமலத்தைப் பார்த்துக்கொள்ள வேண்டினுர். கிருஸ்துவ மடாதிபதிக்கே பல கடிதங்கள் அனுப்பியுள்ளார். அவளது நலனுக்காக கிருஸ்துவ மடத்திற்கு ஐயாயிரம் ரூபாய்க்குமேல் அனுப்பியிருக்கிருர். இந்த விபரங்கள் ஒன்றும் கமலத்திற்குத் தெரியாது. தன் சித்தியும் சித்தப்பாவும் தன்னை மறந்து விட்டனர், என்று நினைத்தது அவளது குழந்தை உள்ளம்.

கமலத்தின் நினைவிற்காக கோலாலம்பூரில் ஒரு உயர்நிலைப் பள்ளியைச் சுந்தரம் தோற்றி வைத்தார். ''கமலா வித்யாலயம்'' என்று இதற்குப் பெயர். இந்த நிலையத்திற்குச் சுந்தரம் மூன்று லட்

சம் வெள்ளிகள் நன்கொடை எழுதி வைத்தார். மலேயாவில் ஒரு பெரிய ரப்பர் தோட்டத்தை விலைக்கு அவர் வாங்கி இருந்தார் அதன் முழு உரிமையையும் இந்த உயர்நிலைப் பள்ளிக்கே அவர் அளித்து விட்டார். இதில் ஆயிரத்திற்குமேல் இந்திய மாணவ மாணவிகள் கல்வி கற்கின்றனர். பின் இந்த உயர்நிலைப்பள்ளி ஒரு சர்வ கலாசாலையாகவும் மாறி விட்டது. கீழை நாட்டு மொழிகளும், மேலை நாட்டு மொழிகளும் இங்கு கற்பிக்கப்படுகின்றன. இச்சர்வ கலாசாலையின் போதனா மொழி தமிழ் தான். எனினும் மாணவ மாணவிகளுக்கு ஆறு மொழிகளில் நன்றாய் எழுதவும் பேசவும் தெரியும். கல்லூரிப் படிப்பு முடியும் வரை எல்லோருக்கும் இலவச உணவு, உடை, வசதிகள் அளிக்கப்படுகின்றன. எல்லோரும் கல்லூரி விடுதியிலேயே தங்க வேண்டும்.

அந்நிய நாட்டு வியாபாரத்தில் குறைந்தது ஐம்பது லட்சம் ரூபாய்க்கு மேல் சுந்தரத்திற்கு மூலதனம் பெருகிவிட்டது. பெரிய ரப்பர் தொழிற்சாலை ஒன்று சொந்தத்தில் நடக்கின்றது. சுந்தரம் மலேயாவில் பல இடங்களில் உள்ள தரும நிலையங்களுக்கு ஆயிரக்கணக்கான வெள்ளிகள் தானம் செய்திருக்கின்றார். இருந்தாலும் அவருக்கு மனம் நிம்மதி இல்லை. "தாய் நாடு சென்று தன் அருமைச் செல்வி கமலத்தைப்பார்க்கவேண்டும், அவளுக்கு எல்லாவித மங்களமும் உண்டாகவேண்டும்; தன் பிறந்த கிராமமாகிய புத்தூர் கிராமம் உலக சரித்திரத்தில் முதல் இடம் பெறவேண்டும்; தெய்வத் தமிழ்மொழி உலகெங்கும் பரவ வேண்டும்'; இந்த எண்ணங்கள் சுந்தரத்திற்கு நந்தா விளக்காகத் தோன்றிக்கொண்டு இருந்தன. இதனால் சுந்தரம் மலேயாவில் தனக்குச் சொந்தமான சொத்துக்களை விற்று விட்டுத் தாய் நாடு திரும்பத் திட்டமிட்டார் அதனால் அவர் தன் வியாபாரத்தை நிறுத்திக் கொண்டு, தன் சொத்துக்களை விற்கத் தொடங்கினார். இதில் அவருக்கு எழுபத்தைந்து

லட்சம் வெள்ளிகள் கிடைத்தன. இதிலிருந்து இருபத்தைந்து லட்சத்தைக் கமலா சர்வகலா சாலைக்கு மானியமாக அளித்து, அதனை நிர்வகிக்க ஒரு செயற்குழுவையும் நியமித்தார். மலேயா அரசாங்கத்தின் பிரதி நிதிகள் இருவர் இதில் இடம் பெறுவர்.

சுந்தரம் தன் செலவிற்கு மட்டும் கொஞ்சம் தொகையை எடுத்துக்கொண்டு மீதியைத் திருநெல்வேலியில் உள்ள இம்பீரியல் பாங்கின் கிளைக்காரியாலத்திற்கு மாற்றுதல் செய்தார். பின் ஒரு நன்னாளில் தன் மனைவி, மகன், சில முக்கிய நண்பர்களுடன் விமானத்தின் மூலம் கொழும்பு வந்து, அங்கிருந்து கப்பலில் தூத்துக்குடி வந்து சேர்ந்தார் சுந்தரம் தன் நெருங்கிய உறவினர் இல்லத்தில் சிறிது நேரம் தங்கிவிட்டு உடனே தன் குடும்பத்துடன் புத்தூர் வந்து விட்டார்.

சுந்தரத்தின் வீடு வள்ளல் இராமலிங்கரின் மாளிகைக்குத் தெற்கில் சற்று தூரத்தில் இருக்கிறது. பல ஆண்டுகளாகப் பழுது பார்க்காததால் பல இடங்களில் இடிந்து கிடந்தன. சுவர்கள் வெடித்தும் இருந்தன. எப்படியிருந்தாலும் தன் முன்னோர்களின் வீடு என்ற காரணத்தினால் அந்த இடத்திற்கே வரப்பிரியப்பட்டார். இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் ஒரு நவீன மாளிகையாக அந்த வீட்டை ஆக்கத் திட்டமிட்டார். அவருக்கோ செல்வத்திற்கு என்ன குறைவு.

நவீன பணக்காரர் போன்று சுந்தரம் பட்டணங்களைத் தேடிப் போகவில்லை. தன் பிறந்த கிராமத்திலேயே தன் முன்னோர்களின் பெருமையை வாழையடி வாழையாய்ப் போற்றவேண்டுமென்ற எண்ணம், கல்லில் எழுதிய எழுத்துப் போன்று பதிந்து இருந்தது. தன்னைப் போன்றவர்கள் அக்கிராமத்தைப் புறக்கணித்துவிட்டுக் கேவலம் பட்டண சுகவாசத்தை விரும்பிப் போவது நாட்டுக்குச் செய்யும் துரோகம் என்பது அவரது

கொள்கை. செல்வமும் சிறப்பும் பொருந்தியவர்கள் கிராமத்தை விட்டு வெளியேறிஞல் அக்கிராமம் நந்தவனம் அழிந்தது கழுதை மேய்ந்தது போன்று ஆய்விடும், அதனுல் தான் சுந்தரம் புத்தூர் கிரா மத்திற்கே வரநேரிட்டது.

நெடு நாட்களாகக் காணுது திடீரென்று வந்து சேர்ந்த சுந்தரத்தின் குடும்பத்தினரை நலம் விசாரிக்க அக்கிராமத்தில் உள்ள முக்கியமான வர்கள் வந்தனர். சுந்தரமும் அவரது மனைவியும் எல்லோரையும் அன்புடன் உபசரித்தனர். அறு சுவைஉண்டியும், உடையும் எல்லோருக்கும் அளிக் கப்பட்டன.

அன்று மாலை சுந்தரம், வள்ளல் இராமலிங் கரைக்காண்பதற்கு அவரது மாளிகையை அடைந் தார். கமலம் அங்கு வந்திருப்பது அவருக்குத் தெரி யாது. அவர் வரும் பொழுது கமலமும் கோமதியும் மாளிகை முன்புள்ள பூந்தோட்டத்தில் நாற்காலி யில் உடகார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். கமலத் தின் கையில் கவிச் சக்கரவர்த்தி கம்பநாட்டாழ் வாரின் இராமாயணமும், கோமதியின் கையில் வால்மீகி முனிவரின் இராமாயணமும் இருந்தன. இவ் இரு இலக்கியங்களின் பெருமையைப் பற்றி இருவரும் பேசிக் கொண்டிருந்தனர் அந் நேரத்தில்.

"கம்பன் பிறந்த தமிழ் நாடு" என்று போற்றிப் புகழ்கின்ருேம், தாய்நாட்டை எவ்வாறு விஞ்ஞா னம் வளர்ந்து வருகின்றதோ, அவ்வாறு தமிழ்ச் செல்வத்தின் பெருமை விஞ்ஞான முறையில் வளர்ந்து வருவதை இவ் இரு இலக்கியங்களில் இருந்தே நன்கு உணரலாம்.

அகில இந்திய அடிப்படையில் பாரத நாடுமுழு வதும், இமயம் முதல் குமரி வரையும், கடல்கடந் தும், போற்றிப் புகழும் கதாநாயகனைத் தமிழில் தலைசிறந்த முறையில் சித்தரித்தது கம்பநாட்டாழ் வார்தான். இராமக் கதை இந்திய மொழிகளில்

எல்லாம் இருந்தும் இப்பெருமை அவற்றிற்கு இல்லை.

கோமதியும் கமலமும் இராமாயணத்தைப் பற்றிப் பெருமையாகப் பேசிக்கொண்டு ஆங்கில இலக்கியங்களில் தலை சிறந்தவற்றை இதனுடன் ஒப்பிட்டும் வந்தனர். கடைசியில் உலகிலேயே உயர்ந்த கவிஞர்கள், உயர்ந்த எழுத்தாளர்கள், தமிழ் நாட்டில் தான் தோன்றியிருக்கின்றனர் என்று அவர்கள் முடிவிற்கு வந்தனர்.

இந்நேரத்தில் தான் சுந்தரம் மாளிகைக்குள் நுழைந்தது. அவரைக் கண்டதும் இருவரும் தங்கள் பேச்சை நிறுத்திக் கொண்டு எழுந்தனர். கோமதி உள்ளே சென்று தன் அப்பாவிடம், "அப்பா, யாரோ வருகிறார்கள்" என்றாள்.

கமலமும் சுந்தரத்தைப் பார்த்த உடன் திகைத்து நின்றுகொண்டிருந்தாள். சுந்தரமும் அவளைக் கண்டதும் திடுக்கிட்டுவிட்டார். 'கமலம் தானோ' என்று கூட நினைத்து விட்டது அவரது வெள்ளை உள்ளம், கமலம் இங்கு வருவதற்குக் காரணம் இல்லை. அவளைப்பற்றி அடிக்கடி நினைப்பதால் இத்தகைய எண்ணம் உதிக்கின்றது," என்று தனக்குத்தானே சமாதானம் செய்து கொண்டார். இதற்குள் வள்ளல் இராமலிங்கரும் வெளியில் வந்தார். சுந்தரம் அவரை வணங்கவே வள்ளலும் வணக்கம்செய்து, "வாருங்கள், வாருங்கள், எல்லோரும் சௌக்கியமாக இருக்கின்றீர்களா. நீங்கள் வந்து விட்டதாகத் தகவல் வந்தது. எனக்கு மிக்க மகிழ்ச்சி". இருவரும் நாற்காலியில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். கோமதியும் கமலமும் மாளிகைக்குள் சென்றுவிட்டனர்.

சிறிது நேரத்திற்குள் இரு வெள்ளித்தட்டு களில் தின்பண்டங்கள் இருவரின்முன்பும் வைக்கப் பட்டன. அவர்கள் சாப்பிட்டுக்கொண்டே பேசிக் கொண்டிருந்தனர். சுந்தரம் பெரிய பணக்கார ராய்த் தாய் நாடு திரும்பியதும், அதிலும் தன் கிரா

மத்திற்கே வந்திருப்பதும் வள்ளலுக்கு எல்லையற்ற ஆனந்தம் ஏற்பட்டது. பால் வந்ததும் இருவரும் அருந்திவிட்டு வெளியே உலாவச்சென்றனர்.

சுந்தரம் தன் மலாய் நாட்டு அனுபவங்களையும் அந் நாட்டின் செல்வப் பெருக்கையும் அந் நாட்டில் உள்ள மக்களின் சுபீட்சத்தையும், ஜப்பான், சீனு முதலிய நாடுகளின் முன்னேற்றத்தையும் உணர்ச்சியுடன் எடுத்துரைத்தார். இவற்றை எல்லாம் கேட்க வள்ளலுக்குத் தெவிட்டாத அமுதம்போன்று இருந்தது.

சுந்தரம் தன் வெளிநாட்டுச் செய்திகளைப் பேசி முடித்ததும், அன்று வள்ளலின் மாளிகையில் கண்ட பெண்ணைப்பற்றி அறிய ஆவல் கொண்டார். வள்ளல் தன் குடும்பச் சேமத்தைப்பற்றிக் கூறும் பொழுது கமலத்தைத் தன் பெண்ணின் தோழி என்றும் குறிப்பிட்டார். அவளது வாழ்க்கை வரலாற்றைக் கேட்கும்பொழுது, சிற்சில சமயங்களில் கண்ணீர் பொங்கிவிடும். எங்கு வள்ளல் பார்த்துவிடப் போகின்றுரோ என்று கண்ணில் தூசி விழுந்திருப்பதுபோலத் துடைத்துக்கொள்வார்.

சுந்தரமும் வள்ளலும் நெடுந்தூரம் சென்றுவிட்டனர். அவர்கள் பேச்சுச் சுவையில் நடந்த நடையைக்கூட கவனிக்கவில்லை. அந்த நேரத்தில் சூரிய தேவன் தன் பொன் மயமான கிரணங்களைப் பரப்பி மேலை மலையில் மறைந்துகொண்டு இருந்தான். வான மண்டலத்தில் பல் வகைத் தோற்றங்கள் தோன்றிக் கொண்டிருந்தன. பல்வகை வருணங்கள் ஆங்காங்கே சிதறி ஆருகப் பெருக்கெடுத்தன. ஒரு ஓவியக்காரன் புத்தப் புதிய காட்சிகளைச் சித்தரிப்பது போனறு இருந்தது அத் தோற்றம். இந்த இயற்கைக் காட்சியைப் பருகிவிட்டு வள்ளலும் சுந்தரமும் வீடு திரும்பினர்.

சுந்தரத்தின் மனைவி, செண்பகா தேவியும், மகன், குமரனும், வள்ளல் மாளிகைக்கு வந்திருந்தனர். பல ஆண்டுகள் கழிந்தும், உடல் அமைப்பும்

வனப்பும் மாறுபட்டு ஓர் புதிய ரூபத்தில் தோன்றிக்கொண்டு இருக்கும் கமலத்தினிடம், தன் அக்காளின் குழந்தையின் சாயல் இருப்பதையும், பல அங்க அடையாளங்கள் ஒத்து இருப்பதையும் காண இவ் அம்மையார் அதிசயமும் ஆச்சரியமும் உற்றனள்.

மாளிகை அடைந்ததும், இராமலிங்கர் கோமதியையும் கமலத்தையும் அழைத்தார். இருவரும் வந்தனர். சுந்தரத்தினிடம் தன் வரலாற்றைக் கமலம் கூறினாள். இதற்குள் வள்ளலைத் தெரிசிக்க சுந்தரத்தின் மனைவியும் வெளியே வந்தனள். வள்ளலுக்கு வணக்கம் தெரிவித்தனள். வள்ளலும் ஆசீர்வாதம் செய்தார். பின் நலம் விசாரித்தார்.

சுந்தரம் தன் மனைவியிடம் "உன் அக்காள் குழந்தைபோல் உரித்து வைத்திருக்கிறது, இப்பெண்ணின் தோற்றம். இவள் சொல்லும் கதையைப்பார்த்தால் அப்பெண்தான் என்று தோன்றுகிறது. பெயரும் ஒன்றாகவே இருக்கின்றது" என்றார்.

செண்பகா தேவிக்குச் சந்தேகம் அதிகரித்து விட்டது. கமலத்தின் அருகில் சென்று உற்று நோக்கினாள். அவ் அம்மையாரின் வீட்டில் வளரும் பொழுது ஒருநாள் கமலம் கீழே விழுந்துவிட்டாள். மண்டையில் பெரிய காயம் ஏற்பட்டது. குணமானதும் அது ஒரு பெரிய தழும்பாக இருந்தது. அத் தழும்பு இருக்கக்கண்டனள். மேலும் கமலத்தின் முதுகில் ஒரு பெரிய மச்சம் உண்டு. அதுவும் இருக்கவே "அம்மா, நீ என் குழந்தைதான், என் அக்காளின் கமலம்தான்" என்று அவளை மார்புடன் சேர்த்துக் கட்டி அழலானாள். எல்லோருக்கும் அழுகை வந்து விட்டது. பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ!

"கண்ணே கமலு, உன்னை மறந்து எப்படி செல்லத் துணிபு ஏற்பட்டதோ! என் அக்காளுக்குக் கொடுத்த வாக்கு, நீரில் எழுதியதுபோல் ஆகி

விட்டதே என்று கண்ணீரும் கம்பலையுமாக இருந்தேன். ஒருநாளாவது உன்னை நினைக்காமல் இருக்க முடியவில்லை. கண்ணீர் விடாத நாளும் இல்லை. தெய்வம் தான் இந்த பெரிய வீட்டிற்கு உன்னை அழைத்து வந்திருக்கிறது'' என்று பல்வாறாகக் குறிப்பிட்டு மனம் நொந்தனள். தான் செய்த தவறை மறந்து மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டனள். கமலத்திற்குச் செய்த தவறை நினைக்கும் பொழுதுதான் செண்பகா தேவிக்கு மன்னிப்பும் கேட்க வேண்டுமென்று உள்ளம் அளவிடு மெழுகென உருகிற்று. யார் யாரை மன்னிப்பது! செண்பகாதேவிக்கு ஒரு புறம் தான் இழந்த தனத்தை மீண்டும் பெற்றுவிட்டோமென்ற மகிழ்ச்சி, மறுபுறம் தன் அக்காளுக்குக் கொடுத்த வாக்கை மீறியதால் கமலம் என்னென்ன துன்பங்களை அனுபவித்தனளோ என்ற சோக நிலை.

கமலத்திற்குத் தன் சித்தி, சித்தப்பாவின் அடையாளம் கண்டு கொள்ள முடியாமல் போகவில்லை. அவர்களின் தோற்றம் முற்றிலும் மாறுபட்டிருந்தாலும், செல்வப் பெருக்கால் அரச குடும்பத்தார் போன்று காணப்பட்டாலும், அவர்களைக் கண்டதும் சற்று தயக்கம் ஏற்பட்டது. அவளது சித்தி எப்பொழுதும் அவளை ''கமலு, கமலு'' என்று உளம் குளிர அழைத்தது, இன்றும் அவளுக்கு ஞாபகம் இருந்தது.

எவ்வாறு பிறவிக்குருடன் கண் பார்வை பெற்றால் எவ்வளவு ஆனந்தமடைவானோ, அதிலும் பன்மடங்கு மகிழ்ச்சி கமலத்திற்கு ஏற்பட்டது. தன் சித்தி, சித்தப்பா பாதங்களைத் தொட்டு வணங்கி ''நீங்கள் செய்தது எல்லாம் நன்மையாகவே முடிந்தன. தருமம் தலைகாக்கும். எல்லாம் வினையின் பயன். தெய்வச்செயலால் உங்களை மீண்டும் சந்தித்தேதே, நான் செய்த பாக்கியம்'' என்று கண்ணீர் விட்டாள், கமலம்.

கமலம், தன் தம்பி குமரனை எடுத்து முத்தம் கொடுத்து, இடுப்பில் வைத்துக்கொண்டாள். அப்பொழுது அவள் எல்லையற்ற இன்பம் அடைந்தனள். அன்று தான் அவளது வாழ்வில் உள்ளும் புறமும் மகிழ்ச்சி ஏற்பட்டது. இந்த சம்பவத்தைக்காண வள்ளலின் குடும்பத்தினரும், சுந்தரத்தின் குடும்பத்தினரும், "என்ன மாதவம் செய்தனமோ" என்று எல்லாம் வல்ல இறைவனை வாழ்த்தினர்.

தேவி, பராசக்தி, கோமதி அம்மனின் கருணையினுல்தான் எல்லோரையும் மீண்டும் ஒன்று சேர்த்தது என்பது கமலத்தின் திடமான நம்பிக்கை. ஏனெனில் அன்று எல்லோரும் தேவியைத் தெரிசித்துக் கொண்டிருந்தபொழுது, கமலம் அம்பாளை வேண்டினுள், "தாயே, அகிலாண்ட நாயகி, என் சித்தி, சித்தப்பாவைக் காணும் பாக்கியம் அருள மாட்டாயா!" என்று கண்ணீர் விடுத்து உருகினுள். அதன் பலன்தான் இன்று கைமேல் கிடைத்தது. அதனுல் தேவியை அவள் மனதாரத் துதித்தாள்

செண்பகாதேவி தன் கழுத்தில் கிடந்த நவரத்தின மாலையைக் கழற்றி கமலத்தின் கழுத்தில் அணிந்து, அவளது இரு கன்னங்களையும் இருகைகளால் தடவித் தன் நெற்றியில் கையைநெறித்துக் கொண்டாள். கமலமோ அன்னை பார்வதி தேவி போன்று தோன்றினுள். அவளை நோக்க ஆயிரம் கண்களும் போதாதென்றுதான்சொல்லவேண்டும். இத்தோற்றம் எல்லோரையும் வசீகரித்து விட்டது. கோமதிக்கு ஏற்பட்ட ஆனந்தத்திற்குக் கங்குகரை இல்லை. அவளையே பார்த்த வண்ணம் இருந்தாள். அதில்தான் அவளுக்கு எத்தனை வாஞ்சனை!

சுந்தரம் வீட்டிற்குச் சென்று. கமலத்தை விட்டுப் பிரியும்பொழுது எடுத்திருந்த படத்தைக் கொண்டு வந்தார். அந்தப் படத்தைப் பார்த்ததும், வள்ளலுக்கு இருந்த சந்தேகம் முற்றிலும் மறைந்து விட்டது. கமலம் தான் இந்தப் பெண் என்று நிட்சயமாய் விட்டது. கமலமும் தன் குழந்தைப்பருவப்

படத்தை வாங்கிப் பார்த்தாள். அவளது கவலை எல்லாம் தீர்ந்தது. இந்தப் படத்தின் ஒரு பிரதி கிருஸ்துவ மடத்தில் இருப்பதை அவள் பார்த்திருக்கிறாள். அதன் கீழ் சுந்தரமும் கையெழுத்திட்டிருக்கிறார். கமலம் கர்த்தரின் பாதுகாப்பால் மீண்டும் புத்துயிர் பெற்றனள்.

நேரம் ஆய்விட்டதால் செண்பகாதேவி கமலத்தையும் குமரனையும் அழைத்துக்கொண்டு எல்லோரிடமும் விடைபெற்று வீடு திரும்பினள். கோமதியும் தன் தோழியின் வேண்டுகோளுக்காக உடன் சென்றாள். அன்று இரவு அவளுடன் இருக்கவும் உடன்பட்டாள். சுந்தரமும் இராமலிங்கரிடம் விடை பெற்று, வீடு திரும்பினார்.

அன்று சுந்தரத்தின் இல்லம் ஆண்டவன் உறையும் ஆலயமாகத் தோன்றிற்று. ஓர் எழுத்தாளன் தன் இலக்கியங்களைப் போற்றி ஆற்றுப்படுத்தப் பட்டால், எவ்வாறு ஆனந்தம் அடைவானோ, அவ்வாறு சுந்தரமும் எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தார். அவருக்கு விலைமதிக்க முடியாத புதையல் கிடைத்தது போன்று இருந்தது. தான் செய்த தானதருமங்கள் வீண் போகவில்லை என்று அகமகிழ்ந்தார். இந்த ஆனந்த வெள்ளமே அவரை மேலும் மேலும் பன்மடங்கு தருமகாரியங்களைச் செய்ய தூண்டுகோலாக இருந்தது.

இரண்டு மூன்று நாட்கள் ஓடி மறைந்தன. சுந்தரம், கமலத்துடன் பாளையங்கோட்டை சென்று கிருஸ்துவமதத் தலைமைப் பாதிரியாரைக் கண்டார். மடாலயத்தார் செய்த நன்றியைப் போற்றினார். மடாலயத்திற்கு ரூபாய் பதினாயிரம் இனமாகக் கொடுத்தார். பின் கமலத்தை அம்மடாலயத்திலிருந்து விடுதலை பெற்றுத் தன் இல்லத்திற்கு அழைத்து வந்தார். சுந்தரத்தின் மனோரதம் ஈடேறியது.

# 7

சுவாமி சத்தியானந்த முனிவர் பழநி ஆண்டவரைத் தெரிசித்து விட்டுத் தங்கும் இடத்திற்கு வந்தபின், மறுநாட்காலை பழநி நகரசபையினர் அவரை வரவேற்றுஉபசரித்தனர். அன்று பொதுக் கூட்டத்தில் "முருகனது பெருமை" என்ற பொருள் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார். ஏராளமாக மக்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர். எல்லோரும் சுவாமி அவர்களின் தியாக உணர்ச்சியையும், தெய்வத் தமிழ் மொழிக்கும் மதத்திற்கும் செய்யும் சேவையையும் போற்றினர். அடிகளார் தன் முடிவுரையில் "பழநி நகரசபை, பழநி ஆண்டவரின் தேவாலயப் பரிபாலனம் செய்ய வேண்டியவர் ஆவர். இரண்டையும் பிரிப்பது, ஒன்று மற்றொன்றை மறப்பது, ஆண்டவனுக்குச் செய்யும் துரோகம்" என்று கூறிமுடித்தார். அடிகளார் பின் தன் சீடர்களுடன் கோயம்புத்தூருக்கு இரயில் மார்க்கமாகச் சென்றுவிட்டார்.

பல பெரிய மனிதர்கள் சுவாமி அவர்களை வரவேற்றனர். நகரசபை அடிகளாரைக் கௌரவித்தது. அன்று பொதுக்கூட்டத்தில் முனிவர் பெருமான் "கொங்கு நாடும் தமிழும்" என்ற பொருள்பற்றி அரிய பிரசங்கம் செய்தார். பாடல் பெற்ற தலங்கள் பல கொங்குநாட்டில் இருக்கின்றன. மிக்க பெருமை வாய்ந்தவைகள் அவைகள். பல சித்தர்கள் இங்கு தவம் செய்திருக்கின்றனர். கொங்கு நாடு தமிழுக்குச் செய்யும் சேவையைப் பற்றி அடிகளார் போற்றினார். இங்குள்ள மக்கள் தமிழ் பற்று உடையவர்களாய் இருப்பதை உணர்ந்து மகிழ்ச்சி அடைவதாகவும் கூறினார் பெருந்தகை. கூட்டம் முடிந்ததும் அடிகளார், மேலைச் சிதம்பரம் என்று போற்றிப்புகழும் திருப் பேரூர் சென்று விட்டார்.

இத்தலம் கோயம்புத்தூருக்கு மேற்கே சற்று தூரத்தில் இருக்கின்றது. இங்கு ஆண்டவன்

ஆடும் தெய்வம் நடராசப் பெருமானாக, அம்பாள் சிவகாமி சுந்தரியாகக் காட்சி அளிக்கின்றனர். இத்தலம் நொய்யல் ஆற்றங்கரையில் இருப்பதால் சோலைகளால் சூழப்பட்டிருப்பது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இங்கு நடராசப் பெருமானின் சந்நிதிமுன் மண்டபத்தில் திருமாலின் பத்து அவதாரங்கள் பத்துத் தூண்களில் வெகு அழகாகச் சித்தரிக்கப் பட்டிருக்கின்றன. நுட்பமும், வனப்பும், பாவமும், இயற்கையிலேயே மிகவும் அமையப் பட்டிருக்கும் இச்சிற்பத்தின் திறனைப் போற்றுதார் இல்லை. இது ஒன்றே தமிழ் நாட்டின் பழம் பெருமையை நிலை நாட்டிவிடும் என்பதற்குச் சந்தேகமே இல்லை.

சுவாமி அவர்களைத் திருப்பேரூர் தேவாலயத்தார் பூரண கும்பத்துடன் வரவேற்றனர். அடிகளார் ஆடும் தெய்வத்தை மனம் குளிர தெரிசித்தார். பின் "நரனும் நடராசனும்" என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றினர்.

அடிகளார் நடராசப் பெருமானின் நடனத்தை விஞ்ஞான முறையில் உடல் நூல், உளநூல், உயிர் நூல் முதலியவற்றின் ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டினார். இயற்கையையும் இறை நிலையையும் அறிந்து அறிந்து, உணர்ந்து உணர்ந்து, தெய்வ வழிபாட்டை நிலைநாட்டவே விஞ்ஞானம் தோன்றியுள்ளது என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளும் வகையில், சொல்மாரி பொழிந்தார். ஒருவன் மனக் கவலை இல்லாது மாண்புடன் வாழவேண்டுமானால், தனக்கு உவமை இல்லாத இறைவனை நாட வேண்டும் என்பது, உடலுக்கு உயிர் இன்றியமையாதது போல, இயற்கையின் நியதியாகும்.

சுவாமி அவர்களின் சொற்பொழிவைக் கேட்க மக்கள் திரண்டுவிட்டனர். பிரசங்கம் முடிந்ததும் எல்லோரும் அடிகளாரைப் போற்றினர். நம் மதத்தின் பெருமையையும், நடராசப் பெருமானின் உண்மைத் தத்துவத்தையும் உணர்ந்து, "அவன்

அன்றி ஓர் அணுவும் அசைவது இல்லை" என்ற பொய்யா மொழியைப் பொன்னெனக் கொண்டு, சிவஞானத்தை அடைய முன்னிலும் பன்மடங்கு பக்தியுள்ளவர்களாய் மக்கள் திகழ்ந்தனர்.

உலகம் ஒடுங்கி அமைதி நிரம்பிய இந்நேரத்தில் சந்திரதேவன் தன் வெண்ணிலவைக் கொழித்துக் கொண்டிருந்தான். எங்கும் அமைதியும் ஆனந்தமும் குடிகொண்டிருந்தன.

மரக்கிளைகளின் ஊடே சந்திரன் தோன்றும் காட்சியும், இளங்காற்றினால் இலைகள் அசையும் பொழுது அவற்றை ஊடுருவி சந்திரபிம்பம் ஆற்று நீரில் தோன்றுவதும், கோயிலைச் சுற்றிலும் கோபுரத்திலும் எண்ணற்ற விளக்குகள் தோன்றும் பொன்மயமான தோற்றமும், பக்த கோடிகள் நொய்யல் ஆற்றின் வெண்மணல் பரப்பில் கூட்டங் கூட்டமாக உட்கார்ந்து இருக்கும் காட்சியும்,ஆற்று மணலில் சிறு பிள்ளைகள் ஓடிஆடி விளையாடும் தோற்றமும், பல்வகை சிற்றுண்டி கொண்டு வந்து பிறர்க்குக் கொடுத்துத்தானும் உண்ணும் காட்சியும், தங்குதடையில்லாது ஆற்றில் தெள்ளிய நீர் ஓடிக்கொண்டிருப்பதும், அதில் ஊடே ஊடே மீன்கள் துள்ளிக் குதிப்பதும், ஒரு தெய்வீக சக்தியை ஊட்டிக் கொண்டு இருந்தன.

நம் முன்னோர்கள் இயற்கையும் எழிலும் நிறைந்த இடங்களில் கோயில்களை எழுப்பி, அங்கெல்லாம் சென்று வரவும், தெய்வத் தமிழ்மொழியின் பெருமையை நிலை நாட்டவும் செய்திருப்பது, நாம் இயற்கையைக் கண்டு களிப்பதற்கும் இறை உள்ளம் பெறுவதற்காகவும்தான். பற்பல இடங்களைக் காண்பதால் அறிவு வளர்ச்சி அடைவதுடன், பல பெரியோர்களின் உபதேசங்களைக் கேட்டு அதன்படி நடக்கவும் அனுகூலமாக இருக்கின்றன.

அடிகளார் திருப்பேரூரிலிருந்து கோவை திரும்பினார். மறு நாள் காலை மருதை மலை ஆண்டவனைத் தெரிசிக்க மோட்டாரில் தன் சீடர்களுடன்

சென்று விட்டார். இயற்கைக் காட்சி நிறைந்த இம் மலையின் மேல் முருகன் ஓங்கார சுப்பிரமணியனாக, ஆண்டியாகத் தோன்றிக் கொண்டிருக்கின்றான்.

அடிகளாரும் சீடர்களும் மருதை மலைக்குச் செல்லும் மார்க்கத்தில் ஒரு சோதிட வித்வானின் சந்ததியார்களைச் சந்தித்து அவர்களது வறுமை நிலையைக் கண்டு வருந்தினர். கால வித்தியாசத்தால் தமிழ் கவிஞர்களும், தமிழ்ப் பெரியார்களும் ஆதரவு அற்று வாழ்வு இழந்ததை நினைக்க அடிகளாருக்குக் கண்ணீர் வந்துவிட்டது. யாருடைய நலங்களைக் காக்க கோயில்களும், மடங்களும், அரசாங்கமும், தோன்றினதோ, அவைகள் நிலை தவறினதால் ஏற்பட்ட சீர்கேடுதான் இவை என்று சொல்லவேண்டும். என்று தமிழ் அன்னை அரியாசனத்தில் அமர்ந்து, தமிழ் கவிஞர்களும், எழுத்தாளர்களும் ஆற்றுப்படுத்தப் படுகின்றனரோ, அன்றுதான் நாம் மனிதப்பிறவி எடுத்த பயனும் அடைகின்றோம்.

மோட்டாரும் மருதைமலை அடிவாரத்தை அடைந்தது. அங்கிருந்து எல்லோரும் மலை மீது ஏறிக் குறிஞ்சிக் கடவுளாகிய செந்தமிழ் முருகனைத் தொழுதனர். கோயிலாளர்கள் சுவாமி அவர்களையும் சீடர்களையும் வெகு அன்புடன் கௌரவித்தனர். பின் எல்லோரும் மலையிலிருந்து இறங்கி மோட்டாரில் கோவை திரும்பினர். அன்றே அடிகளாரும் சீடர்களும் ஈரோடு மார்க்கமாகத் திருச்சிராப்பள்ளி சென்றுவிட்டனர்.

கங்கையில் புனிதமான காவிரியில் நீராடி அடிகளாரும் சீடர்களும் பள்ளிகொண்ட பெருமானைத் தெரிசித்து ஆலய நிர்வாகிகளால் உபசரிக்கப்பட்டனர். அங்கு அடிகளார் “அரங்கனும் ஆழ்வாரும்” என்ற பொருள்பற்றிச் சொற்பொழிவு ஆற்றினர். ஆழ்வார்களின் பெருமையை எடுத்துக் கூறினர். வைணவம் தமிழ் நாட்டிலிருந்து பாரத நாடு முழுவதும் பரவியதை வெகு அழகாகப் பல சான்றுகளு

டன் வடமொழிச் சூத்திரங்களையும் மேற்கோளாகக் குறிப்பிட்டார். பெருமாளுக்கு உகந்தது தெய்வத் தமிழ்மொழி. ஆழ்வார்களின் ஆழ்ந்த பக்தி வெள்ளப் பாடல்களைப் பாடவே வைணவ ஆலயங்களும், மடங்களும் தோன்றியுள்ளன. சில சைவ சித்தாந்திகள், வைணவ சித்தாந்தத்தை இழிவாக நினைக்கின்றனர். திருமால் மும்மூர்த்திகளில் ஒருவர் என்றும் கூறுகின்றனர். ஆனால் ஆழ்வார்கள் அவ்வாறு கூறவில்லை. சைவசித்தாந்தத்தின் முடிபே அவர்களது முடிபாகும். சைவம், வைணவம், ஆழ்வார்களுக்கோ, நாயன்மார்களுக்கோ வேற்றுமை இல்லை. ஒரே பரம்பொருளை இருதுறையில் வாழ்த்தியுள்ளனர். சைவத்தை யோக நிட்டையிலிருக்கும் நிலை என்றும், வைணவத்தை யோகம் கலைந்து தியாக ரூபத்தில் வெளிவரும் நிலை என்றும் அடிகளார் கருத்து. மூல நூல்களையும், யோகசாத்திரங்களையும் நன்கு பயின்றவர்கள் இந்த உண்மையை நன்கு உணரலாம். "மாயோன் மேய காடுறை உலகம்" என்று திருமாலை முல்லை நிலத்திற்குத் தெய்வமாகத் தமிழ் இலக்கண இலக்கியங்கள் கூறுகின்றன. பெருமாளின் பெருமையைச் சங்க நூல்களில் பரக்கக் காணலாம்.

இவற்றை எல்லாம் குறிப்பிடவேண்டிய காரணங்கள் இருக்கின்றன. நாட்டில் பொய்ச் சரித்திரங்களையும், கற்பனைக் கதைகளையும் ஆதாரமாகக் கொண்டு சில வஞ்சகர்கள் இன்று பிரசாரம் செய்து வருகின்றனர். இவர்கள் தமிழ் தெய்வத்திற்கும் நம் மதத்திற்கும் செய்யும் துரோகம் அனந்தம். இவர்கள் தாங்களே ஆண்டவனின் அடியார்கள் என்றும், மகரிஷிகளின் சந்ததியார்கள் என்றும் கூறிக்கொள்கின்றனர். இதைப்போல் பச்சைத் துரோகம் வேறு ஒன்றும் இருக்க முடியாது.

சைவமும் வைணமும் என்ற தெய்வீக மார்க்கங்கள் தமிழ் நாட்டிலே தோன்றின. தமிழ் நாட்

டிலே வளர்ந்து பூத்துக் காய்த்து, உலகினர் யாவரும் பருகத் தெவிட்டாக் கனியாக இருக்கின்றன. கர்மம், ஞானம், பக்தி, யோகம் என்ற நான்கின் முடிபே அவைகள்.

அடிகளார் அன்றுமாலை தாயுமானவர் கோயிலின் முன்பு, "அரனும் அரசும்" என்ற தலைப்பில் பேருரை நிகழ்த்த ஏற்பாடாயிருந்தது. நகரெங்கும் பிரசங்க விளம்பரம் செய்யப்பட்டிருந்ததால் மக்கள் திரண்டுவிட்டனர். கோயிலின் முன் திருவிழாக் கூட்டம் போன்று மக்கள் தோன்றினர். குறிப்பிட்ட நேரத்தில் அடிகளார் தன் சொற்பொழிவை ஆரம்பித்தார்.

கடல் மடை திறந்ததுபோன்று, தங்கு தடையில்லாது, அடுக்கு அடுக்காக, அழகுக்கு அழகாக, பல்வகை உவமையுடன் பேசும் வாய்ச்சாலம் பெற்ற அடிகளாரைப்போற்றுதார் இல்லை. தெய்வ பக்தியும், தேச பக்தியும் ஒன்றெனை நிரூபித்து, இறைவனின் நிலையையும், அரசாங்கம் செய்ய வேண்டிய கடமையையும் மலைமேல் வைத்த விளக்குப் போன்று விஞ்ஞான ரீதியில் விளக்கினார். கங்கைப் பிரவாகம் காவிரியில் கலந்து, மக்கள் இதயத்தில் பாய்ந்து வளம் பெரும்படிச் செய்துவிட்டது, அடிகளாரின் சொல்லாக்கம். என்றும் கேட்டிராத அரிய பிரசங்கத்தைக்கேட்டு எல்லோரும் புத்துணர்ச்சி பெற்றுத் தாய் நாட்டிற்கும் தாய் மொழிக்கும் சேவைசெய்ய, தாயும் தந்தையுமான இறைவனின் கருணைக்குப் பாத்திரமாகக் கங்கணம் கொண்டு, நம் அடிகளாரை வாழ்த்தினர்.

இராஜ ராஜ சோழன் தஞ்சை பிரகதீசுவரரின் ஆலயத்தைக்கட்டி,அதில் ஆறுகால பூசையும், பிராமணர்களுக்கு அறுசுவை உண்டி அளிக்கவும், மானிபம் வழங்கியதாகக் கூறப்படுகின்றது. அதன்படி கோயில் செல்வங்கள் எல்லாம் பயன் படவேண்டுமென்று சிலர் சொல்கின்றனர். பிரா

மணர் என்பது ஒரு குறிப்பிட்ட இனத்தினரைக் குறிக்கும் சொல் அல்ல. இது யோகிகளையும் ஞானிகளையும் அழைக்கும் சொல்லாகும் அவர்கள் தியாகிகளாக வாழ்ந்து வழி காட்டுபவராவர். மேலும் ராஜ ராஜ சோழன், சோழ நாட்டு மக்கள் அனைத்தையும் ஒன்றுசேர்க்கும் விராட ரூபனுகிய பிரகதீசுவரனுக்கு ஆலயம் கட்டி தரும கர்த்தாவாக, சோழ நாட்டு மக்கள் வாழ்வதற்காக பூசைகள் நடத்தினுன் இன்று அக்கோயில் சோழ நாட்டு மக்களுக்கு எவ்வாறு வளம் அளிக்கின்றது? இல்லை என்றுதான் சொல்லவேண்டும்,

அடிகளாரும் சீடர்களும் தாயுமானவர் கோயிலுக்குச்சென்று ஆண்டவனை வணங்கினர். கோயில் நிர்வாகிகளால் பெரிதும் உபசரிக்கப்பட்டனர். பின் எல்லோரும் இருப்புப்பாதை மார்க்கமாக மதுரைமா நகருக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டனர்.

தமிழ்கண்ட வைகை நதியையும், விண்ணை இடிக்கும் மீனுட்சி சுந்தரேசுவரரின் கோயில் கோபுரங்களையும் கண்டதும் தன்னை அறியாமலே ஓர் ஒப்பற்ற சக்தி நம் அடிகளாருக்கு ஏற்பட்டு விட்டது. வெள்ளியம்பலத்தில் இறைவன் அறுபத்திஞன்கு திருவிளையாடல்கள் ஆடினதை நினைக்கும்பொழுது, பாரத நாட்டின் பெருமை பாண்டிய மன்னரின் தலை நகரில் அதி உன்னத நிலையில் உலகிற்கு எடுத்துக்காட்டாக இன்றும் விளங்கிக் கொண்டிருக்கின்றது பராசக்தி, இமயவரம்ப பாண்டியனின் மகளாக. மீனுட்சி அம்பாளாகத் தோன்றி, தமிழ் அரசியாக ஆட்சி புரிந்ததை நினைத்தால், தமிழ் நாட்டின் பெருமை சொல்லவும் வேண்டுமோ! அத்தகைய தமிழ்நாடு இன்று வறுமை, அறியாமை, வஞ்சகம், பொருமை, சாதிச் சண்டைகள், சமயச் சண்டைகள், ஒற்றுமை இன்மை, பலவற்ருல் சூழப்பட்டு, அரக்குமாளிகை போன்று பொலிவிழந்து நிற்கின்றது. இதை

நினைக்க நெஞ்சம் குமுறுகின்றது. என்று வருமோ நற்காலம்!

மதுரைமா நகர் வந்ததும் நகரப் பொது மக்களும், மீனுட்சி சுந்தரேசுவரர் கோயில் இறை பணியாளர்களும் அடிகளாரைப் பல விருதுகளுடன் வரவேற்றனர். நகரெங்கும் வீதிகளில் தோரணங்கள் அழகாக அலங்கரிக்கப்பட்டன. "வாழ்க தமிழ் மொழி, வாழ்க தமிழ் முனிவர்" என்று அவற்றில் வரையப்பட்டிருந்தன.

பாரத நாட்டிலே, சிறப்பாகத் தமிழ் நாட்டிலே, தலை சிறந்த ஆலயங்களில் முதன்மையானது மீனுட்சி சுந்தரேசுவரர் ஆலயமாகும். இங்கு தமிழ் நாட்டின் பெருமையும், தமிழ் மொழியின் தொன்மையும் நன்கு விளங்கும். தெய்வத் தமிழ்மொழி ஒன்றுதான் இறைவனுல் தோற்றி வைக்கப்பட்ட முதல் மொழி என்று இங்கு நிலை நாட்டப்படுகின்றது. ஆனுல் இன்று வஞ்சகர்களும், தீயவர்களும் இறைவனுக்கு உகந்த மொழி அல்ல பைந்தமிழ் என்று செய்த கொடுமைகள் நினைக்காமல் இருக்க முடியவில்லை. இவர்களுக்கு உடந்தையாக அன்னிய ஏகாதிபத்தியமும், பாக்களைத் திரிக்கும் கிருஸ்துவப் பாதிரிகளும் திரை மறைவில் இருந்து செய்து வந்த அநீதியும் அக்கிரமமும் கங்கு கரை இல்லை.

இப் புண்ணிய பூமியில் அம்பாள் மீனுட்சி சுந்தரேசுவரி ஓர் இளம் பெண்ணுக, மிக்க அழகுடன் தோன்றும் காட்சி தெய்வீகத் தன்மையை ஊட்டும், பெண்ணின் பெருமையை நிலை நாட்டும். அழகுக்கு உறைவிடமாய், யாவரும் வியக்கும் வண்ணம் பேரொளியுடன் நம் அன்னை தோன்றிக் கொண்டிருக்கின்றுள். தேவியின் அழகை கவிகளால் வர்ணிக்கமுடியாது, சிற்பியினுல் செதுக்க முடியாது, ஓவியமாக வரையமுடியாது மனத்திற்கும் வாக்கிற்கும் அப்பாற்பட்டது, மூன்று காலத்தையும் கடந்தது, மூன்று குணங்களையும்

வென்றது. வேதங்கள் அனைத்திற்கும் புலன் ஆகாத அழகுத்தெய்வம், தமிழ்த்தாயை யாரால் தான் வர்ணிக்கமுடியும்? தனக்குத்தானே உவமை யாகத் தோன்றுகின்ருள் இமயச்செல்வி.

தேவியை இமையா நாட்டத்தில் காணும் பொழுது தாய் அன்பு தோன்றுகின்றது. நம் அன்னை புன்முறுவல் பூத்துத் தன் கருணை விழி களால் நம்மை ஆசிர்வதிப்பது போன்று விளங்கு கின்ருள். நம் முன் பேசுவது போன்றிருக்கும் அன்னையின் தோற்றம். அன்னை எல்லோரையும் வசீகரித்து விடுகின்ருள். எல்லோருடைய தீரா நோய்க்கும் மருந்தாக அன்னை விளங்குகின்ருள்.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு வேதப்பொருள்களுக்கும் மூலகாரணம் தேவிபரா சக்திதான். வேத வசனங்களால் நம் அன்னை தருமத்தை முதன் முதலில் நிலை நாட்டுகின்ருள். அகில உலகங்களுக்கும் தாயாகிய நம் பராசக்தி, மீனுட்சி சுந்தரியின் கருணையால் நல்லோர் நான் மறைப்பொருள்களையும் அடைகின்றனர்.

இறைவனின் சந்நிதானத்தில் நின்ருலோ, ஓர் எல்லையற்ற சாந்தி உண்டாகின்றது. காயசித்தி, மனேசித்தி, யோகசித்தி பெற்ற மகான்களுக்கு ஏற்படும் அமைதி அங்கு நிலவக்காணலாம்.

கோயிலுக்குச்சென்று அடிகளாரும் சீடர்களும் சொக்கலிங்கப் பெருமானையும் மீனுட்சி அம்பாளை யும் தெரிசித்தனர். தீபாராதனை முடிந்ததும் தமிழ் மறை பாடப்பட்டது. எல்லோருக்கும் பிர சாதம் வழங்கப்பட்டது. தேவாலயத்தார் சுவாமி அவர்களைப் பல விருதுகளுடன் கௌரவித்தனர். ஆண்டவனின் அடியார்களுக்குச் செய்யும் சேவை, ஆண்டவனுக்குச் செய்யும் பணிவிடைகள் ஆகும். நம் இலக்கியங்களில் இதன் உண்மையை நன்கு பார்க்கலாம்.

## 8

சுவாமி சத்தியானந்த அடிகளார் "தமிழும் ஆரியமும்" என்ற பொருள்பற்றித் தமிழ் கண்ட வைகை ஆற்றின் வெண்மணல் பரப்பில் அமைக்கப்பட்ட பந்தலில் சொற்பொழிவு ஆற்ற ஏற்பாடாயிருந்தது. நகர வீதிகளில் தோரணங்களும், கூட்ட நிகழ்ச்சிகளும், அலங்கரித்தன. கூட்டத்திற்கு மக்கள் வெள்ளம் போன்று திரண்டு வந்திருந்தனர். சொற்பொழிவு குறித்த காலத்தில் தெய்வ வணக்கத்துடன் ஆரம்பமாயிற்று.

"சிவபெருமானும் முருகக் கடவுளும் தெய்வத் தமிழ் மொழியைத் தோற்றி வைத்ததாக வடமொழி கிரந்தங்களே கூறுகின்றன. இந்தப் பெருமை ஆரிய மொழி என்று சொல்லும் வடமொழி அல்லது சம்ஸ்கிரத மொழிக்கு இல்லை. மகரிஷிகளும், சித்தர்களும், ஞானிகளும், யோகிகளும் தமிழ் தெய்வத்தைத் தாய் என்று வணங்குகின்றனர். நாராயணனே நம்மாழ்வாராகத் தோன்றியதாக வைணவ கிரந்தங்கள் கூறுகின்றன. ஆழ்வார்களின் பாடல்கள் ஊனையும் உயிரையும் உருக்கும் தன்மைவாய்ந்தவைகள். இதனை வடமொழிப் புலவர்களும், உரையாசிரியர்களும் நிலைநாட்டுகின்றனர். வைணவ சம்பிரதாயமும் இவ்வாறு தான் அமைந்து இருக்கின்றது. உலக மொழிகளுக்கெல்லாம் தாயாக தமிழ் அன்னை விளங்குகின்ருள் என்பது இதனுல் நன்கு தெளிவாகின்றது.

வடமொழியில் வேதங்கள் என்று கூறப்படுபவைகள் இறைவனுல் தோற்றி வைக்கப்படவில்லை. மகரிஷிகளின் வாக்குகளைத் தொகுத்து பின்னுல் ஒன்று சேர்க்கப்பட்டவைகள். வடமொழி ஆராய்ச்சியாளர்களே இவ்வாறு கூறுகின்றனர். இதன் உண்மை இவ்வாறு இருக்க, சம்ஸ்கிரதம் ஆரியமொழி என்றும், ஆரியர்களின் மொழி என்றும், தமிழ் திராவிட மொழி என்றும், ஆரிய மொழியிலிருந்தே தமிழ் மொழி தோன்றியது என்றும், மூல பாடங்கள், வேதபாராயணம், இதி

காசங்கள், ஆகமங்கள், உபநிடதங்கள், எல்லாம் சம்ஸ்கிரத மொழியில் எழுதப்பட்டவை என்றும், இவற்றிலிருந்து பிற்காலத்தவர் தமிழில் மொழி பெயர்த்திருக்கின்றனர் என்றும், கூறும் சரித்திரங்களும், ஆராய்ச்சிகளும், நம்பக்கூடியவை அல்ல. அவைகள் வேண்டுமென்றே வஞ்சகமாகத் திரித்துக் கூறியவைகள். தமிழ் மொழியைத் திராவிடமொழி என்று முதன் முதலில் கூறியது பாதிரிகளும், மிலேச்ச அரசாங்கமும் தான்.

நம் நாட்டில் அந்நிய ஆட்சியும், அந்நிய மொழியும் நிலை நாட்டப்படவும், நம்மதத்தைப் பழிக்கவும், நம் இலக்கியங்களை வெறுக்கவும், தீயநோக்கத்துடன் செய்தது ஆரிய திராவிட வாதங்கள். இவைகள் எல்லாம் ஏட்டுப் பிரதியிலிருந்து அச்சுக்கு வரும்பொழுது பண்டிதர்களும், பதிப்பாசிரியர்களும் செய்த துரோகம் ஆகும்.

அந்தக் காலத்தில் பாரத நாடானது இன்று இருப்பது போல் நகரங்களும் பட்டணங்களும், போக்கு வரவு சாதனங்களும் உடையதாய் இல்லை. தமிழ் நாட்டிற்கு வடக்கே அடர்த்தியான காடுகள் இருந்தன. அவற்றைக் கடப்பது கடினம். பெரிய நதிகள் எல்லாம் அங்கு பாய்கின்றன. இன்று கரைகளும் பாலங்களும் உள்ளது போல் அன்று அவற்றில் இல்லை. வட இந்தியாவில் சிற்சில இடங்களில் தான் மக்கள் வசித்து வந்திருக்கின்றனர். பயங்கரமான ஆரணியங்களில் மகரிஷிகளும், யோகிகளும் தவம் செய்து கொண்டிருந்திருக்கின்றனர். இவர்கள் எல்லாம் தமிழ் முனிவர்களாகவே இருந்துள்ளனர். அந்தக் காலத்தில் வடக்கு இருத்தல் என்ற ஓர் முறை இருந்து வந்தது. அதாவது எல்லாவற்றையும் துறந்து வடக்கே சென்று யோக நிலையை நாடுதல் என்பது ஆகும். அத்தகைய துறவிகளால் ஏற்பட்டதால் சம்ஸ்கிரதம், வடமொழி என்று கூறப்படுகின்றது.

தெய்வத் தமிழ் மொழிக்கும், ஆரிய மொழி என்று கூறும் வடமொழிக்கும் கெடு வழக்குத் தொடர்பவர்கள் கிழக்கு மேற்குத் தெரியாதவர் கள் என்று மனோன்மணியம் ஆசிரியர் கூறினார். மேலும் அவர் சொன்னார் "வீறுடைய கலை மகட்கு விழி இரண்டும் மொழியானால் கூறு வடமொழி வலமாகக் கொள்வர் குணதிசை அறியார்" என்று. இவரது காலத்தில் தான் இந்த ஆரிய திராவிட மொழிச்சண்டையும் ஏற்பட்டது. இதனை வட மொழிப்பற்றுஉடையவர் சற்றுசிந்திக்கவேண்டும்.

'சொல்லில் தமிழ் சொல் உயர்வு' என்று பன் மொழி ஆராய்ச்சியாளர்களின் முடிபாகும். சம்ஸ் கிரத பதங்களைவிட, தமிழ் சொற்கள் மிக்க உயர்ந் தவை. எழுத்து, சொல், பொருள் மூன்றிலும் தெய்வத் தமிழ் மொழி உயர்ந்தது.

மற்ற மொழிகளைப் போல் தமிழில் நிறைய எழுத்துக்கள் இல்லை என்பர். பொருளை உணர்த்த சொல்லும், சொற்களை உண்டாக்க எழுத்துக் களும் தேவை. இவை சுருங்கச் சொல்லி விளங்க வைக்கக் கூடியதாய் இருக்கவேண்டும். இடத்திற் குத் தகுந்தாற்போல் சொற்கள் அளபெடுக்கின் றன. அவற்றைக் குறிக்கத் தனித்தனி எழுத்துக் கள் தேவை இல்லை.

உதாரணமாக சங்கீதத்தை எடுத்துக் கொள் வோம். 'சரிகம பதநி' என்ற ஏழு சுரங்கள் இருக் கின்றன. இவற்றின் உச்சரிப்பு மாத்திரை ஒன்று க்கு ஒன்று அதிகப்படுகின்றது. உலகில் தோன் றும் ஒலியை இதற்குள் அடக்கி விட்டனர். நம் அருளாளர்கள். இதற்கு இலக்கணம் தமிழ் மொழி யில் விரிவாகக் காணலாம்.

சம்ஸ்கிரத மொழியில் உயர்ந்த நூல்கள் இருக்கின்றன. அவற்றை எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டியது நல்லது. அதற்காக அம் மொழியில் ஒவ்வொருவரும் பாண்டித்தியம் பெற வேண்டுமென்பது அல்ல. அந்த இலக்கியங்களை

எல்லாம் மக்களின் தாய்மொழியில் மொழி ஆக்கம் செய்வது தான் நன்மையை உண்டாக்கும்.

சம்ஸ்கிரத பாஷையை இறந்த பாஷை என்று கூறுகின்றனர். இது சரியான வாதம் அல்ல. இது என்றும் மக்களின் தாய் மொழியாக இருந்தது இல்லை. இனி ஏராளமான பொருட் செலவு செய்து இம்மொழியை உயர்த்துவது கனி இருக்கக் காய் கவர்ந்தது போன்று ஆகும். இதனால் நாட்டிற்கு என்ன நன்மை ஏற்படும்?

சம்ஸ்கிரத பாஷையில் பகவத்கீதை ஓர் உயர்ந்த நூல். இதனை எல்லோரும் படிக்கவேண்டும், உப நிடதங்களை அன்றாடம் ஓதவேண்டும், என்றெல்லாம் இன்று சில மதவாதிகள் பிரசாரம் செய்கின்றனர். இவற்றைவிட உயர்ந்த நூல்கள் தெய்வத் தமிழ் மொழியில் இருக்கின்றன. இவற்றை எல்லாம் மறந்து தமிழ்நாட்டில் இருந்து கொண்டு வடமொழி வேதங்களையும், உபநிடதங்களையும் பெருமையாகப் பேசுகின்றவர்கள் நாட்டில் தீயநோக்கத்துடன் இருப்பதால்தான். இதனால் தமிழ் நாட்டில் மதப்பற்று குறைந்து வருகிறது. இத்தீய சக்திகளால் தமிழின் பெருமை தாழ்வடைவதுடன் அதன் வளர்ச்சியும் குந்தகம் அடைகின்றது. இவ்வாறு இருந்தால் புத்தப் புதிய நூல்கள் எவ்வாறு தோன்றும்? இதனால் மனிதனது இயற்கையான கற்பனை, கவிதை ஊற்றுக்கள் தோன்றாது போகும், வற்ற ஆரம்பித்து விடும்.

வடமொழியைப் பற்றிப் பெருமையாகப் பேசுகின்றவர்கள், அம்மொழியைக் கற்றுக்கொள்ள உறுதுணையாக இருக்கும் கண்ணின் கருமணி போன்ற தமிழ்மொழியை இழிவாக நினைப்பது என்றால் இவர்கள் உண்மையில் சம்ஸ்கிரத இலக்கியங்களின் பெருமையை அறிந்துகொள்வதற்காகச் செய்யும் பிரசாரம் அல்ல. சம்ஸ்கிரத பாஷையைத் தங்கள் வயிற்றுப் பிழைப்பிற்கு ஒரு உபகரணமாக ஆக்கப் பார்க்கின்றனர் இப்போலிகள்.

உண்மையில் இந்த நயவஞ்சகர்களுக்கும் சம்ஸ்கிரத பாஷைக்கும் சம்பந்தம் இல்லை. மேலும் சம்ஸ்கிரத மொழி அவர்களின் மொழி என்று கூறுவது பைத்தியக்காரத்தனமல்லாது வேறு ஒன்றும் இல்லை. இது அறியாமையினால் ஏற்பட்ட வாதமாகும்.

பகவத்கீதை ஓர் சிறந்த நூல் என்று எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர். இதனைப் படிக்க வேண்டும் என்று சொல்வதும் அவசியம்தான். ஆனால் இதனை மட்டும் மனனம் செய்தால் போதும் என்று சொல்கின்றவர்கள் நாலுக்குச் செய்யும் கொடுமை கொடியதிலும் கொடிது.

பகவத் கீதை தோன்றிய காலம் வேறு. அதனை எழுதிய ஆசிரியர் தன் அனுபவங்களையும் உண்மைகளையும் அதில் குறிப்பிடுகின்றார். அதனை நாம் படிக்கின்றோம். அதில் உள்ள உயர்ந்த கருத்துக்களைக் கொண்டும் நம் அனுபவங்களைக் கொண்டும் காலத்திற்கும் இடத்திற்கும் தகுந்தாற் போல் நாம் புத்தகம் எழுதுகின்றோம், அல்லது பிறருக்கு எடுத்துச் சொல்கிறோம். உண்மையில் இத்தகைய நிகழ்ச்சி உயர்ந்ததாகவே இருக்க வேண்டும். ஏனெனில் இதில் இரு ஆசிரியர்களின் சித்தாந்தத்தை அறிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. இதனால்தான் உரைஆசிரியர்கள் மூலகர்த்தரை விட அதிகம் கௌரவிக்கப் படுகின்றனர்.

மேலும் ஒரு நூல் எவ்வளவு சிறப்புடையதாக இருந்தாலும், காலத்தையும் இடத்தையும் பொறுத்து அது வலி இழந்துவிடுகின்றது. பகவத் கீதையையும் திருக்குறளையும் உவமித்துப் பார்த்தோமானால், திருக்குறள் உயர்ந்த நிலையில் இருப்பதைக் காணலாம். ஆனால் கீதையே உயர்ந்தது, மதசம்பந்தமானது, கண்ணனே நேரில் அருச்சுனனுக்கு உபதேசித்தது, தேவ மொழியில் எழுதியிருக்கிறது என்று கூறுகின்றவர்கள் இருக்கின்றனர். இத்தகைய வாதம் பொருள் அற்றது, நேர்

மையற்றது. ஏனெனனில் இவ் இரு நூலின் பல ஊைத்தான் நாம் அனுபவிக்கின்றோம். வடமொழி யில் எழுதியிருப்பதற்காகவோ, கண்ணன் கூறிய தற்காகவோ பகவத்கீதை போற்றப்படவில்லை. அதில் பொதிந்து கிடக்கும் உண்மைகளுக்காகவே அதனைப் படிக்கின்றோம். நம் உள்ளத்திலே தோன் றுவதை வெளிப்படுத்தவும், பிறமொழிகளின் இலக் கியப் பெருமைகளை நன்கு உணரவும் அரிய சாதன மாய் இருப்பது தாய்மொழி ஒன்றுதான். இதற்கு ஒப்பானது ஒன்றும் இல்லை.

உலக மொழிகளில் வரிவடிவில் தோன்றியது தெய்வத் தமிழ்மொழி முதன்மையானதும் தொன் மை வாய்ந்ததும் ஆகும். "ஆலமர்க் கடவுளாகி நான்கு முனிவர்க்கு வேதம் தெரித்தானை", "மகேந் திர வெற்பினில் ஐம்முனிவர்க்கு ஆகமம் சொன்ன வாயான்" என்ற மேற்கோள்களிலிருந்து முதல் நூல் தமிழில்தான் தோன்றியிருக்கின்றது. இவை கால வித்தியாசத்தால், தமிழ்பெரு மக்களின் உதா சீனத்தால் இன்று கிடைக்கவில்லை. துறவிகள் பின் வடமொழியில் எழுதியிருக்கின்றனர். அதுவும் தமிழ் கிரந்த லிபியில் எழுதியிருக்கின்றனர். அதன் பின் பல நூற்றுண்டுகள் கழிந்து, இன்றுள்ள, நாகர லிபி தோன்றியிருக்கின்றது. அத்துடன் வட மொழியில் உள்ள நூல்கள் பெரும்பாலும் ஆக்கி யோனின் சித்தாந்தத்திற்கு மாறுபட்டு இடைச் செறுகலுடன் இன்று புத்தக ரூபத்தில் வந்துள் ளன.

தமிழ் நாட்டிலே மூன்று சங்கங்கள் தோன்றி யுள்ளன. இறைவனும் அவன் அருள்பெற்ற முனி வர்களும், முருகப்பெருமானும் முதல் சங்கம் நிறுவி தமிழ் ஆராய்ந்ததாகத் தல புராணங்கள் கூறு கின்றன. ஆகவே தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகச் சிவபெருமான் தோன்றிக் கொண் டிருக்கின்றார். தமிழ் மொழியின் தொன்மையும் சிறப்பும் இதனால் இமயம்போன்று நிலைநாட்டப் படுகின்றது.

முதல் தமிழ்ச்சங்கம் தோன்றி பல்லாயிர வருடங்கள் ஆகின்றன. முதல் சங்க நூல்களும், இடைச்சங்க நூல்களும் இன்று பெரும்பாலும் இடைத்தில. இவற்றை அடைய தமிழ் எழுத்தாளர்கள் உழைக்கவேண்டும். உலக சரித்திரத்திலே இச்சங்கங்கள் முதலாவதாகப் பெருமையாக எழுதப்படவேண்டியவை. ஆனால் உலக சரித்திர ஆசிரியர்கள் இந்த உண்மையை வேண்டுமென்றே வஞ்சகமாக மறைத்துவிட்டனர். இதைப்பற்றிய விருப்பு வெறுப்பு அற்ற ஆராய்ச்சி தேவை.

முனிவர்களுக்கெல்லாம் தலைவர் அகத்தியனார். சம்ஸ்கிரத மொழியில் குறிப்பிடும் ரிஷிகளைவிட மிக்க அனுபூதி பெற்றவர். கடலைக் குடித்திருக்கின்றார். திருமணம் தன்னுள் திசையை உயர்த்தியுள்ளார், தமிழ் இசையினால் வடமொழி வேதங்களில் வல்லவனை இராவணனை வென்றிருக்கின்றார், தென்றல் பிறக்கும் பொதிகைமாமலையில் ஆசிரமம் கட்டி தமிழ் ஆராய்ந்துள்ளார். இவை எல்லாம் வடமொழி கிரந்தங்களே கூறுகின்றன.

''தம்மில் தம் மக்கள் அறிவுடைமை மானிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது'' என்ற பொய்யாமொழியை மறந்து, நம் நாட்டில் தீய சக்திகள் வளர்ந்து வருகின்றன. இதனால் உயர்ந்த இலக்கியங்களும், ஞானிகளும் தோன்றத் தடை ஏற்படுகின்றது. சிறந்த எழுத்தாளர்களையும் ஞானிகளையும் போற்றாத நாடு பாலைவனத்திற்கு ஒப்பாகும். அங்கு வாழும் மக்கள் மாக்களாகி என்றும் துன்பமே அல்லாது இன்பம் அடையமாட்டார். அவர்கள் பகுத்தறிவு குன்றி அடிமையாய், இயந்திர மனிதன் போன்று பிறரால் ஆட்டிவைக்கப் படுவர்.

புத்தப்புதிய நூல்கள் தோன்றினால்தான் புதிய கருத்துக்களும் செய்கைகளும் ஏற்படும். அப்பொழுதுதான் மக்கள் இடையே புதிய விழிப்பை உண்டுபண்ண சிறந்த எழுத்தாளர்களும், பேச்

சாளர்களும், ஞானிகளும், தியாகிகளும் தோன்றுவர். அப்பொழுதுதான் நாடு குணம் உயர்ந்திடவே விடுதலை கூடி மகிழ முடியும். மக்கள் அன்பும், அறிவும், அமைதியும், ஆற்றலும் அடைவர். காந்தி அடிகள் தன் பேறு முனையினாலும், சொற்பொழிவினாலும் பாரத நாட்டிலே ஊக்கமும் உள்வலியும் உணர்மைப்பற்றும் இல்லா மக்களைத் தட்டி எழுப்பி சுதந்திர இந்தியக்குடி அரசுக்கு அடிகோலினார்.

கலை, கலைக்காகவே, மக்கள் சமுதாயத்திற்காக வளர்கின்றது. வால்மீகியும், வியாசரும் தோன்றிய பின், காளிதாசரும் பாசகவியும் தோன்றாமல் இருக்கவில்லை. கம்பநாட்டாழ்வாரும், வில்லிபுத்தூரரும் தங்கள் இலக்கியங்களை உண்டாக்காமல் இருந்துவிடவில்லை. கலை முக்காலத்தையும் முக்குணத்தையும் கடந்தது. அதுதானே சுயம்பிரகாசமாய் வளர்ந்துகொண்டே இருக்கும். மகான்கள் தங்கள் உள்ளத்தில் தோன்றும் அரிய செல்வத்தை கவிதா ரூபத்தில் உலகுக்கு வழங்குகின்றனர். இதனை மக்கள் அனுபவிக்கின்றனர். தெய்வமணம் எங்கும் கமழ்கின்றது. கடந்த கால சரித்திரமே இதனைக்கூறும்.

மனிதன் அமர வாழ்வை அடைய தன்னைப் பற்றியும், தன்னைச் சுற்றிலும் உள்ளதைப் பற்றியும், அறியவேண்டியது அவசியமாகின்றது. இந்த உலகம் முக்குணத்தால் ஆகியது. மனிதனது உடல், நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐம்பெரும் பூதங்களால் ஆகியது. அவனது அந்தக் கரணங்கள் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கு நிலைகளாகும். இவைகள் மனிதனிடையே தோன்றும் எண்ணங்களின் நிலையைக் குறிப்பிடுவதாகும். இந்த நான்கு நிலைகளையும் ஒன்று சேர்த்தால் உளம் என்று ஆகிவிடும். மனிதன் எண்ணங்களாலே ஆக்கப்பட்டவன். அவன் இதற்குக் காரணமாகிய கர்மேந்திரியங்களையும் ஞானேந்திரியங்களையும் நல்வழியில் செலுத்தி

ளுல்தான் என்றும் பேரானந்தப் பெருவாழ்வை அடைய முடியும். இதனை 'ஆத்மீகம்' என்று கூறு வர் ஆன்றோர்.

சித்தர்களும், ஞானிகளும், யோகிகளும் தத்தம் அனுபவங்களை இலக்கியங்களின் வழியாக பல பாத்திரங்கள் மூலம் நமக்குக் குறிப்பிடுகின்றனர். இதனால் நாம் நல் வழியில் புகுத்தப்பட்டு அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான் மறைப் பயனை யும் சுலபமாக அடைய முடிகின்றது. உலகம், உடல், உளம், உயிர் இவற்றின் உண்மை நிலை அறிந்து நடத்தலே இறை வழிபாடு என்றும், இது பூரணத் தன்மை அடையும்பொழுது இறைவனு டன் ஐக்கியமாகின்றது என்றும் ஆன்றோர் கூறு கின்றனர்.

நம் நாட்டில் சித்தர்களும், யோகிகளும் வாழ்ந்த இடமெல்லாம் ஆலயங்களாகவும், சர்வ கலாசாலை களாகவும் திகழ்ந்தன. இவற்றை ஆழ்வார்களும், நாயன்மார்களும், அருளாளர்களும் தங்கள் தெய் வீகப் பாடல்களால் மக்களுக்கு எடுத்து ஓதினர். அங்கெல்லாம் சென்று மக்கள் வழிபட்டனர். அங் கெல்லாம் தமிழ் மணம் கமழ்ந்து கொண்டிருந்தது.

"சத்தியம், ஞானம், அனந்தம் பிரம்மா" என்று உபநிடதம் கூறுகின்றது. இதனை சச்சிதா னந்த நிலை என்றனர் உரை ஆசிரியர்கள். ஆனால் எதற்காக நம் முன்னோர்கள் கோயில்களையும் மடங் களையும் ஏற்படுத்தினார்களோ, அத்திருப்பணியில் இன்று அவைகள் செல்லவில்லை. இதனால் நாம் நம் முன்னோர்களுக்கும், மதத்திற்கும் பெரிய பாதகம் செய்கின்றோம், செய்நன்றி கொன்றவராகின்றோம். இந்தப் பழியிலிருந்து நாம் விடுதலை அடையவேண் டும். பகீரதன் தன் முன்னோர்கள் முக்தி அடைய கங்கையைக் கொண்டு வந்தான். நாமும் நம் முன் னோர்களின் பெருமையை திக்கெட்டும் உணர, மக்கள் சமுதாயத்தை அமைப்போம்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று அப்பர் பெருமான் கூறியதுபோல் தியாகக் கூட்டம் வெள்ளம் போன்று பரவட்டும். அக்காலமும் அதோ அண்மையில் வந்து விட்டது தெய்வ ஒளி எங்கும் தோன்ற ஆரம்பித்துவிட்டது. அம்மையப்பனாய், ஒப்பிலாமணியாய், அன்பினில் விளைந்த ஆரமுதாய் விளங்கிக் கொண்டிருக்கும் நம் சோமசுந்தரக் கடவுள், சொக்கலிங்கப் பெருமான், நமக்கு எல்லாச் சக்திகளும் அருளி நம்மைக் காப்பாற்றுவாராக. இது அவனுக்கல்லவா பெருமை".

வேகவதி மீண்டும் தமிழ் வெள்ளம் நிரம்பப் பெற்று, கரைபுரண்டு ஓடுவது போன்று இருந்தது சுவாமி அவர்களின் சொற்பொழிவு. கடவுள் வாழ்த்துடன் கூட்டமும் இனிது முடிந்தது.

## 9

மறுநாட் காலை அடிகளார் மதுரையிலிருந்து, இரகுநாதன், சேகரன் இருவர்களுடன் புறப்பட்டு இரயில் மார்க்கமாக கோவில்பட்டி வந்து, தன் ஆசிரமத்தை அடைந்தார்.

இரகுநாதன் வீடு வந்ததும் கமலத்தின் வரலாறு அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான். வள்ளல் சுந்தரத்தின் இல்லம் சென்று நலம் விசாரித்தான். சுந்தரத்திற்கு இரகுநாதன்மீது அளவு கடந்த பிரியம் உண்டு. இரகுநாதனின் குழந்தைப் பருவத்திலிருந்தே சுந்தரம் அவனிடம் அன்பாக இருந்து வந்தார். அவனைப் பாராமலும் அவனுடன் விளையாடாமலும் ஒருநாள்கூட தவறினது இல்லை.

சுந்தரம் தன் வெளிநாட்டு அனுபவங்களை இரகுநாதனிடம் கூறினார். பின் கமலத்தைப் பற்றியும் குறிப்பிட்டார். கமலத்தைக் கிருஸ்துவ மடத்தில் விட்டுச் சென்றதற்குத் தன் வருத்தத்தை இரகுநாதன் தெரிவித்தான். தெய்வாதீனமாகத் தான் அவள் இந்த இல்லத்திற்கு வந்து சேர்ந்தது.

சுந்தரம் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். அதன் காரணத்தையும் குறிப்பிட்டார்.

கிருஸ்துவ மடாலயத்தார்கள்தான் இத்தகைய காரியங்களில் சேவை செய்ய முன்வந்தனர். அந்த நேரத்தில் அவர்கள் செய்தது சுயநலமோ அல்லது நேர்மையற்ற செயல்என்றோ நினைப்பதற்கு இல்லை. ஏனெனில் இந்நாட்டில் கோயில்களுக்கும், மடங்களுக்கும் ஏராளமாகச் சொத்துக்கள் இருந்தும் இத்தகைய தரும காரியங்களில் ஈடுபடாது இருந்த காரணத்தினால்தான். மக்கள் சமுதாய நலன்களுக்காக ஏற்பட்ட இவைகள் இராவண சந்யாசியாக மாறினதினால்தான் நம்நாட்டின் பண்பாடு சீர் குலைந்துவிட்டது. மடாதிபதிகளும், ஆலய பணியாளர்களும் இதற்குத் தகுந்த முகாந்திரம் கொடுக்கவேண்டியவராவர். இவர்கள் தருமநிதியை வீண் விரையம் செய்ததால் இவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் வேண்டும். இது இவ்வாறு இருக்க நாம் கிருஸ்துவ மதத்தையும், அம் மடாலயத்தாரையும் குறைகூறுவதற்கு இல்லை.

சுந்தரமும் இரகுநாதனும் பல காரியங்களைப் பற்றிப்பேசிக் கொண்டிருந்தனர். செண்பகா தேவியும் இரகுநாதனின் சேமநலனை விசாரித்தனள். கமலம் ஒரு தட்டில் பழங்களைக் கொண்டுவந்து இரகுநாதனின் முன் வைத்துவிட்டு உள்ளே சென்று விட்டாள். அவன் ஒன்று, இரண்டை எடுத்துச் சாப்பிட்டான். பால் வந்ததும் அருந்தி விட்டு, எல்லோரிடமும் விடைபெற்று வீடு திரும்பினான்.

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்று உலக மேதை வள்ளுவப் பெருந்தகை கூறியது போல நிலையான தரும காரியங்களைச் சாதிக்க வள்ளல் சுந்தரம் முயன்றார். வள்ளல் இராமலிங்கர் விளக்கிற்குத் திரி போன்றும், சுந்தரம் எண்ணெய் போன்றும் இருந்து, ஓர் ஒப்பற்ற தியாக தீபத்தை, அணையா விளக்கை, ஏற்றிவைக்க முடிவு செய்தனர் இருவரும்.

ஒரு நன்னாளில் புத்தூர் கிராம மக்களின் பொதுக்கூட்டம் நடந்தது. வள்ளல் இராமலிங்கர் தலைமை வகித்தார். சுந்தரமும் இரகுநாதனும் இக் கிராமத்தில் எல்லோரும் எல்லாச் செல்வமும் பெற்று எல்லாத் துறைகளிலும் முதன்மையாக விளங்கத் திட்டமிட்டனர். அதனை நிறைவேற்ற பொதுமக்களின் ஒத்துழைப்பையும் வேண்டினர்.

நாட்டில் எல்லோரும் எல்லாச் செல்வமும் பெற்று, ஆனந்தமாக வாழவேண்டுமென்ற காரணத்தினால்தான், நாட்டில் அரசாங்கம் அமைகின்றது. இதனை நிலைநாட்ட அரசாங்கம் தகுந்தமுறையில் அமைக்கப்பட்டு, நிர்வாகம் திறம்பட வேலை செய்யவேண்டும். நம் நாடு கிராமங்களால் ஆகியதால் அதற்குத் தகுந்தாற்போல் அரசாங்கமும் அமையவேண்டும். அப்பொழுதுதான் பெரும்பாலான மக்களின் யோகச்சேமத்தை உடனுக்குடன் கவனித்து ஆவன செய்ய முடியும்.

ஒரு கிராமத்தை எடுத்துக்கொள்வோம். இங்கு 5000 மக்கள் வாழ்கின்றனர். இவர்களின் நலனுக்காக நிர்வாகம் ஏற்படுகின்றது. இக்கிராமம் பத்துத்தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு ஊழியர் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். இந்த ஊழியர்களின்கீழ் இக்கிராம நிர்வாகம் அமைகின்றது. கிராம நலம், கட்டுப்பாடு, அபிவிருத்தி, பாதுகாப்பு முதலியன எல்லாம் இத்தகைய நிர்வாகத்தின்கீழ் வேலை செய்கின்றன. இந்த ஊழியர்கள் தங்கள் சட்ட திட்டங்களை நிறைவேற்ற இதர ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். இதனால் கிராமத்தின் நிர்வாகம் தியாகமும் சேவையும் கொண்டதாய் உருவாகின்றதே அல்லாது வயிற்றுப் பிழைப்பிற்காக வேலை தேடுபவர்களுக்கு அன்னதானச் சத்திரமாகத் தோன்றுவது இல்லை.

பொதுவாக ஒரு நிர்வாகத்தைத் தலைமை தாங்க அங்குள்ள மக்கள் சம்பந்தப்படாத மூன்று

வது மனிதரை நியமித்தால்தான் விருப்பு வெறுப்பு அற்று பொது நலனைக் கவனிக்க முடியு மென்று சொல்லப்படுகின்றது. இது நேர்மை யற்ற வாதம் ஆகும். இது தெளிந்தார்கண் ஐயுற வும் தேரார்கண் தெளிவும் என்ற குற்றமாகும். ஒரு வர், மூன்ருவது மனிதராக இருந்து விட்ட கார ணத்திஞலே அவர் நேர்மையாக நடந்து கொள் வார் என்பது மட்டரகமான மதிப்பாகும். உயர்ந்த குணங்களால், மறந்தும் பிறர்க்குக்கேடு நினைக்கா தியாகிகளால்தான் நிர்வாகம் மேன்மை அடையுமே அல்லாது இத்தகைய தனிப்பட்ட மனிதனால் நடப் பது இல்லை. கடந்தகால ஆங்கில ஆட்சியே இதனை நிரூபிக்கும். மேலும் தனிப்பட்ட மனிதன் தன் விருப்பு வெறுப்பிற்குத் தகுந்தபடி காரியங் களில் ஈடுபடுகின்ருன்.

கிராமத்தில் எந்தப் பகுதியினர் தங்கள் நல் வாழ்விற்காக நிர்வாகத்தை விரும்புகின்ருர்களோ, அவர்கள் தியாகிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். இத ஞல் நிர்வாகம் தியாகிகளின் வளர்ப்புப் பண்ணை யாய் அமைகின்றது. இவர்கள்தான் இக்கிராம நல னுக்கும் சேமத்திற்கும் பொறுப்புள்ளவர்கள். இவர் கள் கடமை தவறின் மக்கள் இவர்கள்மீது நட வடிக்கை எடுக்க முடியும். இத்தகையாளர்கள் அதி காரத்திற்கு வருவது மக்களுக்குச் சேவை செய் யும்பொருட்டு, மக்கள் என்றும் ஆனந்தமாக வாழ்வதைக் கண்டு இன்புறும் பொருட்டு.

இவர்கள் ஆண்டு தோறும் கிராம வரவு செல வுத் திட்டத்தைத் தயாரித்து அதன்படி கிராமக் கட்டுப்பாட்டை வளர்க்கின்றனர். கிராமத்தி லிருந்து வெளியே செல்லும் பொருள்களும், கிரா மத்திற்கு உள்ளே வரும் பொருள்களும் இவர்களின் சட்டதிட்டங்களால்தணிக்கைசெய்யப்படுகின்றன. இதஞல் கிராமத்தில் உள்ளார் யாவரும் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் பெற்று இந்நாட்டு மன்னர்களாய்த் திகழ வழி

வகைகள் செய்யப்படுகின்றன. நாணய செலாவணி முறை, மக்களின் முன்னேற்றத்தையும் ஆக்கத்தையும் முதன்மையாகக்கொண்டு இயங்குகின்றது.

ஆங்கில ஏகாதிபத்தியம் ஜில்லாவை ஓர் அளவையாகக்கொண்டு இந்த நாட்டில் அடிமை ஆட்சியைநிலைநாட்டி வந்தது. இந்த நிலை மாறவேண்டும். தனிப்பட்டவரின் உரிமை எல்லா வகையிலும் பாதுகாக்கப்படவேண்டும். அவனுக்கு அல்லது அவளுக்குப் பொருளாதார, கலாசார, அரசியல் துறையில் சம உரிமையும் சந்தர்ப்பமும் கிடைக்கவேண்டும். இதனை நிலை நாட்டவே அரசியல் நிர்ணய சட்டமும் அமைந்திருக்கிறது. உண்மையான சுதந்திர இந்தியக்குடி அரசு ஏற்படவேண்டுமானால் கிராமங்கள் தோறும் கிராம சர்க்கார் உயர்ந்த முறையில் அமையவேண்டும்.

கிராமத்தை நிர்வகிக்க கிராம சபையும், தாலுகாவிற்குத் தாலுகா சபையும், ஜில்லாவிற்கு ஜில்லா சபையும், ராஜ்யத்திற்கு ராஜ்ய சபையும், அகில இந்தியாவிற்குப் பாராளுமன்றமும் அமையவேண்டும். இவைகளின் உரிமை பரிணாமத்தில்தான் வேற்றுமை இருக்கவேண்டுமே அல்லாது கொள்கையில் வேற்றுமை இருக்கக் கூடாது அகில இந்திய கொள்கையில் ஜனாதிபதிக்கு என்ன உரிமை இருக்கின்றதோ, அதே உரிமை கிராமம் சம்பந்தப்பட்ட மட்டில் அக்கிராம சர்க்காரின் கீழ் இருக்க வேண்டும்.

ராஜ்ய சர்க்காரும், மத்திய சர்க்காரும் சேர்ந்து கிராம சபை, தாலுகா சபை, ஜில்லா சபை இவற்றின் அதிகாரங்களைக்கைப்பற்றி அவற்றைநிர்வகிக்க அதிகாரிகளை நியமிப்பது என்றால் நாட்டில் உண்மையான சுதந்திரக் குடிஅரசு ஏற்படுவதற்குப் பதில் அடிமை ஆட்சியும், சர்வாதிகாரமும் புதிய ரூபத்தில் ஒரு சில கட்சித் தலைவர்களின் கீழ் இருந்து வருகிறது என்று நிட்சயமாகக் கூறலாம். இத்த

கைய கொள்கை உள்ள நாட்டில் வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டு உரிமை என்று கூறுவது, பாலைவனத்தைச் சோலை வனமாகக் கூறுவது போலாகும்.

புத்தூர் கிராம மக்கள் எல்லோரும் ஒன்று கூடித் தங்களது பொது நலனைக் கருதும் உண்மைத் தியாகிகளைத் தேர்ந்தெடுத்தனர். வள்ளல் இராமலிங்கம் கிராம சபைத்தலைவராகவும் வள்ளல் சுந்தரம் பொதுக்காரியதரிசியாகவும், அறிஞர் சடகோபன் கணக்கதிகாரியாகவும், வழக்கறிஞர் ஞானதேசிகன் நீதிபதியாகவும், அஞ்சா நெஞ்சு படைத்த வீராசாமி காவல்படைத் தலைவராகவும், இரகுநாதன் தணிக்கை அதிகாரியாகவும், சுவாமி சத்தியானந்த முனிவர் சர்வகலாசாலைத் தலைவராகவும், கமலம் பெண்கள் நலன் பாதுகாவலராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கிராம நிர்வாக ஊழியர்கள் எல்லாம் கிராம சபையே தேர்ந்தெடுப்பதால், ஊழியர்கள் அறிவும் ஆற்றலும் உடையவர்களாய், அக்கிராம மக்களின் பணியே தம் கடன் என்று, உள் அன்புடன், தியாகத்தன்மையுடன், இயற்கை சுபாவத்துடன் தொண்டாற்றுகின்றனர். பரீட்சைகள் நடத்தி, உயர்ந்த பட்டம் பெற்றவர்களுக்கு நிர்வாகம் ஏற்படவில்லை. இத்தகைய முறை நாட்டின் பொது நலனுக்கு உகந்தது இல்லை. அரசாங்க நிர்வாகம் எல்லாம் தியாகிகளும், அருளாளர்களும் கைப்பற்றவேண்டும்.

நாட்டின் நிர்வாகம் தியாகமும் அன்பும் நிறைந்த அருளாளர்களிடம் இருந்தால்தான் மக்கள் நன்மை அடைவர். இந்த உண்மையைக் கடந்த நூற்றைம்பது ஆண்டுகளாக ஆண்டுவந்த அன்னிய ஆட்சியின் நிர்வாகத்திலிருந்து நன்கு உணரலாம். நிர்வாகத்திற்கு சம்பந்தம் இல்லா பட்டமும், பரீட்சையில் தேர்ச்சியும் பெற்றவர்களிடம் பொது மக்களின் நலனைக் கவனிக்க

விடுவதால் நிர்வாகம் சீர்குலைந்து விடுவதுடன் ஒரு உணர்ச்சியற்ற இயந்திரமாக அது மாறிவிடுகின்றது. இதனால் நாட்டின் நலம் குந்தகப்படுகின்றது. நாட்டின் பணம் விரையமாகின்றது.

புத்தூர் கிராம மக்களின் மொத்த எண்ணிக்கை 3525 ஆகும். நிர்வாக சௌகரியத்திற்காக இத் தாய்க்கிராமத்துடன் மேலும் ஆறு கிராமங்கள் தொடர்ந்து ஒரு பகுதியாக இணைக்கப்பட்டன. இப்பொழுது மொத்தம் மக்கள் எண்ணிக்கை இருபத்தையாயிரத்திற்குமேல் இருக்கின்றது. இவர்களின் நல்வாழ்விற்காக கிராம சபை உழைக்க வேண்டும், குடும்பத்திற்குத் தாய் தந்தையர் போன்று. இதற்காகவேதான் சபைத்தலைவரும், அங்கத்தினர்களும், நிர்வாக ஊழியர்களும், கிராம தேவதை முன்பு பிரமாணம் எடுத்துக்கொள்கின்றனர் :

"தேவி, பராசக்தி, இக்கிராமம் உன் புண்ணிய பூமி. உனது ஊழியனாக இக் கிராமத்தின் நலனே பெரிதெனக் கொண்டு, மனம், வாக்கு, காயம், இவற்றால் என்றும் உண்மையாயும், நேர்மையாயும், விருப்பு வெறுப்பு அற்று உழைக்கச் சித்தமாய் இருக்கின்றேன். என் கடன் பணி செய்து கிடப்பதே அல்லாது மறந்தும் பிறருக்குக் கேடு நினைக்காதவனாய் இருப்பேன். என் புத்தி பூர்வமான நல் எண்ணங்களை நாட்டின் நலனுக்கும் மேன்மைக்கும் நல்வழிப்படுத்த அருள்வாயாக. இதுவே என் மனப்பூர்வமான பிரமாணம். தாயே, கிராம தேவியே, உன்னை வணங்குகின்றேன்."

இதனால் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் தியாக உணர்ச்சி ஏற்படுகின்றது. பொன்னுக்கும், பொருளுக்கும், பூமிக்கும், பதவிக்கும், புகழுக்கும் மோகம் கொண்டு வருகின்றவர்களுக்கு அரசாங்கத்தில் இடம் இல்லை. அரசாங்க ஊழியர்கள் எல்லாம் இந்நாட்டில் எல்லோரும் இன்புற்று வாழ நினைப்பது அல்லாமல் வேறு ஒன்றும் அறியாதவர்களாய்த் திகழ்கின்றனர். இவர்கள் தேவ சம்பத்து உடையவர்களாக இயற்கையிலேயே இருக்கின்றனர்.

வள்ளல்கள் இராமலிங்கரும், சுந்தரமும் தங்கள் உடைமை எல்லாம் புத்தூர் கிராம தேவதைக்குக் காணிக்கையாகக் கொடுத்துவிட்டனர். இதனுல் ஏராளமான சொத்துக்கள் மக்களின் பொதுச் சொத்தாய் மாறிவிட்டது.

மக்களின் விருப்பத்திற்கு இணங்க, புத்தூரில் தமிழ் சர்வகலாசாலே தோற்றி வைக்கப்பட்டது. சாது சத்தியானந்த அடிகளார் இதன் தலேவராக நியமிக்கப்பட்டார். அடிகளாரும் கிராம தேவதை முன்பு தன் பிரதிக்ஞையை எடுத்துக் கொண்டார்.

மூன்று வயது ஆனதும் கிராமத்தில் உள்ள ஆண் பெண் குழந்தைகளேக் குருகுலத்தில் சேர்த்து விடவேண்டும். இவர்களுக்கு இலவசமாக உணவு, உடை, இடம், கல்விக்கு வேண்டிய செலவுகள் எல்லாம் கிடைக்கின்றன. கிராம சர்க்கார் இதன் செலவை ஏற்றுக்கொள்கின்றது. அங்கயீனர் களுக்கும் வேலே செய்ய முடியாதவர்களுக்கும் கிராம சர்க்காரின் இலவச விடுதி சேவை செய் கின்றது. பிச்சை எடுப்பதும் சோம்பேறியாய்த் திரிவதும் சட்ட பூர்வமாகத் தடை செய்யப் பட்டன.

தமிழ் சர்வகலாசாலேயில் எல்லாக் கலேகளும் தெய்வத் தமிழ் மொழியின் மூலம் போதிக்கப்படு கின்றன. உலகில் உள்ள மொழிகளே எழுதப் படிக்கவும், வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின் றன. இக்கிராம சர்வகலாசாலே உலகத்தின் கோயிலாக விளங்கிக் கொண்டிருக்கின்றது என்று சொல்லலாம்.

கிராம வைத்தியசாலேயில் நோயாளியின் உடல் கூறு, நோய் நிலே, மருந்து, இவற்றை நன்கு உணர்ந்து விஞ்ஞான முறையில் நோயாளிகளுக்கு இலவசமாகச் சிகிட்சை செய்யப்படுகிறது. விஞ்ஞான முறையில் மூலிகைகளிலிருந்தும், தாவரங்களிலிருந்தும், தாதுப் பொருள்களிலிருந் தும், மருந்து தயாரிக்கப்படுகின்றது. வைத்திய

சாலையில் நவீன விஞ்ஞான சாதனங்கள் எல்லாம் இருக்கின்றன. உலகில் உள்ள மருத்துவ ஆராய்ச்சிகளின் முதன்மையானவைகளே இங்கு அங்கீகரிக்கப்படுகின்றன. தீராத நோயெல்லாம் இங்கு தீர்க்கப்படுகின்றது.

கிராமத்தில் அணுசக்தி நிலையம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இதன் மூலம் விவசாயம், தொழில், மின்சாரம் எல்லாம் உயர்ந்த பண்பட்ட நிலையில் நடக்கின்றன. பண்டங்களைக் குறைந்த செலவில் உற்பத்தி செய்யவும் முடிகின்றது.

கிராமத்தின் குளக்கரையை உயர்த்தி கல் அணைகள் கட்டி பன்னிரண்டு மாதங்களும் தண்ணீர் குளத்தில் இருக்கும்படி செய்திருக்கிறது. மேலே மலையிலிருந்துவரும் ஓடைகளின் இரு புறங்களிலும் கரை அமைத்து அவற்றின் தண்ணீர் குளத்தில் வந்து விழும்படி செய்திருக்கிறது.

கிராமத்தில் ஆயிரம் பசுக்கள் அடங்கிய பசுப் பண்ணையும், பதினாயிரம் ஆடுகள் கொண்ட ஆட்டுக்கிடையும் இருக்கின்றன. கிராமத்தைச் சுற்றி காடுகள் வளர்க்கப்பட்டிருக்கின்றன. ஆடுமாடுகள் மேய்வதற்காக புல்காடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

கிராமத்தில் வீடுகள் விஞ்ஞான, சுகாதார முறைப்படி கட்டப்பட்டிருக்கின்றன. தெருக்கள் உயர்ந்த முறையில் அமைந்திருக்கின்றன. மின்சார வசதியும், குழாய்த் தண்ணீர் வசதியும் இல்லாத கட்டிடமே இல்லை.

கிராமத்தில் நந்தவனம் நவீன சாதனங்களுடன் அமைந்திருக்கின்றது. வானொலி நிலையம், வாசகசாலை, திறந்த வெளிப் படக்காட்சி அங்கு அமைக்கப் பட்டிருக்கின்றன. அதனை அடுத்து விளையாட்டு மைதானமும் இருக்கின்றது.

கிராமத்தின் அமைதியை நிலைநாட்ட நீதி மன்றமும், காவல் படையும், துப்பறியும் இலாகாவும்

திறம்பட வேலை செய்கின்றன. இவைகள் நீதிபதியின் தலைமையில் இயங்குகின்றன. நாட்டில் அமைதியையும் ஒற்றுமையையும் நிலைநாட்ட வேண்டியது இம் மூன்று இலாகாக்களின் வேலையாகும். இதனால் தனிப்பட்ட மனிதன் நீதிக்கும் நேர்மைக்கும் நீதிமன்றத்தைத் தேடி அலைய வேண்டியது இல்லை; பொருள் செலவும் இல்லை. கிராம சர்க்காரே நிழல்போன்று தொடர்ந்து சென்று குற்றங்களும் வழக்குகளும் ஏற்படாதபடி காக்கின்றது. "அறத்திற்கும் மறத்திற்கும் அன்பே துணை" என்றபடி நாட்டில் அமைதியை நிலைநாட்ட சட்டங்கள் இயற்றி மக்களிடம் உயர்ந்த பண்பட்ட நிலையை உண்டாக்குகின்றது. இதனால் குற்றங்களையும் வழக்குகளையும் பதிவு செய்து தண்டிப்பதற்குப் பதில், அவை நடவாதபடி முன் ஏற்பாட்டுடன் நீதிமன்றம் அமைந்திருக்கின்றது.

கிராமத்தில் விவசாயம் நவீன விஞ்ஞான முறையில் நடக்கின்றது. விளைபொருள்கள் எல்லாம் கிராம பண்டக சாலைக்கே கொண்டுவரப்பட்டுத் தரம் பிரித்துப் பின் விலை விதிக்கப்பட்டு, விநியோகிக்கப்படுகின்றன.

கிராம பாங்கு கிராம நாணய செலாவணியைக் கட்டுப்படுத்துவதுடன், கிராமத்திற்கு உள்ளும், வெளியிலும் ஏற்படும் பண்டமாற்று, வருமானம், செலவு இவற்றைத் தணிக்கை செய்து கிராமத்தின் நலனை நிலை நாட்டுகின்றது.

## 10

இரகுநாதனுக்கும் கமலத்திற்கும், கோமதிக்கும் சந்திரசேகரனுக்கும் திருமண ஏற்பாடுகள் வெகு கோலாகலமாக நடந்து கொண்டிருந்தன. ஓர் சுபதினத்தில் திருமணம் வெகு சிறப்பாக நடந்தேறியது. நாட்டில் உள்ள தியாகிகளும், அறிஞர்களும் இவ்விழாவில் கலந்து தம்பதிகளை வாழ்த்திச் சென்றனர்.

கமலத்தின் திருமணத்தைப் பற்றி அறிந்த மருத்துவர் விக்டர் எல்லையற்ற துக்கத்தில் ஆழ்ந்தான். தனது காதல் பிரயாணம் அடிவானத்தை நாடி அலைந்தது போன்று ஆயிற்றே என்று ஏங்கினுன். இதை நினைக்க நினைக்க அவனது தலை சுழல ஆரம்பித்துவிட்டது. துரிதமாக ஓடிக்கொண்டிருக்கும் வண்டியின் சக்கரம் திடீரென்று உடைந்து விட்டால் எவ்வாறு இருக்குமோ அவ்வாறு இருந்தது அவனது நிலை. எங்கும் சூனியமாகவே தோன்றிற்று அவனுக்கு. வாழ்க்கையில் வெறுப்புற்றுத் தற்கொலை செய்வதற்குக்கூட எண்ணம் ஏற்பட்டது. கடந்த கால நிகழ்ச்சிகள் அவனது இதயத்தைக் கொல் உலையில் அடிபடும் சம்மட்டி போன்று தாக்கிக் கொண்டிருந்தன. அவனது மனக்கோட்டை எல்லாம் இடிந்து பாழாய்விட்டது.

விக்டரின் சோக நிலையைக்கண்ட அவனது உறவினர்களும் நண்பர்களும் பெரிதும் வருந்தினர். அவனிடம் எவ்வளவோ ஆறுதல் கூறியும் அவை எல்லாம் விழலுக்கு இறைத்த நீர் போன்று ஆயிற்று. அவனது கவலையைப் போக்கச் சுகவாச தலங்களுக்கு அழைத்துச் செல்ல விரும்பினர்.

கோடை காலத்தில் தங்குவதற்கு ஆரோக்கிய தலம் திருக்குற்றாலம் ஆகும். இது நெல்லை மாவட்டத்தில் தென்காசியிலிருந்து ஒரு மைலுக்கு அப்பால் மேலை மலையின் அடிவாரத்தில் இருக்கின்றது. இங்கு வைகாசி பிற்பகுதியிலிருந்து சாரல் மழை பெய்ய ஆரம்பித்துவிடும். ஆயிரக்கணக்கான மக்கள் சுகத்தை விரும்பி இந்த இடத்திற்கு வருவர். தாமிரபரணி ஆற்றின் முக்கிய உபநதியாகிய சிற்ருறு இத்தலத்தில்தான் மலையில் வெகுதூரம் ஓடி வந்து உயர்ந்த பாறையிலிருந்து அருவியாக கீழே விழுந்து ஓடுகின்றது.

இந் நீர்வீழ்ச்சியில் குளிப்பதால் தேக ஆரோக்கியம் பன்மடங்கு அதிகப்படுகின்றது. அத்துடன் மலைகளில் அடர்த்தியாக உயர்ந்த மூலிகைகள்

வளர்ந்திருப்பதால் அங்கு வீசும் காற்றும்நோயாளி களுக்கு ஓர் சாவா மருந்தாக இருக்கின்றது. மலை மீது மேகக்கூட்டங்கள் எப்பொழுதும் படிந்து கொண்டே இருப்பதால் குளிர்ந்த காற்றும் சாரல் மழையும் இருந்துகொண்டே இருப்பதுடன் எல்லையற்ற இன்பத்தையும் உண்டுபண்ணி விடுகின்றன. எண்ணெய் தேய்த்து அருவியில் எத்தனையோ தடவை குளிக்கின்றனர். நீர்வீழ்ச்சியின் வேகத்தால் உடம்பில் உள்ள எண்ணெய் அழுக்கு எல்லாம் அகற்றப்பட்டு சுத்தத்தை உண்டாக்குவதுடன் உடலுக்கு நன்மையும் ஏற்படுகின்றது. தேக ஆரோக்கியத்திற்குச் சிறந்த இடம் பாரத நாட்டிலே, உலகத்திலேயே, இத்தலம் போன்று வேறு இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேலென்று வானுர உயர்ந்த மரங்களும், அவற்றில் ஆயிரக்கணக்கான மந்திகள் உட்கார்ந்து இருப்பதும், இங்கும் அங்குமாகத் தாவிக்குதிப்பதும், படிகம் போன்ற ஆற்று நீரில் ஆயிரக்கணக்கான மீன்கள் ஓடும் தண்ணீரை எதிர்த்துக்கூட்டம் கூட்டமாக நீந்திக் கொண்டிருப்பதும் மனதிற்குக் களிப்பை ஊட்டும். இயற்கைக் காட்சி நிறைந்த இத்தலத்தில் இறை இன்பத்தை அனுபவிக்க ஆலயத்தையும் ஆன்றோர் அமைத்திருக்கின்றனர். இத்தலம் மிக்க பழமையானதும் பாடல்பெற்ற புண்ணிய பதிகளில் முக்கியமானதாயும் இருக்கின்றது.

மருத்துவர் விக்டரும் தன் நண்பர்களுடன் குற்றாலத்திற்கு வந்து ஓர் மாளிகையில் தங்கியிருந்தான். அருவியில் தினந்தோறும் ஆறுநேரங்கள் குளித்து வருவான். இருந்தாலும் கமலத்தைப் பற்றிய ஞாபகம் எப்பொழுதும் இருந்து வந்தது. அவனது மனோவேதனை குறைந்தபாடில்லை.

ஒருநாள் மாலைப்பொழுதில் தனியாக மலைக்கு அருகில் ஒரு பாறையில் உட்கார்ந்து ஓடும் ஆற்று நீரைப் பார்த்துக்கொண்டே இருந்தான். அவனது

உள்ளமும் புதிய எண்ணங்களுடன் அதைத் தொடர்ந்து ஓடிக்கொண்டு இருந்தது. இந்நேரத்தில் ஒரு பெரியவரும் அவரது பெண்ணும் மலை மீது சிறிது தூரம் ஏறிவிட்டு இறங்கிக் கொண்டிருந்தனர். ஒற்றை அடிப்பாதை பல தென்பட்டன. சென்ற வழியிலிருந்து தவறி விட்டனர். பாதை சுற்றிச்சுற்றி வருகின்றதே அல்லாது ஆற்றைக் கடந்து அடிவாரத்தை அடைய முடியவில்லை அவர்களும் நடந்து நடந்து அலுத்துப் போய்விட்டனர். கடைசியில் விக்டர் இருக்கும் இடத்திற்கு அருகில் வந்துவிட்டனர்.

"பத்மா. அதோ பார்த்தாயா, ஒரு இளைஞர் உட்கார்ந்திருப்பதை, அங்கு செல்வோம்" என்றார். அச்சொல்லைக் கேட்டதும் விக்டர் திடுக்கிட்டுச் சப்தம் வந்த திக்கை நோக்கினான். சற்று உயரத்தில் இவர்கள் வருவதைக் கண்ணுற்றான். முதலில் அவனுக்கு அந்தப்பெண் உருவமதான் தென்பட்டது. 'கமலா-வந்து விட்டாயா; என் கமலா வந்து விட்டாயா', என்று மனதில் சொல்லிக்கொண்டே எழுந்தான். உருவத் தோற்றத்தில் கமலமும் அந்தப் பெண்ணும் மாறுபட்டு இருக்கவில்லை. ஆதலால் திடீரென்று கண்ணுற்றதும் இந்தப் பிரேமை அவனுக்கு உண்டானதில் வியப்பில்லை. இதற்குள் அவர்கள் இருவரும் அவன் அருகில் வந்துவிட்டனர். பெரியவர் அவனிடம் "தம்பி, பொழுது போக்கிற்காக மலை மீது ஏறினோம். பாதை தவறிவிட்டது. அடிவாரத்தை அடைய எந்த வழியில் செல்லவேண்டும்," என்றார்.

விக்டருக்கு அந்தப் பெண்ணை நேரில் கண்டதும் எல்லையற்ற அமைதி ஏற்பட்டு விட்டது. அத்துடன் அவனது உதவிக்காக அவர்கள் வந்ததும், அவன் தீம்புனல் வெள்ளம் போன்று புதிய உணர்ச்சி பெற்று உற்சாகத்துடன் தோன்றினான். அவன் அப்பெரியாரிடம் "வாருங்கள், நானும் மலை அடிவாரத்திற்குத்தான் போகப்போகிறேன், போவோம்" என்றான்.

எல்லோரும் குறுக்குப் பாதையில் ஆற்றைக் கடந்து மலை அடிவாரத்திற்கு வந்து விட்டனர். குற்றாலநாதர் கோயிலுக்கு அருகில் வந்ததும் பெரியார் "தம்பி, உங்களுக்கு எனது நன்றி. வாருங்கள் கோயிலுக்குச் சென்று ஆண்டவனைத் தெரிசித்துவிட்டு வருவோம்." என்றார். விக்டர் ஒரு கிருஸ்துவர் என்று அவருக்கு எப்படித்தெரியும். அவரது வார்த்தைகளை உதாசீனப்படுத்த அவனுக்கு விருப்பம் இல்லை. எல்லோரும் ஆற்றில் கால் கைகள் சுத்தம் செய்துவிட்டு கோயிலுக்குள் நுழைந்தனர். பக்தர் ஒருவர் "உற்றாரை யான் வேண்டேன், ஊர் வேண்டேன், பேர் வேண்டேன், கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும், குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தா உன் குரைகழற்கே, கற்றாவின் மனம் போல கசிந்து உருக வேண்டுவனே", என்ற பாடலைப் பண்ணுடன் பாடிக்கொண்டிருந்தார். இந்த தெய்வீகப் பாடல் விக்டரின் உள்ளத்தைக்கவர்ந்து விட்டது.

உள்ளே சென்றதும் விக்டர் ஆண்டவன் சந்நிதானத்தில் தண்டனிட்டு வணங்கி 'கற்றாவின் மனம் போல கசிந்து உருகவேண்டுவனே', என்று சொல்லி ஆண்டவனை நோக்கி மெய்மறந்து நின்றான். ஆண்டவனையும் அம்பிகையையும் தெரிசித்து விட்டு எல்லோரும் வெளியே வந்தனர். பெரியாரும் விக்டரைத் தன் மாளிகைக்கு அழைத்து வந்தார். அவர் தாமரைக்குளம் பண்ணையார் சிவக்கொழுந்து என்று தெரிய வந்தது. அவரது செல்வமகள் தான் பத்மா. சென்னை மருத்துவக் கல்லூரியில் பட்டம் பெற்றிருக்கிறாள். விக்டர் இன்னார் என்று பண்ணையாருக்கும் தெரிந்து விட்டது.

பண்ணையாரின் அன்பிற்கு விக்டர் பாத்திரமானான். அதனால் அவன் அவர்களுடனே தங்க நேரிட்டது. பதினைந்து நாட்களுக்குமேல் குற்றாலத்தில் எல்லோரும் தங்கியிருந்தனர். இந்த நாட்கள் விக்டரின் வாழ்க்கையில் பொன் எழுத்துக்

களால் எழுதவேண்டியவை. அவன் எல்லையற்ற அமைதியையும் ஆனந்தத்தையும் அடைந்து வலியும் வனப்பும் பெற்றான்.

சாரல் காலம் முடிவடைந்ததும் பண்ணையார் தன் மகளுடன் தாமரைக்குளம் போய் விட்டார். விக்டரும் அவரது வேண்டுகோளுக்கு இணங்கி உடன் சென்றான். ஒன்று இரண்டு மாதங்கள் கழிந்தன விக்டர் கிருஸ்துவமதத்திலிருந்து விலகித் தன்னை ஆட்கொண்ட தெய்வமாகிய குற்றால நாதரையே வணங்கி வந்தான். அவனது இயற்கைப் பெயர் வேலாயுதம். அவன் தன் சொந்தமதத்திலே தீவிரப் பற்றுதல் கொண்டான். மருத்துவர் வேலாயுதத்திற்கும், பத்மாவிற்கும் திருமணம் நிட்சயமாகி ஒரு நன்னாளில் வெகுசிறப்பாக நடந்தது. அவனது வாழ்க்கைச் சூரியனும் முன்னிலும் பன்மடங்கு பேரொளியுடன் தோன்ற ஆரம்பித்துவிட்டான். நாட்கள் பல ஆனந்தமாகக் கழிந்தன. பின், அவன் தன் மனைவியுடன் பாளையங்கோட்டை வந்து மருத்துவத் தொழிலில் ஈடுபட்டான். "காணும் வாழ்வில் உன்னையும் மறந்து வாழ வேண்டுமடா, ஏழையாகி, எளியவனாகி, எளியவர்க்கு எளியனாகி," என்ற கவிமணியின் தெய்வீகப் பாடலுக்கு இலக்காக எல்லோருக்கும் இலவச வைத்திய உதவி செய்து வந்தான். அவனது உள்ளத்தில் "குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தா உன் குரை கழற்கே கற்றாவின் மனம் போல கசிந்து உருக வேண்டுவனே" என்ற அமர கீதம் தொடர்ந்து ஒலித்துக்கொண்டே இருந்தது.

கன்னி பூமியில் 'எல்லோரும் எல்லாச் செல்வமும் பெற்று உடையானும் இல்லை, இல்லானும் இல்லை'! என்ற கிராம சமுதாயத்தை நிலைநாட்ட தியாகிகளும், ஞானிகளும் உழைக்கின்றனர். தமிழ் எழுத்தாளர்கள் அவர்களுககுப் பக்க பலமாக இருந்துவருகின்றனர். மக்கள் உள் அன்புடன் ஆதரவு அளிக்கின்றனர். வாழ்க, வளர்க, வளம்பெருக, கன்னிபூமி, மக்கள் சமுதாயம்.

முற்றும்

காரை

எமது அடுத்த வெளியீடு

# பொதிகை மன்றம்

(கற்பனைச் சித்திரம்)

[சில காட்சிகள் வாசகர்களுக்கு

கல்யாணி: "என் அத்தான் (கந்தன்) எங்களுக்குத் துரோகம் செய்யவில்லை. என் மாமாவும் அத்தையும் தான் எங்களை வெறுத்தனர். அத்தைக்குப் பணக்கார வீட்டுப் பெண் என்றால் போதும்".

வள்ளல்: "தியாகு ஓர் அரசியல் வாதி. குணத்திற்கும் தியாகத்திற்கும் தான் பணியக்கூடியவர். ஏழை பணக்காரர் என்ற வேற்றுமை இல்லை. உயர்ந்த குணங்களை உடைய பெண் கிடைத்தால் போதும். அதில் கல்யாணிக்குத் தான் முதல் பரிசு கிடைக்கும்".

கந்தன் (எம். ஏ.): "அம்மா, அந்தப் பெண் (சிதை) மிகவும் புத்திசாலி. இந்தக் காலத்துப் போலி நாகரீக மங்கை போன்று இருப்பாள் என்று எண்ணினேன். உயர்ந்த பட்டம் பெற்றவள், செல்வம் நிறைந்தவள், கையில் சிலப்பதிகாரம் இருப்பதைக் கண்டேன். இருந்தாலும் நம் கல்யாணியை நினைக்காமல் இருக்க முடியவில்லை."

பொதிகை மன்றம்: உலக மொழிகளுக்கு எல்லாம் ஓர் ஆராய்ச்சி மன்றம். எல்லாக் கலைகளும், தெய்வத் தமிழில் தோன்றுகின்றன. கோயில் நிர்வாகம், அறநிலையம், செய்தித்துறை, புத்தக நிலையம் முதலியன இம்மன்றத்தின் கீழ் வேலை செய்து வருகின்றன.

அடுத்து வெளிவரும் நூல்

## "அமர வாழ்க்கை"

சித்தர்களும் ஞானிகளும் தோற்றிவைத்த பண்பாட்டைச் சித்தரிப்பது,

தமிழ் அன்பர்கள் ஆதரிப்பார்களாக:

---

அகில உலகத் தமிழ் எழுத்தாளர் மன்றம்,

15, பிள்ளையார் கோயில் தெரு,

தென் தேனாம்பேட்டை, சென்னை—18.